REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன் THINAKARAN

2022 ஒக்டோபர் 25 செவ்வாய்க்கிழமை

1932 - 2022

வரு. 90 இல. 252 | Tuesday 25, October, 2022 | 20 பக்கங்கள் | 40/-




**ஜனாதிபதியுடன் தமிழ் எம்பிக்கள் பலர் பல தடவைகள் நடத்திய பேச்சுக்களின் பலனாக**

# எட்டு தமிழ் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு

## ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் மன்னிப்பளித்து விடுதலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**விடுதலை தொடர்பான ஒப்புதல் அறிக்கை குறித்து நீதியமைச்சர் மற்றும் அவர் மூலமாக சட்ட மா அதிபர் ஆகியோரின் கருத்து பெறப்பட்டதன் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது**

நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்துள்ள எட்டு தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பல தடவைகள் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பயனாக மேற்படி தமிழ் கைதிகள் எட்டுப் பேரும் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 34 ஆவது சரத்திற்கு இணங்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின்படி இலங்கை நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சிறையிலுள்ள 08 தமிழ் கைதிகளுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடன் பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல தடவைகள் நடத்திய கலந்துரையாடல்களின் பலனாக இந்த கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு

06

# முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா இரட்டிப்பு



**05 லீற்றரிலிருந்து 10 லீற்றராக அதிகரிக்க ஜனாதிபதி பணிப்பு**

தொழில்முறை பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகளுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை (கோட்டாவை) 05 லீற்றரில் இருந்து 10 லீற்றராக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் தொழில்சார்ந்த முச்சக்கரவண்டிகளை பதிவு செய்யும் பணிகள் நவம்பர் 1ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் தொழில்சார்ந்த முச்சக்கர வண்டி சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று (24) நடந்த கலந்துரையாடலின் போதே இந்த விடயங்கள் வெளியிடப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிகளுக்கும் வாரத்திற்கு 10 லீற்றர் எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் இயங்கும் பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டிகளை பதிவு செய்யும் நடவடிக்கை நவம்பர் 6 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் அந்த முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டாவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

06

**சீரற்ற காலநிலை மேலும் சில தினங்கள் தொடரும்**

# ஐந்து மாவட்டங்களுக்கான மண் சரிவு அபாயம் நீடிப்பு



## இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பாக செயற்படவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மேலும் ஓரிரு தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி இடம்பெறலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் காலங்களில் தற்காலிகமாக கடும் காற்றும் மின்னல் தாக்கமும் ஏற்படக்கூடும் என்றும் தெரிவித்துள்ள அந்த திணைக்களம் மக்கள் அத்தகைய இயற்கை அனர்த்தங்களிலிருந்து

06



புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலயம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த தீபாவளி பண்டிகை விசேஷ பூஜை நேற்றுக்காலை நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, செயலாளர் சோமரட்ண பத்திரன, சிவஸ்ரீ பாபுசர்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# லிற்றோ Gas விலை அடுத்த மாதம் மேலும் குறையலாம்

## அந்நிறுவன வட்டாரங்கள் எதிர்வு கூறல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



லிற்றோ கேஸ் நிறுவனம் சமையல் எரிவாயுவின் விலைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் மேலும் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் வீ. கோணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைவடைவதற்கிணங்க நாட்டில் சமையல் எரிவாயு

06

**நீதிமன்ற தீர்மானங்கள் மூலம் மட்டுமே**

# இரட்டைக் குடியுரிமை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தீர்மானம்

## 22 திருத்தத்தின் கீழ் எம்.பிமார் சிலருக்கு சிக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரட்டைக் குடியுரிமை தொடர்பான முடிவுகளை நீதிமன்றத் தீர்மானங்கள் மூலம் மட்டுமே எடுக்க முடியும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. புதிதாக நிறைவேற்றப்பட்ட

06

# டுபாய்க்கு தொழிலுக்குச் சென்ற ஐம்பது பெண்கள் சிக்கித்தவிப்பு

## அந்நாட்டு தூதரகம் இலங்கைக்கு தெரிவிப்பு



டுபாய்க்கு வேலைக்காகச் சென்ற 80 இலங்கைப் பெண்கள் அங்கு சிக்கித் தவிப்பதாக அந்நாட்டுத் தூதரகம் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பணியகத்துக்குத் தெரிவித்துள்ளது.

இவர்கள் பல்வேறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக டுபாய்க்கு வேலைக்காகச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

06

# சூதாட்ட, பந்தய நிலைய வரிகள் திடீர் அதிகரிப்பு

## கசினோக்களுக்கு 50 கோடி ரூபா வரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையில் கசினோ நிலையங்களுக்கான வருடாந்த வரி 20 கோடி ரூபாவிலிருந்து 50 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இவ்வரி அதிகரிப்பு அமுலுக்கு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

06



புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்களின் பிள்ளைகளுக்கு நேற்று பரிசில்கள் வழங்கப்பட்டன. இதில் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# இலங்கையில் இன்று சூரிய கிரகணம்



## யாழ், கொழும்பு மக்களுக்கு பார்வையிடும் வாய்ப்பு

இலங்கையில் இன்றைய தினம் (25) பகுதியளவு சூரிய கிரகணத்தை காணக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் நட்சத்திரம் மற்றும் வானியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் நேரங்களில் சில பிரதேசங்களில் பகுதியளவான சூரிய கிரகணம் தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய கிரகணம்

மாலை 5.27 மணி முதல் யாழ்ப்பாணத்தில் 22 நிமிடங்களுக்கும், கொழும்பில் 5.43 மணி முதல் 9 நிமிடங்களுக்கும் பகுதியளவு சூரிய கிரகணம் தெரியும் எனவும், ஆனால்

06

# பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை!



கோதுமை மாவின் விலை குறைவுடன் ஒப்பிடும்போது இந்த வாரத்தில் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.கோதுமை மாவின் விலை வீழ்ச்சியின் பலனை எவ்வாறாவது மக்களுக்கு வழங்குவதற்கு அமைச்சு செயற்பட்டு வருவதாக சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

06

# சங்கிலியை திருடியவர் துவக்குச் சூட்டில் பலி

## நீர்கொழும்பு பகுதியில் சம்பவம்



பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முயன்ற 22 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்களை நோக்கிச் சுட முற்பட்டபோதே அவர் சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நீர்கொழும்பை அண்டிய அம்பலம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

# குழந்தைகளை தாக்கும் தொற்று நோய்கள்

## Dr. தீபால் பெரேரா எச்சரிக்கை



மழையுடன் கூடிய காலநிலையால் சிறுவர்களுக்கு தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சிறுவர் வைத்திய நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வயிற்றுப்போக்கு போன்றவை அதிகமாக பரவி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

**நாட்டிலுள்ள 09 மாவட்டங்களில்**

# டெங்கு பரவும் அபாயம் அதிகமென எச்சரிக்கை



நாட்டின் 09 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, புத்தளம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு காய்ச்சல் வேகமாக பரவக்கூடும் என்பதால், நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருக்க வேண்டாம் என மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# இங்கிலாந்தின் புதிய பிரதமராக ரிஷி சுனக்

## முன்னாள் நிதியமைச்சரான இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்



இங்கிலாந்தின் புதிய பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் நிதியமைச்சராக பதவி வகித்துள்ள ரிஷி சுனக்குக்கு எதிராக போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட பென்னி மொர்டவுன்ட்டுக்கு நூறு நாடாளுமன்ற உறுப்பினர்களின்

06

**ஐஸ் போதைப்பொருளுடன்**

# அட்டாளைச்சேனையில் 73 வயதான நபர் கைது



ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து ஞாயிற்றுக்கிழமை (23) மாலை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை

06

# 2048 இல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு இளைஞர்களின் முழுமையான பங்களிப்பு பெறப்படும் - ஜனாதிபதி

2048ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே தமது இலக்காகும் எனவும், அதற்கு பங்களிப்பதற்கான சந்தர்ப்பம் இந்நாட்டு இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

“2048 இல் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றும் பயணத்தில் இளைஞர்களுக்கான மேடை ” எனும் தலைப்பில் இளைஞர்களுடன் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கடந்த (22ஆம் திகதி) இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன் போது இளைஞர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அளித்த பதில்களும் கீழே தரப்படுகின்றன.

**கேள்வி: ஜனாதிபதி அவர்களே, இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல, நாட்டின் இளைஞர்களுக்கு நாம் வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று நீங்கள் எப்போதும் கூறுகின்றீர்கள். 1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் இளம் தலைவராக முன்வருவதற்கு உங்களுக்கு வாய்ப்பளித்தார். 2048இல் இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவது உங்கள் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கான இளைஞர்களை தயார்படுத்தும் பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதா?**

**பதில்:** முதலாவதாக, நமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம். நான் நாட்டை பொறுப்பேற்ற போது நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த நிலையில் இருந்து மீள முடியாவிட்டால் எமக்கு எதிர்காலம் கிடையாது.

நாட்டில் ஏற்பட்ட போராட்டங்களுக்கு மத்தியில் நான் இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்று வங்குரோத்து பொருளாதாரத்திற்கு பதிலாக அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தை பெறுவதற்கான செயற்பாடுகளை முதலில் திட்டமிட்டேன். அதில் பங்களிப்புச் செய்வதற்கு நம்நாட்டு இளைஞர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

அதற்காக ஒவ்வொரு பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவிலும் ஐந்து இளைஞர்களை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளேன். கண்காணிப்புக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் தெரிவு இன்னும் நிறைவடையவில்லை.மேலும் இளைஞர் பாராளுமன்றத்தை சட்டபூர்வமாக்க எதிர்பார்க்கிறோம். உத்தேச மக்கள் சபையின் மூலம் புதிய இளைஞர்கள்களுக்கு முன்னோக்கி வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும், போராட்டத்தில் ஈடுபட்ட, வன்முறையில் ஈடுபடாத குழுக்களையும் இதில் பங்கேற்க அழைத்துள்ளோம். இந்த நடவடிக்கை நமக்கு தேவையான புதிய தலைமையை உருவாக்கும் என்று நம்புகிறேன். அதற்கான பாதையை இப்போது தயார் செய்து வருகிறோம் .

**கேள்வி: இந்நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் தலைமுறையினர் பங்களிப்பதற்கு ஏதேனும் விசேட நடைமுறை திட்டம் உள்ளதா ?**



**பதில்:** நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய, இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கும் வரை ஏன் காத்திருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அழைப்பிற்காக காத்திருக்காமல் அந்த வாய்ப்புகளை எடுத்துக்கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டும்.

**கேள்வி: இன்று நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜே.ஆர். ஜெயவர்தனவும் எதிர்கொண்டார். அவரிடமிருந்து அன்று நீங்கள் பெற்ற படிப்பினைகளின் ஊடாக இலங்கையின் எதிர்காலம் பற்றி நீங்கள் எவ்வாறு சிந்திக்கிறீர்கள். அவருடைய பாதையைப் பின்பற்றி வெளியுறவுக் கொள்கையைத் தொடர்வீர்களா?**

**பதில்:** சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சவால்களில் இருந்து யாரும் தப்ப முடியாது. இந்த நூற்றாண்டில் நமது நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால், போருக்குப் பின்னரான நவீனமயமாக்கலுடன் நாம் எவ்வாறு முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதுதான். அன்று நாம் அதற்குத் தயாராக இல்லை. போருக்குப் பிறகும் நாங்கள் அதே பழைய எண்ணங்களுடனும் விருப்பங்களுடனும் இருந்தோம். அந்த உலகம் இப்போது முற்றிலும் உருமாறிவிட்டது. ஏனென்றால் கடன் சுமையுடன் முன்னோக்கிச் செல்ல முடியாது.

இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் கனவு உலகில் இருந்தோம். அந்தக் கனவு உலகத்திலிருந்து வெளிவர வேண்டும். ஜே.ஆர் ஜெயவர்தன 1977 இல் ஆட்சிக்கு வந்து, திறந்த பொருளாதாரத்தை ஆரம்பித்தார்.

சீனா திறந்த பொருளாதாரத்துடன் முன்னேறியது. இந்தியா இப்போது அந்த வளர்ச்சியை நெருங்கி வருகிறது. வியட்நாம் போருக்குப் பிறகு அழிந்த நாடு. ஆனால் அவை இன்று மேம்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டு எமது நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்தது. 2019 இலும் இந்த நவீனமயமாக்கலுக்கு மக்கள் தயாராக இல்லை. 2019ல் முன்னெடுத்த வரிக் கொள்கைகளால், நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இப்போது இந்த நாட்டின் இளைஞர்கள் அதன் பாதிப்பை அனுபவித்து வருகின்றனர். எங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று சில இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

மற்றொரு குழு எதிர்காலத்தை உருவாக்க காத்திருக்கிறது. அந்த சவாலை நாம் ஏற்க வேண்டும். ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் ஏனைய தலைவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

**கேள்வி: ஜனாதிபதி அவர்களே, உணவுப் பாதுகாப்பு குறித்த அரசாங்கத்தின் வேலைத்திட்டம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான விவசாயக் கொள்கை என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகின்றோம்.**

**பதில்:** உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை நாங்கள் ஏற்கனவே தொடங்கியுள்ளோம். மேலும் விவசாயத்துக்குத் தேவையான உரம் வழங்கும் திட்டமும் நடைபெற்று வருகிறது. தற்போது உரம் பெறத் தேவையான டொலர்கள் கிடைத்துள்ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நாடுகளில் இருந்து பணம் பெற்றுள்ளதால், தற்போது உரத்தை வாங்க முடியும்.

விவசாயத்திற்குத் தேவையான எரிபொருளையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் நவம்பர் 15ஆம் திகதிக்குப் பிறகு அடுத்த கட்டத்துக்குத் தேவையான அளவு உரம் நாட்டுக்கு கிடைக்கும். அடுத்த ஆண்டு முதல் மூன்று அல்லது நான்கு மாதங்களில் முழுமையான உணவு உற்பத்தியைத் தொடங்குவது எங்கள் திட்டமாகும்.

தற்போது நெல் உற்பத்தியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சோளம் உள்ளிட்ட ஏனைய பயிர்ச் செய்கைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**கேள்வி: வெளிநாட்டுக் கடன்களுக்குப் பதிலாக வெளிநாட்டு முதலீடுகளில் கவனம் செலுத்துவதாகக் கூறியுள்ளீர்கள். வெளிநாட்டு முதலீடுகள் குறித்த உங்கள் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பதையும், அதற்கு இளைஞர்களின் பங்களிப்பைப் பெறுவதற்கான முன்மொழிவுகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறோம்?**

**பதில்:** இன்று அனைத்து நாடுகளும் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுத்தான் வளர்ச்சி அடைந்துள்ளன, கடன் வாங்குவதன் மூலம் அல்ல. அந்நிய முதலீட்டால் சீனா முன்னேமடைந்தது. அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியா தாமதமாக செயற்பட்டதால் இந்தியாவை விட சீனா துரிதமாக முன்னேறியுள்ளது. வியட்நாமும் வெளிநாட்டு முதலீடுகளால் முன்னேறிய நாடு. அந்நிய முதலீடு இல்லாமல் ஒரு நாடு முன்னேற முடியாது.

யுத்தத்தின் பின்னர் வெளிநாட்டுக் கடன்களை பெற்று நாட்டை அபிவிருத்தி செய்ய முயற்சித்தோம். ஆனால் அதைச் செய்ய முடியவில்லை. 2015இல் தீர்வு காணும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தாலும், அதனை முன்னெடுக்க முடியவில்லை. அதனால்தான் இன்று இந்த நிலைமையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு, அடுத்த சில மாதங்களில் தற்பொழுதுள்ள பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டும்.

**கேள்வி: ஜனாதிபதி அவர்களே, மசகு எண்ணெய் பிரச்சினையில், நாங்கள் இப்போது ரஷ்யாவை நோக்கி திரும்பியுள்ளோம். மேலும் நீண்ட காலத்திற்கு மசகு எண்ணெய் நமக்கு கிடைப்பது குறித்து அவர்களுடன் ஆலோசித்து வருகிறோம். கடன் திட்டம் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது. அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** பெரும்பாலான மசகு எண்ணெய், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெறப்படுகிறது. ஆனால் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் ரஷ்யாவிடமும் கடன் வசதிகளைப் பெற பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. ரஷ்யாவில் இருந்து எரிபொருளை பெறுவது தொடர்பாக சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் அந்த நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை.

**கேள்வி: ஜனாதிபதி அவர்களே, எதிர்வரும் நாட்களில், ஐரோப்பிய நாடுகளில் குளிர்காலம் ஆரம்பமாகவுள்ளது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்க எதிர்பார்த்துள்ளனர். இவர்களை இலக்காகக் கொண்டு இலங்கை ஏதேனும் சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டத்தை முன்வைத்துள்ளதா ?**

**பதில்:** சுற்றுலாவை மேம்படுத்த இந்த ஆண்டு திட்டமொன்றை தயாரித்துள்ளோம். அடுத்த ஆண்டுக்குள் அதன் பெறுபேறுகளை காணலாம். எந்தெந்த நாடுகளுக்குப் பயணம் செய்வது என்று ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டனர். அடுத்த ஆண்டுக்குள் இந்த இலக்குகளை அடைய முடியும் என்று நம்புகிறேன்.

**கேள்வி : ஜனாதிபதி அவர்களே, போராட்டத்தில் பல்வேறு இளைஞர் குழுக்கள் இணைந்திருந்தன. உள்நோக்கம் கொண்ட குழுக்கள் இருந்தன. நாட்டின் எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புள்ள இளைஞர்கள் குழு ஒன்று இதில் பங்கேற்றிருந்தது. அந்த இளைஞர் குழுக்களுக்கு அழைப்பு விடுக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறீர்களா?**

**பதில்:** அந்த அழைப்பை நான் முன்பே செய்துள்ளேன். அந்த குழுக்களுடன் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளோம். அத்துடன், போராட்டத்தில் வன்முறையைக் கையில் எடுத்து, வழிதவறிச் சென்ற இளைஞர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். போராட்டத்தில் ஈடுபட்ட நல்லவர்களுடனும், போராட்டத்தால் தவறாக வழிநடத்தப்பட்ட இளைஞர்களுடனும் கலந்துரையாட விரும்புகிறோம். போராட்டம் என்ற போர்வையில் வன்முறைச் செயல்களைச் செய்து அரசியல் அதிகாரத்தைப் பெற முயன்ற குழுக்கள் வேண்டுமானால் தவறை ஏற்று எம்முடன் இணையும் வாய்ப்பு உள்ளது.

அவர்கள் நாட்டுக்கு கேடு செய்தார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரம் கடினமாக இருக்கும்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பது எந்த நாட்டிலும் நடக்கும் ஒன்று. ஆனால், அதற்கெதிராக வன்முறைகள் நடத்தப்படுமானால், அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். தாங்கள் தவறு செய்ததை உணர்ந்துள்ளவர்களுடன் கலந்துரையாடுவோம்.

**- ஜனாதிபதி ஊடகப் பிரிவு**




தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 25 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.53
இஷா - 07.04

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஐப்பசி 08

ராகுகாலம் : மாலை : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: அமாவாசை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# சமூக மேம்பாடுகளுக்கான செயற்பாடுகளில் லேக்ஹவுஸ் நிறுவனம் முக்கிய பங்கு

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமூக மேம்பாட்டுக்காக, சமூக,பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை குறிப்பிட முடியும் என்றும் அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் நலன்புரி நடவடிக்கைகள் சமூகத்துக்கு மிக முக்கியமானவை என்றும் ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சமூக, நலன்புரி நடவடிக்கைகளின் பிரதிபலனாக,புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுவதாகவும்,அதேவேளை நாட்டிலுள்ள பரீட்சையை கேந்திரமாகக் கொண்ட கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த லேக்ஹவுஸ் ஊழியர்களின் பிள்ளைகளின் திறமைகளைப் பாராட்டி,

06

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப

# அரச, தனியார் துறைகளில் தொழில் முயற்சிகளை முன்னேற்றல் அவசியம்

## பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்றிட்டங்களின் முக்கிய அம்சமாக அரச மற்றும் தனியார்துறை தொழில் முயற்சிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

விநியோக வலையமைப்பு தொடர்பில் இளைஞர், யுவதிகளுக்கு தேவையான தொழில் நிபுணத்துவங்களை பெற்றுக் கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற சர்வதேச மாநாடொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

06

வன்முறை மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்த குழுக்கள்

# பாவமன்னிப்பு பெற்று நாட்டின் எதிர்கால பயணத்தில் இணைந்து கொள்ள முடியும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் வன்முறைகளில் ஈடுபட்டு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயற்சித்த குழுக்கள், அவர்கள் விரும்பினால் பாவ மன்னிப்பு பெற்று அதன் பின்னர் நாட்டின் எதிர்கால பயணத்தில் இணைந்து கொள்ள முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையை 2048ல் அபிவிருத்தியடைந்த நாடாக கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என தெரிவித்துள்ள அவர், அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக நாட்டின் இளைஞர்,

06

# கட்சி மாறும் சந்தர்ப்பவாதிகளுக்கு அடுத்த தேர்தலில் மக்கள் சிறந்த பதில் வழங்குவர்

## 20ஆவது திருத்தத்தை விட 22 சிறந்தது என்பதாலேயே அதற்கு ஆதரவளித்தோம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி கட்சி மாறுவதற்கு எதிர்பார்க்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு அடுத்த தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்குவர் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளவர்கள் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர், அவர்களின் அரசியல் பயணம் இத்தோடு முற்றுப் பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்றுள்ள நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், யார் சந்தர்ப்பவாத அரசியல் செய்கின்றார்கள்? யார் மக்களை பணயம் வைத்து வாக்குகளை பெற்றுக் கொள்ள செயற்படுகின்றார்கள்

06



கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்கவை இலங்கைக்கான எகிப்திய தூதுவர் Maged Mosleh மாநகர மன்ற முதல்வரின் அலுவலகத்தில் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்ததை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# மாலைதீவில் கஞ்சா கடத்திய இலங்கையருக்கு ஆயுள் தண்டனை

## மாலைதீவு இணையத்தளம் ஒன்று தெரிவிப்பு



மாலைதீவில் கஞ்சா கடத்திய குற்றத்திற்காக இலங்கை குடிமகன் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளன.

ரணசிங்க திஸ்ஸ ஹேவா என்ற இந்த இலங்கையருக்கு குற்றவியல் நீதிமன்றம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயுள் தண்டனை விதித்ததாக மாலைத்தீவு செய்தி இணையத்தளமான அவாஸ் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 51(அ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி கஞ்சா கடத்திய குற்றத்திற்காக ரணசிங்க குற்றவாளி என தலைமை நீதிபதி சோப்வத் ஹபீப் தீர்ப்பளித்தார்.

போதைப்பொருள் சட்டத்தின் கீழ் ரணசிங்கவுக்கு ஆயுள் தண்டனையும் இலங்கையின் மதிப்பில் 23,34,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு வருடங்கள், ஏழு மாதங்கள் மற்றும்

06

# லிற்றோ கேஸ் நிறுவனம் திறைசேரிக்கு மேலும் 750 கோடி ரூபா வழங்கல்

## நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

லிற்றோ கேஸ் நிறுவனம் திறைசேரிக்கு வழங்கவுள்ள கடன் தொகையில் மேலும் 750 கோடி நிதியை நேற்று திறைசேரிக்கு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் அது தொடர்பில் தெரிவிக்கையில்:

லிற்றோ கேஸ் நிறுவனம் திறைசேரிக்கு மொத்தமாக 2600 கோடி ரூபாவை வழங்க வுள்ள நிலையில் ஏற்கனவே

06






# SJB யிலும் இரட்டை குடியுரிமையுடன் சிலர்

## சட்டத்தரணிகளுடன் கட்சி கலந்தாலோசனை



இரட்டை குடியுரிமை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பதாகவும் அவர்கள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கட்சியின் சட்டத்தரணிகளிடம் கேட்டுள்ளதாகவும் அந்த கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். அந்த நடவடிக்கை எடுக்கப்படும் வரை ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் இரட்டை குடியுரிமை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என்ற தகவலை வெளியிட போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எமது கட்சியில் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் இருக்கின்றனர். அது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், அவர்கள் யார் என்பதை வெளியிட முடியாது. நாங்கள்

06

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு



அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டபென்ஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்றுள்ளது. சமகால அரசியல் சூழ்நிலையையும் நாட்டின் பொருளாதார நெருக்கடியையும் மையப்படுத்தியதாக அது அமைந்திருந்ததாக கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரால் எழுதப்பட்ட பாடல்களின் இசை நிகழ்ச்சி குமாரதுங்க முனிதாச கலையரங்கத்தில் திங்கட்கிழமை (24) காலை நடைபெற்றபோது, சிரேஷ்ட ஒலிபரப்பாளர் ஆரியசிறி விதானகே நினைவுச் சின்னம் வழங்குவதையும் அருகில் நிறுவனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமருடன் காணப்படுகின்றார்.

டைம்ஸ் உயர்கல்வி உலக பல்கலைக்கழக தரப்படுத்தல்:

# உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் பேராதனை பல்கலைக்கழகமும் தெரிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் பேராதனை பல்கலைக்கழகமும் இடம் பிடித்துள்ளது. 104 நாடுகளைச் சேர்ந்த 1799 பல்கலைக்கழகங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தல் வரிசையில் உலகின் சிறந்த 600 பல்கலைக்கழகங்களுள் பேராதனைப் பல்கலைக்கழகமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகமானது இலங்கையின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து நான்காவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான டைம்ஸ் உயர் கல்வி

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள

ஒருவருக்கு வறுமை வந்த நேரத்திலும்
அவரிடம் பழைய உறவைப் பாராட்டும்
பண்பு உடையவர்களே சுற்றத்தார் ஆவார்கள்.

# சட்டம், ஒழுங்குக்கு மதிப்பளிக்காத காட்டுமிராண்டித்தனமான செயல்!

தற்போது நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களும் அவற்றின் பீடங்களும் வழமை போன்று மீண்டும் இயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 2020 மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் கொவிட் 19 தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலை இந்நாடு எதிர்கொண்டது. அதனைத் தொடர்ந்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிலையங்கள் அனைத்தும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டன.

இதன் விளைவாக இணையத்தளத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் இக்கற்பித்தல் முறைமையின் ஊடாகப் பலவிதமான சவால்களுக்கும் அசௌகரியங்களுக்கும் மாணவர்கள் உள்ளாகினர். ஆன போதிலும் இத்தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வி பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையை மாணவர்கள் எதிர்நோக்கினர்.

கொவிட் 19 தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலானது, அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்கள் மற்றும் கொவிட் 19 தடுப்பூசி என்பவற்றின் மூலம் 2021 பிற்பகுதியாகும் போது பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டில் கட்டம் கட்டமாக இயல்புநிலை ஆரம்பமானது. இந்நிலையில் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிலையங்களும் 2020 மார்ச் மாதத்துக்கு முன்பு போன்று இயங்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் பலகலைக்கழகங்களில் பகிடிவதை மீண்டும் தலை காட்ட ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் றுஹுணு பல்கலக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 200 மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதன் நிமித்தம் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, களனி பல்லைக்கழகத்திலும் பகிடிவதையில் ஈடுபட்டார்கள் என்று கருதப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் கடந்த வாரம் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் பகிடிவதையில் ஈடுபட்ட 19 மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி வழங்கும் நிறுவனங்களில் இவ்வாறு பகிடிவதை தலைகாட்ட ஆரம்பமாகியுள்ள போதிலும், இந்நாட்டின் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான வன்முறைகளைத் தடை செய்யும் சட்டத்தின்படி, 'பகிடிவதை ஒரு குற்றச்செயல்' என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 919 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப, உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெறும் மாணவர் ஒவ்வொருவரும் பகிடிவதையைத் தொடங்கவோ, தூண்டவோ செய்ய மாட்டேன் எனவும் பகிடிவதைக்கு உதவவும் மாட்டேன் என்றும் கட்டாயம் கையெழுத்திட்டு உறுதி அளிக்கும் ஏற்பாடும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கின்றது.

அப்படியிருந்தும் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை முன்னெடுக்கப்படுவதானது, சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்காத செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. இது முற்றிலும் தவறானதும் பிழையானதுமான செயற்பாடு என்பதை உயர்கல்வி பெறும் மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் சட்டம் ஒழுங்கை மதித்து நடக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது என்பதும் இங்கு நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் காரணமாகப் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் இப்போதுதான் மீண்டும் வழமைக்கு நிலைமைக்கு திரும்பி இருக்கின்றன. இந்நிலையில் பகிடிவதையை முன்னெடுப்பதும் அதனை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளில் ஈடுபடுவதும் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதவையாகும். இதன் விளைவாகப் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகள்தான் பாதிக்கப்படும். ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகங்கள் மறுஅறிவித்தல் வரை மூடப்படுவதற்கு பகிடிவதை காரணமாக அமைந்திருக்கின்றது. இதன் விளைவாகக் கற்றல் நடவடிக்கைகளை உரிய காலத்திற்குள் நிறைவு செய்ய முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளது. இதற்கு கடந்த காலத்தில் நிறைய அனுபவங்கள் உள்ளன. அவ்வாறான நிலைமை இப்போது ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இவ்வாறான சூழலில் பகிடிவதை குறித்து விஷேட கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு ரோயல் கல்லூரி மாணவத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில், பகிடிவதையால் மாணவர்கள் உடல் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளது. இந்நிலைமைக்கு தீர்வுகளை முன்வைக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது முற்றிலும் வரவேற்கப்படும் நடவடிக்கையாகும். ஒவ்வொரு பெற்றோரும் அதனையே எதிர்பார்க்கின்றனர். மாணவர்களை உடல் மற்றும் மன உளைச்சலுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கும் பகிடிவதைக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும். அதனால் இது தொடர்பில் ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கை ஆக்கபூர்வமானதாகவும், நம்பிக்கை தரக்கூடியதாகவும் அமையும் என்றால் மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# பாதுகாப்புத்துறை சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா கூடுதல் கரிசனை



## எச்.டி.டி–40 உள்நாட்டு பயிற்சி விமானத்தை ஆரம்பித்து வைத்த பிரதமர் நரேந்திர மோடி

பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட தளவாட ஏற்றுமதியில் இந்தியா தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றது. பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட தளவாடங்களின் ஏற்றுமதி மூலம் இந்திய ஐந்து பில்லியன் டொலர் வருமானத்தைப் பெறுவதற்கு இலக்கு வைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

எச்.ஏ.எல் வடிவமைத்துள்ள எச். டி.டி 40 என்ற உள்நாட்டு பயிற்சி விமானத்தை பிரதமர் மோடி அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளார். இந்தப் பயிற்சி விமானமானது ஏனைய விமானங்களுக்கு நெருக்கமானதாகப் பயன்படுத்தப்படும்.

இந்தியாவின் பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி கடந்த 5 ஆண்டுகளில் 8 மடங்கு அதிகரித்துள்ளது. அதேசமயம் இந்தியா தனது ஏற்றுமதி வருமானத்தை 5 பில்லியன் டொலராக இலக்கு நிர்ணயம் செய்துள்ளது என்று காந்திநகரில் டெஃப் எக்ஸ்போவை தொடங்கி வைத்து உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

புதிய இந்தியாவானது திட்டமிட்ட சரியான நோக்கம், கண்டுபிடிப்பு மற்றும் செயற்படுத்தல் என்ற தாரகமந்திரத்துடன் முன்னோக்கி நகர்கிறது என்று வலியுறுத்திக் கூறிய பிரதமர் நரேந்திர மோடி "கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 8 மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது. 75 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றுமதி செய்து வருகிறோம். 202122 ஆம் ஆண்டில், இந்தியாவில் இருந்து பாதுகாப்பு ஏற்றுமதி 1.59 பில்லியன் டொலர்களை எட்டியது. அதாவது சுமார் 13,000 கோடி ரூபா. மேலும் வரும் காலத்தில், 5 பில்லியன் டொலர் அதாவது 40,000 கோடி ரூபாவை எட்டுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளோம்" என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் இருந்து வாங்கப்படுகின்ற உபகரணங்களின் பட்டியலை அங்கு குறிப்பிட்ட நரேந்திர மோடி, இனிமேல் இதுபோன்ற 411 பாதுகாப்பு உபகரணங்கள் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் உரையை அடிப்படையாக வைத்து நோக்கும் போது, இந்திய இராணுவம் தனது திறமையை நிரூபித்திருப்பதால், தற்போது உலகநாடுகளே இந்தியாவின் தொழில்நுட்பத்தை நம்பியுள்ளன. கடற்படை மற்றும் கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட அதிநவீன விமானம் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ்விக்ராந்த் கப்பல் இந்திய கடற்படையின் பாவனையில் இருந்து வருகின்றது. அதனை பிரதமர் மோடி எடுத்துக்காட்டாக குறிப்பிட்டார்.



காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் மாநாடு மற்றும் கண்காட்சி நிலையத்தில், DefExpo 22 இன் தொடக்க விழாவில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பிரதமர் நரேந்திர மோடி

இதேபோல், உள்நாட்டு பாதுகாப்புத் திறனைக் காட்டும் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 'பிரசாந்த்' இலகுரக போர் ஹெலிகொப்டர்களை விமானப்படை உள்வாங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்புத் துறையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பேசிய பிரதமர் மோடி, உத்தரபிரதேஷ் மற்றும் தமிழகத்தில் இரண்டு பாதுகாப்பு வழித்தடங்களை இந்தியா உருவாக்கி வருவதாகவும், உலகின் பல பெரிய நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வருவதாகவும் தெரிவித்தார்.

"இந்தத் துறையில் இத்தகைய அளவிலான முதலீடுகள் அந்தப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு பெரும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்" என்று மோடி மேலும் கூறினார்.

## ஐந்து பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டுவதே இலக்கு!

சீனாவின் ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டிற்கு எதிராக தனது கடல்சார் நலனைப் பாதுகாப்பதற்கும், பாதுகாப்பு ஏற்றுமதியைத் தூண்டுவதற்கும், DefExpo, இரண்டாவது இந்தியப் பெருங்கடல் பகுதி பிளஸ் (IOR+) மாநாடு மற்றும் இந்தியாஆபிரிக்கா பாதுகாப்பு உரையாடல் ஆகியவற்றை இந்தியா நடத்துவது பற்றியும் மோடி அங்கு குறிப்பிட்டார்.

"இன்று, சர்வதேச பாதுகாப்பு முதல் உலகளாவிய வர்த்தகம் வரை, கடல்சார் பாதுகாப்பு உலகளாவிய முன்னுரிமையாக உருவெடுத்துள்ளது. இன்றைய உலகமயமாக்கல் காலத்தில் வணிகக் கடற்படையின் பங்கும் விரிவடைந்துள்ளது. இந்தியா மீது உலக நாடுகளின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. அவற்றை இந்தியா நிறைவேற்றும் என்று உலக சமூகத்திற்கு உறுதியளிக்கிறேன். எனவே, இந்த டிஃபென்ஸ் எக்ஸ்போ, இந்தியா மீதான உலகளாவிய நம்பிக்கையின் அடையாளமாகவும் இருக்கிறது" என்று பிரதமர் மோடி கூறினார்.

## இந்திய இராணுவம் தனது திறமையை நிரூபித்திருப்பதால், தற்போது இந்தியாவின் தொழில்நுட்பத்தை நம்பியுள்ள உலகநாடுகள்!





ஹிந்துஸ்தான் ஏரோநோட்டிக்ஸ் லிமிட்டெட் (எச்.ஏ.எல்) வடிவமைத்த எச்.டி.டி40 உள்நாட்டு பயிற்சி விமானத்தை அவர் வெளியிட்டு வைத்த போது, இது நெருக்கமான விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் என்று எச்.ஏ.எல் அதிகாரிகள் தெரிவித்தனர். அதிநவீன சமகால அமைப்புகள் மற்றும் விமானி நட்பு அம்சங்களைக் கொண்ட இந்த விமானம், வழிசெலுத்தல் மற்றும் இரவு நேரத்தில் பறப்பது உள்ளிட்ட இரண்டாம் நிலைப் பாத்திரங்களை ஆற்றும் வல்லமையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், குஜராத் முதல்வர் பூபேந்திரபாய் படேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாதுகாப்புத் தயாரிப்புகள், தொழில்நுட்பம் மற்றும் சேவைகளில் நாட்டின் உள்நாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் இந்திய பெவிலியனை பிரதமர் அங்கு திறந்து வைத்தார்.

# நான் வாழ்வில் எதிர்கொண்ட துன்பங்களே சமூகசேவையில் ஈடுபட என்னைத் தூண்டின



## மக்கள்நலப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து வருகின்ற கலாநிதி ஐ.வைஎம். ஹனீப் தினகரனுக்கு பேட்டி

எட்டாம் வகுப்பு வரையே பாடசாலைக் கல்வியை தொடர்ந்த நான், வாழ்க்கையில் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் கடந்து வந்த பாதையென்பது மிகவும் கரடுமுரடானது. மற்றவர்களின் துன்பத்தையும் எண்ணி மனம் பாதிக்கப்பட்டாலும் இவர்களுக்கும் ஒரு சமயத்தில் நான் உதவுவேன் என்ற உறுதியான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். அது இன்று வெற்றியளித்துள்ளது என்கிறார் ஜே.ஜே. பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவரும் பணிப்பாளரும், கொலன்னாவை பள்ளிவாசல் தலைவருமான கலாநிதி ஐ. வை எம். ஹனீப்.

**கேள்வி: சமூக சேவையாளராக இனங்காணப்பட்டுள்ள நீங்கள் எதற்காக இந்தத் துறையை தெரிவு செய்தீர்கள்?**

**பதில்:** சமூக சேவையில் நான் ஈடுபடுவதற்கு காரணமாக அமைந்தது எனது கடந்த கால வாழ்க்கையென்றே கூறமுடியும். சிறு வயதில் நான் கடுமையாக நான் கஷ்டப்பட்டே இன்று இந்த நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளேன். மற்றவர்களுக்கு உதவுவேன் என்ற உறுதியான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். அந்த நம்பிக்கை இன்று பலித்துள்ளது.

**கேள்வி: உங்கள் சமூக சேவை அமைப்பான ஜே. ஜே பவுண்டேஷன் தொடர்பில் விளக்குங்கள்.**

**பதில்:** இந்த அமைப்பை நான் உருவாக்கினாலும் அது ஒரு கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களையும் இணைத்துக் கொண்டே பயணிக்கிறேன். இந்த சமூக சேவையில் பயணமானது இலங்கையில் மட்டுமன்றி சர்வசே ரீதியிலும் பயணித்துக் கொண்டிருக்கிறேன். எமது சேவைக்கு இனம், மதம் என்ற வேறுபாடு இல்லை. தேவையுடையோரை அறிந்து சேவை செய்கிறோம். எதிர்காலத்தில் எமது பணியை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளோம். சர்வதேச ரீதியில் என்று நோக்குவோமாயின் உகண்டாவில் சில பகுதிகளில் குடிநீர் பெறுவதில் மக்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அங்கு குழாய்க் கிணறுகளை அமைத்து வருகிறோம்.

**கேள்வி: உங்கள் ஜே.ஜே பவுண்டேஷன் எவ்வாறான சேவைகளை முன்னெடுத்து செல்கிறது?**

**பதில்:** குடிநீர் மற்றும் மின்சாரம் இல்லாதவர்களுக்கு அவைகளை பெற்றுக் கொடுத்தல், கல்வித் துறைசார் உதவிகளை செய்து கொடுத்தல் மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து அவற்றை பூர்த்தி செய்தல் போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தி முன்னுரிமையளித்து வருகிறோம். மேலும் மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலி போன்றவற்றையும் வழங்கி வருகிறோம். பிள்ளைகளுக்கான கத்னா வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். இவ்வாறான உதவிகளை தொடர்ந்து நாங்கள் செய்து வருகிறோம். இதுவரை 300 குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளோம். இது தவிர ஆழ்கிணறு போன்றவற்றையும் அமைத்து வழங்கியுள்ளோம்.

கடந்த கொவிட்19 காலங்களில் மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பார்சல்களையும் மருத்துவ உதவிகளையும் இலவசமாகவே வழங்கினோம்

**கேள்வி: கல்வித்துறை சார்ந்த சேவைகளைப்பற்றி சற்று விளக்குங்கள்.**

**பதில்:** சூம் மூலமான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறோம். இந்தக் கருத்தரங்கு மூலம் மாணவர்களை ஆசிரியர்கள் கல்வியின்பால் அக்கறை கொள்வதற்கான உளவியல் ரீதியிலான தூண்டுதல்களை மேற்கொண்டு வருகிறோம். இலங்கையிலுள்ள சில தனியார் கல்வி நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. இதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாக நாங்கள் தற்போது ஆசிரியர்ளை தயார்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அதன் அடிப்படையில் கொழும்பிலுள்ள 17 முஸ்லிம் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் தலா இருவர் என்ற அடிப்படையில் 34 பேரை தெரிவு செய்து சிறுவர் உளவியல் கல்வி தொடர்பான பயிற்சி பட்டறைகளை நடத்தி வருகிறோம். இதற்காக ஒரு ஆசிரியருக்கு தலா 85 ஆயிரம் ரூபாவை நாம் செலவிடுகிறோம். இது தவிர நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குகள், புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகளை நடத்தி வருகிறோம்.

**கேள்வி: உதவிகள் தேவைப்படும் ஒரு தனிநபர் அல்லது பொது அமைப்புகள் உங்களை எவ்வாறு நாட முடியும்?**

**பதில்:** எமது ஜே.ஜே பவுண்டேஷனின் பிரதிநிதிகள் நாடளாவிய ரீதியில் உள்ளனர். அவர்கள் ஊடாக தங்களது தேவைகளை முன்வைக்கலாம். அல்லது அந்தப் பிரதேச பள்ளிவாசல் அல்லது ஊர் முக்கியஸ்தர்கள் ஊடாகவும் தமது தேவைகளை தெரிவிக்க முடியும். பின்னர் அவர்கள் எமக்கு இது தொடர்பாக அறிவிக்கும்போது நாம் தேவைப்பட்ட உதவிகளை செய்வோம். இது தவிர எம்முடன் தனிநபர்கள் நேரடியாக தொடர்பு கொள்வதனை தவிர்த்து வருகிறோம். ஏனென்றால் இது பலவிதமான பிரச்சினைகளை தோற்றுவிக்கிறது.

**கேள்வி: சமூகசேவை துறையில் நீங்கள் எவ்வளவு காலமாக ஈடுபட்டு வருகிறீர்கள் ?**

**பதில்:** 1984 ஆம் ஆண்டு கொலன்னாவையில் வந்து குடியேறிய நாள் முதல் சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறேன். இதற்கு பலரும் எனக்கு உதவி, ஒத்தாசை வழங்கினர். ஆனால் இதனை ஓர் அமைப்பாக கட்டியெழுப்பி செயற்பட தொடங்கியது 2016 ஆம் ஆண்டிலேயோகும்.

பேட்டி கண்டவர்: கொலன்னாவை
**ஷிபா...**

# ஆன்மிக ஆணவம் கடவுளை வணங்குவதைவிட தன்னலத்தை வணங்குவதற்கு இட்டுச்செல்லும்

“மனத்தாழ்மையோடு எந்தளவிற்கு நம்மையே நாம் தாழ்த்துகிறோமோ அந்தளவுக்கு கடவுள் நம்மை உயர்த்துவார்’



“ஆன்மிக ஆணவம்”கடவுளை வணங்குவதைவிட தன்னலத்தை வணங்குவதற்கு இட்டுச்செல்லும் என திருத்தந்தை பிரான்சிஸ் நேற்று முன்தினம் ஞாயிறு வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார். இறைவனிடம் வேண்டுதல் செய்ய ஆலயத்துக்குச் சென்ற பரிசேயர், வரிதண்டுபவர் ஆகிய இருவர் குறித்த ஞாயிறு நற்செய்தி வாசகமான பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமையை (லூக்.18,914) மையப்படுத்தி உரையாற்றிய திருத்தந்தை, வரிதண்டுபவர் கடவுளின் திருமுன் தனது பாவநிலையை ஏற்று தனக்கு இரங்குமாறு வேண்டினார் என்றும், இவ்வுவமையானது ஒருவர் உயர்த்தப்படுவது மற்றவர் தாழ்த்தப்படுவது ஆகிய இருவித செயல்கள் பற்றிக் கூறுகிறது என்றும் குறிப்பிட்டார்.

உயரே செல்தல் என்ற முதல் இயக்கம் விவிலியத்தில் பல இடங்களில் காணக் கிடைக்கின்றது, ஆபிரகாம் பலிகொடுக்க மலைக்குச் சென்றார்.

கட்டளைகளைக் கொண்டுவருவதற்காக மோசே சீனாய் மலைக்குச் சென்றார். மற்றும் இயேசு தோற்றமாற்றத்திற்காக மலைக்குச் சென்றார் என கூறியத் திருத்தந்தை,

உயரே செல்தல் என்பது ஆண்டவரை நோக்கிச் செல்லும்வண்ணம் சோர்வான வாழ்விலிருந்து இதயத்தை விடுவித்துக்கொள்வதன் அவசியத்தை எடுத்துரைக்கின்றது என்றும் விளக்கினார்.உயரே செல்தல் என்பது, தன்னலம் என்ற மேட்டுநிலத்திலிருந்து எழும்பி ஆண்டவரை நோக்கி உயரே செல்வதாகும் எனவும் நாம் வாழ்ந்துவரும் பள்ளத்தாக்கில் உள்ளதை உள்ளபடியே ஆண்டவர்முன் கொணர்வதாகும் எனவும் திருத்தந்தை தெரிவித்தார்.

ஆண்டவரைச் சந்திப்பதற்கு நம்மை உயர்த்துவது என்பது நாம் கீழே இறங்கவேண்டும் அதாவது, நம்மை அழுத்துகின்ற மனக் காயங்கள் பாவங்கள் மற்றும் சொந்தப் பல வீனங்களை ஏற்பதும் அவற்றை கண்ணாடியில் பார்ப்பதுபோன்று நேர்மையோடு பார்ப்பது மாகும்

மனத்தாழ்மையோடு எவ்வளவிற்கு நம்மையே தாழ்த்துகிறோமோ அவ்வளவுக்கு கடவுள் நம்மை உயர்த்துவார் என்றும் திருத்தந்தை விளக்கினார்.

மூவேளை செப உரை 23.10.22

இவ்வுவமையில் பரிசேயர் தன்னையும் மதம் சார்ந்த தன் பணிகளையும் புகழ்ந்து, மற்றவரை இகழ்வதால் அவர் தனது ஆன்மீக ஆணவத்தை வெளிப்படுத்துகிறார் என்றும், தன்னை நீதிமானாக ஏற்பது தன்னலத்தை வணங்குவதற்கு இட்டுச்செல்லும் என்றும் இதனால் கடவுளுக்கு தன்னில் இடமளிக்காத நிலைக்கும் அவர் தன்னை ஆக்கிக்கொள்கிறார் என்றும் திருத்தந்தை கூறினார்.

“நான்” என்பது தலைதூக்கி நிற்கின்ற இடத்தில் கடவுளுக்கு சிறிதளவே இடம் இருக்கும். அதேநேரம் உண்மையான மனத்தாழ்மையில் எவ்வித பாசாங்குத் தனமின்றி நாம் இருக்கும் உண்மைநிலையை அப்படியே கடவுளிடம் எடுத்துச்செல்லும் சக்தியுடையவர்களாக மாறுகிறோம் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.உண்மையான மனத்தாழ்மையில் நம் இதயங்களை அழுத்துகின்ற காயங்கள், பாவங்கள் மற்றும் துயரங்களை கடவுளிடம் எடுத்துச்சொல்லி அவர் நம்மை குணமாக்குமாறும் நம்மைப் பேணிப் பாதுகாத்து உயர்த்துமாறும் அவரின் இரக்கத்திற்காக மன்றாடுவதற்குத் திறனுள்ளவர்களாக



மாறுவோம் என்றும் திருத்தந்தைதெரிவித்தார்.

நாம் எப்படி இருக்கிறோம் என்பதைவிட நாம் எப்படி தோன்றுகிறோம் என்பதில் கருத்தாய் இருப்பதற்கு எழுகின்ற சோதனை இறுதியில் தன்னையே அன்புகூர்வதில் நம்மைச் சிக்கவைக்கின்றது என்றும் எச்சரிக்கைவிடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இறுதியில் வலியோரை அரியணையினின்று தூக்கியெறிந்து தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகின்ற (லூக்.1:52) ஆண்டவரின் தாழ்மையான பணியாளாகிய அன்னை மரியாவின் பரிந்துரையை வேண்டுவோம் என்றும் செப உரையை நிறைவுசெய்தார் திருத்தந்தை.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ்...

வாழ்நாள் முழுவதும் இறைபிரசன்னத்தில் வாழ்ந்தவர்

# புனித ஜெரால்ட் மஜெல்லா

வாரம் ஒரு புனிதர்

நற்கருணையில் கிறிஸ்து மறைந்திருக்கிறார். எனது அயலானில் கிறிஸ்துவைக் காண்கிறேன் என்று கூறி வாழ்நாள் முழுவதும் இறைபிரசன்னத்தில் வாழ்ந்தவர் புனித ஜெரால்ட் மஜெல்லா .இறைவனையும், அன்னை மரியாவையும் அளவில்லாமல் அன்பு செய்தவர் அவர். இவர் தென் இத்தாலியில் நேப்பிள்ஸ் முரோ என்னுமிடத்தில் 1726ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி பிறந்தார். ஐந்து வயது முதல் ஆலயத்திற்கு தினந்தோறும் தன் தாயுடன் திருப்பலிக்கு செல்வது வழக்கம்.



ஒருமுறை தனது தாயுடன் ஆலயத்தில் சென்று திருப்பலியில் பங்கேற்று, நற்கருணை பெற வரிசையில் நின்றார். குருவானவர் மஜெல்லாவிற்கு 10வயது பூர்த்தியாகாத காரணத்தால் நற்கருணை வழங்கவில்லை. அதனால் அவர் கவலையோடு வீடுதிரும்பினார்.

மஜெல்லாவை அன்பு செய்த இயேசு அவரது கவலையைப்போக்க விரும்பினார். அன்றிரவு மிக்கேல் அதிதூதர் தூக்கத்திலிருந்த மஜெல்லாவை எழுப்பினார். தான் கொண்டு வந்த நற்கருணையை வழங்கினார். மஜெல்லாவும் பக்தி ஆதரவோடு நற்கருணையைப் பெற்றுக்கொண்டார்.

இறைவனை முழுமையாக நம்பினார். பகல் முழுவதும் வேலை செய்தார். இரவு முழுவதும் ஆலயத்தில் சென்று செபித்தார்.

இவரது தியாக வாழ்வைக் கண்ட மக்கள் சிலர் இவரை ‘வாழ்கின்ற புனிதர்’ என்று கூறினர். “நான் ஒரு புனிதனாவதற்காகச் செல்கிறேன்” என்று கூறி இரட்சகர் சபையில் சேர்ந்தார்.

1752ஆம் ஆண்டு ஜூலை 16இல் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற வார்த்தைப்பாடுகளுடன் இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். எளிய பணிகள் செய்து எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக மாறினார்.

தனது அறையில் பெரிய சிலுவை ஒன்றை வைத்தார். சிலுவையில் இயேசுவே காயங்களை உற்றுநோக்கி தியானித்தார். கட்டிலில் கூர்மையான கல்லும், முள், ஆணி, வைக்கோல் போன்றவைகளைப் பரப்பி அதன்மீது படுத்து உறங்கினார். தலையணைக்குப் பதிலாக இரண்டு செங்கற்களை வைத்துக் கொண்டார்.

இயேசுவே, அம்மா மரியே என்று அழைத்தவாறு 1755ஆம் ஆண்டு அக்டோபர்16ஆம்நாள்இயற்கைஎய்தினார். திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் 1904ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி அவரை புனிதர் நிலைக்கு உயர்த்தினார்.

மில்லியன் ஜேம்ஸ்...




# இயேசுவின் இலக்கை சிறப்புற எடுத்துச் சொல்லும் மாபெரும் நற்செய்தியாளர் புனித லூக்கா

சிரியாவின் அந்தியோக்கு நகரில் பிறந்த லூக்கா ஒரு மருத்துவர். ஓவியரும் கூட என்று வரலாறு கூறுகிறது.

நான்கு நற்செய்தியாளர்களும் இயேசுவின் பணிவாழ்வு மற்றும் இறையரசு போதனையை மிக சிறப்பான விதத்தில் வடித்துத் தந்துள்ளார்கள். அவற்றுள் புனித லூக்காவின் நற்செய்தியானது மகிழ்வின் நற்செய்தியாக இரக்கத்தின் நற்செய்தியாக விளங்குகிறது. புனித லூக்கா இயேசுவைக் கனிவுள்ளவராக இரக்கமுள்ளவராக எல்லோருக்கும் வாழ்வளிப்பவராகவும் காட்டுகிறார்.

கிரேக்க குலத்தை சார்ந்தவரான புனித லூக்கா சிரியாவில் உள்ள அந்தியோக்கியா நகரைச் சார்ந்தவர். பாலஸ்தீனாவின் வடபுறத்திலே இவரது இருப்பிடம் அமைந்திருந்தது. இவர் மூன்றாவது நற்செய்தியினதும் திருந்தூதர் பணிகள் நூலின் ஆசிரியருமாவார். சிறந்த கல்விமானாகிய இவர் மருத்துவம், கவிதை, கலை, குழு ஆய்வு, விளையாட்டு போன்ற துறைகளில் கை தேர்ந்தவர். கனிவான குணம், இரக்க உள்ளம், தாராளமாக உதவும் மனப்பான்மை இவருடைய குணநலன்கள் இதற்கு இவரது எழுத்துக்களே சாட்சி.

புனித லூக்கா இயேசுவை நேரில் கண்டதுமில்லை அவரது போதனைகளைக் கேட்டதுமில்லை. இவர் யூதனும் அல்லர் ஆனால் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியதில் அந்தியோக்கியா நகரம் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது.

ஸ்தேவானின் மறைசாட்சிக்குப் பிறகு இந்த இடத்தை தேர்ந்தெடுத்து யூதரல்லாத மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியை பேதுருவும் திருத் தூதர்களும் மற்றப் பணியாளரும் அறிவித்து வந்தனர்.

பலரும் மனம் மாறி இயேசுவை ஏற்றுக் கொண்டனர். (தி.ப. 11:19) தூய பவுல் மற்றும் பர்னபாஸ் இத்தகைய நற்செய்திப் பணியில் முழு பங்கு வகித்தனர். இத்தகைய சூழ்நிலையில்தான் அந்தியோக்கியா நகரில் வாழ்ந்து வந்த லூக்கா இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தன் மீட்பராக ஏற்றுக் கொண்டு அவரது பணிக்கெனத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். இயேசு



வின் வாழ்வை பணியை இலக்கை எடுத்துச் செல்லும் மாபெரும் நற்செய்தியாளராக உருமாறினார்.

யூதரல்லாத புற இனத்தாருக்கும் இயேசு சொந்தக்காரர் அனைவருக்கும் அவரது நற்செய்தி உரித்தானது என்பதுதான் இவரது நற்செய்தியின் நோக்கம். இயேசு ஒரு குறிப்



பிட்ட இனத்தவருக்காகப் பிறந்தவர் அல்லர் மாறாகக் கைவிடப்பட்டோர், புறம் தள்ளப்பட்டோர், பாவிகள், குற்றம் சாட்டப்பட்டோர். சமுதாயத்திலே மதிப்பை இழந்து நிற்கும் பெண்கள் அனைவருக்காகவுமே இயேசு வந்தார் என்பதே இவரது மையக்கருத்து.

இயேசுவின் இத்தகைய பணியைத் தனது நற்செய்தியிலே தெளிவாக விளக்கியுள்ளார்.

இவரது நற்செய்தி ஒருமாபெரும் மகிழ்வின் நற்செய்தியாக விளங்குகின்றது. மண்ணுலகிற்கு அளித்த மாபெரும் மகிழ்வுகளை எல்லாம் இவர் அழகாக குறிப்பிட்டுள்ளார்.

மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்த போது ஆண்டவரை நினைத்துப் பாடிய பாடல் மரியாளின் வருகையின் போது திருமுழுக்கு யோவான் தன்தாயின் உதிரத்தில் மகிழ்ச்சியால் துள்ளியது.

இடையர்களுக்கும் வானதூதர்களுக்கும் இயேசுவின் பிறப்புச் செய்தியை அறிவித்த போது சக்கரியாவின் மகிழ்ச்சி நிறை பாடலின் போது சிமியோனின் ஆனந்தக் கூற்றுக்களின் போது என மகிழ்வின் தருணங்களை இவரது நற்செய்தியில் காண்கின்றோம். அத்துடன் இது ஒரு இரக்கத்தின் நற்செய்தியெனப் பார்க்கும் போது புனித லூக்கா ஒரு மருத்துவராக இருந்ததால் நோயின் தன்மை அதன் விளைவுகளை அறிந்தவராய் இயேசுவின் பணிகளில் முதன்மையான பணியான நோய்களைக் குணமாக்கும் பணியைத் தனக்கே உரிய முறையில் தெளிவாக விளக்குகிறார். உடல் ஊனமுற்ற பெண் குணமடைதல், நீர்கோவை நோயாளி குணமடைதல், பத்து தொழுநோயாளிகள் நலம் பெறுதல் போன்றவற்றை இதில் குறிப்பிடலாம்.

நாம் செபமாலையில் சொல்லும் அனைத்து மகிழ்ச்சி நிறைமறையுண்மைகளும் இவரது நற்செய்தியில் இருந்துதான் எடுக்கப்பட்டுள்ளன.

ஒருசில முக்கியமான நிகழ்வுகள் உவமைகள் இவரது நற்செய்தியில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. காய்க்காத அத்திமரம் (லூக் 13:69) காணமற்போன திராக்மா (லூக் 15:810) நல்ல சமாரியன் உவமை (லூக் 10:2937) ஊதாரி மகன் உவமை (லூக் 15:1132) மனம் திரும்பிய நல்லகள்வன் (லூக் 23:3943)

இவரது நற்செய்தி செபத்திற்கு முழு முன்னுரிமையளிக்கிறது. செபம்தான் நம் வாழ்வின் மையம் என்பதை சிறப்பாக ஆணித்தரமாக விளக்கி இயேசுதன் பணியிலே செபத்திற்கு எத்தகைய முக்கியத்துவம் அளித்தார் என்பதை விளக்குகின்றார். உதாரணமாக இயேசு தனிமையாக சென்று செபித்தார் (லூக் 15:16) அப்போஸ்தலர்களை தேர்வு செய்யும் முன் இரவு முழுவதும் செபித்தார் (லூக் 6:12) செபித்துக் கொண்டிருந்த பொழுது தான் உருமாறினார் (லூக் 9:29) சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது ‘தந்தையே இவர்களை மன்னியும்’ என்று செபித்தார் (லூக் 23:24) அவரது கடைசி வார்த்தைகள் ‘தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்’ ஒரு செபமாகவே அமைந்திருந்தது (லூக் 23:46)

இவர் இயேசுவின் சீடருமல்லர் இயேசுவை நேரில் கண்டவருமில்லை ஆனால் இயேசுவின் வாழ்க்கைக்குத் தக்க சாட்சியம் காணும் நபர்களை தேர்ந்தெடுத்து கேட்டறிந்து இயேசுவை ஏற்றுக் கொண்டு அவரை, அவரது பணிகளை இவ்வுலகத்தின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். தளராத உறுதியான விசுவாசம், நம்பிக்கை ஆழ்ந்த அர்ப்பணிப்பு என்பன இவரிடம் நிறைந்து காணப்பட்டது.

தனது நற்செய்தி முழுவதும் இயேசுவை இரக்க குணம் உள்ளராக பிறரிடம் பரிவு கொள்பவராக மகிழ்வின் செய்தியைத் தருபவராக, நோய்களை குணமாக்குபவராக படம் பிடித்துக் காட்டுகிறார்.

உலகிலேயே சிறந்த உவமையாகக் கருதப்படும் ஊதாரி மகன் உவமையின் மூலமாகக் கடவுளின் அளவற்ற மன்னிக்கும் மனத்தினை பிறரை ஏற்றுக் கொண்டு அவருக்காக வாழும் குணத்தினை நிபந்தனையற்ற அன்பினை நமதாக்கிக் கொண்டு வாழ நமக்கும் புனித லூக்கா அழைப்பு விடுக்கின்றார்.

தாழ்ச்சி என்னும் பண்பால் இறைவனில் இணைந்த இவரைப் போல் நாமும் வாழ முற்படுவோம்.

மைக்கல் குரூஸ் ...



இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் சதுரங்க நடுவர்களுக்கான பயிற்சி பட்டறை கிழக்கு மாகாணத்தில் முதல் முறையாக மட்டக்களப்பு பேர்கர் கல்சரல் யூனியன் மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. 30 பேர் கலந்து கொண்ட குறித்த பயிற்சி பட்டறை, சர்வதேச Arbiter திவங்னவினால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



கொழும்பு கெத்தாராம மாவத்தையில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டரங்கை, கொழும்பு மாநகர முதல்வர், ரோஸி சேனாநாயக்க அண்மையில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில்,பிரதி மேயர் எம்.ரீஎம்.இக்பால், மாநகராட்சி மன்ற உறுப்பினர் டீ.பிரசாத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (படம்:பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

## சமூக மேம்பாடுகளுக்கான... (03ஆம் பக்கத் தொடர்)

அந்நிறுவனத்தில் நேற்று (24) நடைபெற்ற விஷேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

*CIMA,ACCA,SDB,CIB,VIJAYA PRODUCT* நிறுவனம்,செலோ நிறுவனம்,எட்லஸ் நிறுவனம் ஆகியன இதற்கு அனுசர ணை வழங்கியிருந்தன.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன,சமூக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பொருளாதார,அரசியல் மாற்றங்களை மேற்கொள்வதில் லேக்ஹவுஸ் நிறுவனம் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது.பரீட்சையை கேந்திரமாகக் கொண்ட கல்வியே நாட்டில் நடைமுறையிலுள்ளது. பரீட்சைகளுக்காகவே சகல நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. அதனால், போட்டித்தன்மையுடன் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்,க,பொ,த,சா,த பரீட்சை. க.பொ.த.உயர்தரப்பரீட்சை போன்றவை இதில் குறிப்பிடத்தக்கவை.

உலகில் வேறு எந்த நாட்டிலும் இத்தகைய போட்டிகள் கிடையாது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் போட்டியினால் பிள்ளைகளின் விளையாடுவதற்கான காலமும் இழக்கப்படுகின்றது.

சிடபிள்யு,டபிள்யு கன்னங்கர இந்தப் பரீட்சையை அறிமுகப்படுத்தியது, வறுமை நிலைப் பிள்ளைகள் புலமைப்பரிசிலைப் பெறுவதற்காகவே. எனினும்,தற்போது அது,புள்ளியின் அடிப்படை கவனிக்கப்பட்டு சிறந்த ஜனரஞ்சக பாடசாலைக்கு பிள்ளையை சேர்ப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது.

## அரச, தனியார் துறைகளில்... (03ஆம் பக்கத் தொடர்)

விநியோக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக புதிய முறைமை மூலமான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு இந்த சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டிருந்த நிபுணர்களிடமும் பயிற்சியாளர்களிடமும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் விநியோக செயற்பாடுகள் முகாமைத்துவ பாடம் மூலம் வழங்கப்படுவது தொடர்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளதுடன் அதற்கான தொழிற் பயிற்சிகளை இளைஞர் யுவதிகளுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளமை தொடர்பில் *institute of supply and material management* நிறுவனத்திற்கும் தமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டார்.

மேற்படி நிறுவனத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டுள்ளவர்கள் உலகின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து வருவதாகவும் அந்த வகையில் மேற்படி நிறுவனத்தை முன்னேற்றும் நடவடிக்கைகளில் பங்களிப்பை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் பிரதமர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## கட்சி மாறும் சந்தர்ப்பவாதிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

என்பது தொடர்பில் மக்கள் மிக அவதானமாக பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நம் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம் என்பதை மக்கள் அறிவர்.

அந்த வகையில் 20வது அரசியலமைப்பு திருத்தத்தை விட 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் சிறந்தது என்பதாலேயே நாம் அதற்கு ஆதரவளித்தோம். எனினும் 22 வது அரசியலமைப்பு திருத்தம் நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வாக அமையாது என்றும்

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாவமன்னிப்பு பெற்று... (03ஆம் பக்கத் தொடர்)

யுதிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். "2048ல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக்கும் பயணத்தில் இளைஞர் யுவதிகள்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் சூம் தொழில்நுட்பம் ஊடாக இளைஞர் யுவதிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, போராட்டம் நடத்தும் போர்வையில் வன்முறைகளில் ஈடுபட்டு அரசியல் அதிகாரத்தை அபகரித்துக் கொள்வதற்கு முயற்சித்த குழுக்கள் தேவையானால் பாவமன்னிப்பு பெற்றுக் கொண்டு அரசாங்கத்தின் எதிர்கால பயணத்தோடு இணைந்து கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மாலைதீவில் கஞ்சா... (03ஆம் பக்கத் தொடர்)

17 நாட்களை சிறையில் கழித்திருந்த நிலையில், அந்த தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் 22 ஆண்டுகள், நான்கு மாதங்கள் மற்றும் 13 நாட்கள் சிறையில் கழிக்கவேண்டியிருக்கும்.

அபராதத் தொகையை 12 மாதங்களுக்குள் மாலைத்தீவு உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## லிற்றோ கேஸ் நிறுவனம்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு தொகை செலுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த வருடத்தின் டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையாக அந்தக் கடனை மீள செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

லிற்றோ கேஸ் நிறுவனம் விநியோக நடவடிக்கைகளை சுமுகமாக முன்னெடுத்துச் செல்வதற்காக உலக வங்கியிடமிருந்து 70 மில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதிலிருந்து 750 கோடி ரூபாவையே தற்போது நிறுவனம் திறைசேரிக்கு வழங்கி யுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். லிற்றோ கேஸ் நிறுவனமானது கடந்த செப்டம்பர் மாதத்திலும் 650 கோடி ரூபா வை திறைசேரிக்கு வழங்கியுள்ளதாகவும் அத்துடன் இதுவரை 1400 கோடி ரூபா கடன் மீள செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் முழுமையான கடனையும் செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டுபாய்க்கு தொழிலுக்குச் சென்ற...

ஐம்பது பெண்கள் டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகத்தில் சிக்கித் தவிக்கின்றனர். மீதமுள்ளவர்கள் ஒரு வீட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் ஜெனரல் நலிந்த விஜேரத்ன தெரிவித்தார்.

டுபாய்க்கு பணி நிமித்தம் சென்றவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா விசாவில் வந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சூதாட்ட, பந்தய நிலை...

அத்துடன், பந்தய (நேரலை) நிலையங்களுக்கான வருடாந்த வரி 6 லட்சம் ரூபாவிலிருந்து 10 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையங்களின் வருமான வரி 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பந்தய உப முகவர் நிலையங்களுக்கான வருடாந்த வரி 4 லட்சம் ரூபாவிலிருந்து 5 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு நேரலையற்ற பந்தய நிலையங்களுக்கான வரி 50,000 ரூபாவிலிருந்து 75,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## அட்டாளைச்சேனையில்...

ஆளங்குளம் வீதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதான நபர் அட்டாளைச்சேனை 5 பகுதியை சேர்ந்த 73 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசமிருந்து ஐஸ் போதைப்பொருள் 9 கிராம் 880 மில்லி கிராம் உட்பட சந்தேக நபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கை விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சந்தேக நபர் சான்று பொருளுடன் நீதிமன்ற விசாரணைக்காக அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் முச்சக்கர ...

தற்போது, இலங்கையில் 10 இலட்சத்து 80,000 முச்சக்கர வண்டிகள் உள்ளன. அவற்றில் சுமார் 400,000 முச்சக்கர வண்டிகள் தொழில்முறை பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதாக முச்சக்கர வண்டி சங்கங்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 300,000 பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 13 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகளையும் பதிவு செய்ய முடியாத பட்சத்தில் பொலிஸில் பதிவுசெய்து முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டாவை வழங்க இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகளை துரிதமாக தெளிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதி தொழிற் சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## எட்டு தமிழ் கைதிகளுக்கு...

முன்னதாக ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் தலைமையீட்டின் பேரில் கைதிகள் தொடர்பான தகவல் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. கைதிகள் விடுதலை தொடர்பான ஒப்புதல் அறிக்கை குறித்து நீதி அமைச்சர் மற்றும் அவர் மூலமாக சட்டமா அதிபர் ஆகியோரின் கருத்து பெறப்பட்டதன் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த தமிழ் கைதிகளில் மூவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கருத்தை வினவியுள்ளதோடு அவரின் இணக்கப்பாட்டுடன் இவர்களின் விடுதலைக்கு தேவையான ஆரம்ப கட்ட முன்னெடுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய 04 கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இவர்கள் எதிர்காலத்தில் அனுபவிக்க வேண்டியுள்ள தண்டனை காலத்தைக் குறைத்து இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டிருந்த மற்றுமிரு தமிழ் கைதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்படவுள்ளதுடன் மேலும் இரு கைதிகள் ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் எதிர்வரும் காலங்களில் விடுவிக்கப்படவுள்ளனர்.

30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 22 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மூன்று கைதிகள், 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தற்போது 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஒருவர், 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 14 ஆண்டுகள் தண்டனை அனுபவித்து ஒருவர். 05 வருட சிறைத்தண்டனைக்காக 14 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கும் இருவர் மற்றும் 19 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 11 வருடங்களாக தண்டனை அனுபவித்து வரும் ஒருவர் இதில் உள்ளடங்குகின்றனர்.

## ஐந்து மாவட்டங்களுக்கான...

தம்மை பாதுகாத்துக் கொள்வதில் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய வங்காள விரிகுடாவில் நிலவிய தாழமுக்கம் சூறாவளியாக உருவெடுத்துள்ள நிலையில் அதற்கு சீட்ரேங்க் என பெயரிடப்பட்டுள்ளது. அதன் பாதிப்புகள் காரணமாக எதிர்வரும் இரண்டு தினங்களுக்கு மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க கடல் தொழிலில் ஈடுபடுபவர்கள் கடற் படையினர் பாதுகாப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடும் மழை பெய்யும் வேளைகளில் மண் சரிவு, குன்றுகள் சரிந்து விழுதல், பாரிய கற்கள் உருளுதல், பூமி வெடிப்பு போன்ற அனர்த்தங்கள் ஏற்படக்கூடும் என்றும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பாக செயல்படுமாறும் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் மீலாத்விழா



**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஏற்பாடு செய்த மீலாத் விழா பாடசாலையின் அதிபர் திருமதி நஜீமா ஹாறுதீன் தலைமையில் பாடசாலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேய்க் ஏ.எம்.றஹ்மத்துள்ளா, குர்ஆன் மனனமிட்ட ஹாபிழா ஏ.ஏ.பாத்திமா நபீஹாவுக்கும் ஏனைய மாணவிகளுக்கும் பரிசில்களை வழங்கிவைத்தார்.

இதன் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த மாணவிகள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர், இந்நிகழ்வில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## SJB யிலும் இரட்டை... (03ஆம் பக்கத் தொடர்)

அரசியலமைப்புச்சட்டத்திற்கு அமைய செயற்படுவோம். இது சம்பந்தமாக எமது சட்டத்தரணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானம் ஒன்றை எடுப்போம் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 22வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட முடியாது என்பதுடன் இலங்கையில் உயர் பதவிகளையும் வகிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## உலகின் சிறந்த ... (03ஆம் பக்கத் தொடர்)

உலக பல்கலைக்கழக தரப்படுத்தலிலேயே பேராதனை பல்கலைக்கழகம் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

டைம்ஸ் உயர்கல்வி உலக பல்கலைக்கழக தரப்படுத்தலானது உலகின் மிக முக்கியமான தரப்படுத்தல்களில் ஒன்றாகும் என்பதுடன் 13 செயற்திறன் தர நிலைகளை மதிப்பீடு செய்தே இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த வகையில் கற்பித்தல், ஆய்வு சர்வதேச கண்ணோட்டம் ,அறிவு பரிமாற்றம் என்ன நான்கு பிரிவுகளின் கீழ் இந்த தரநிலைகள் மதிப்பிடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இங்கிலாந்தின் புதிய...

ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்த்த போதும் அந்த ஆதரவு கிடைக்காததால் அவர் போட்டியிலிருந்து விலகிக் கொண்டுள்ளார்.

அதனையடுத்து ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவராகவும் இங்கிலாந்தின் அடுத்த பிரதமராகவும் ரிஷி சுனக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் விரைவில் பதவியேற்கவுள்ளதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லிற்றோ Gas விலை அடுத்த...

விலைச் சூத்திரத்தின் படி ஒவ்வொரு மாதத்திலும் 5ஆம் திகதி விலையில் திருத்தங்களை மேற்கொள்வதற்குதீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த மாதம் சமையல் எரிவாயுவின் விலையை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

12.5 கிலோ கிராம் லிற்றோ கேஸ் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை தற்போது சந்தையில் 4,280 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் அந்த நிறுவனம் கடந்த அக்டோபர் 5ஆம் திகதி அதன் விலையை 271 ரூபாவால் விலைக் குறைப்பு செய்திருந்தது.

அதற்கிணங்க எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பகுதியில் மேலும் ஒரு தொகை விலைக் குறைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரட்டைக் குடியுரிமை தொடர்பில்...

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தின் கீழ் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட முடியாது. பாராளுமன்ற உறுப்பினர் இரட்டைக் குடியுரிமை உள்ளவரா இல்லையா என்பது குறித்து உடனடியாக முடிவெடுக்க முடியாது என்று கூறியுள்ள தேர்தல் ஆணைக்குழு, அத்தகைய நபர்கள் உடனடியாக இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது. எதிர்வரும் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் போது இரட்டைக் குடியுரிமை வைத்திருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் எனவும் அவ்வாறான வேட்பாளர்கள் இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்கினால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கையில் இன்று...

நாட்டின் தென்பகுதிகளில் சூரிய கிரகணம் தென்படாது எனவும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சூரிய ஒளி மிகவும் குறைவாக இருக்கும் போது ஏற்படும் பகுதியளவு சூரிய கிரகணத்தால், அதை வெறும் கண்களால் பார்க்க முடியும் என்றும் அவர் கூறினார். இன்னும் 5 வருடங்களின் பின்னரே இனி இலங்கையில் மீண்டும் சூரிய கிரகணம் ஒன்று தோன்றும் எனவும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின்...

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ள போதிலும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

# லேக்ஹவுஸ் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கல்

























திகதி 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4917
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,553,940.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 6 3 1 1 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.32,130,517.00

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1372
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,546,480.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 9 5 5 9 3 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,616,549.60

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 947
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,679,060.00
வெற்றி இலக்கினம் Z வெற்றி இலக்கங்கள் 21 46 56 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,804,282.80

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 226
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,678,440.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 02 18 41 58 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,518,030.60

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3159
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,452,800.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 15 34 39 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,291,142.80

**கோடி 27 + Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1265
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,500,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.277,410,950.00
ஆங்கில எழுத்து E சுப்பர் நம்பர் 08 வெற்றி எண்கள் 02 26 37 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை - 2019, 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான பாடசாலை, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை - 2019/2020/2021/2022ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்களை பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட பாடசாலை விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட பாடசாலை அதிபர் ஊடாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 12 இல் கல்வி கற்ற விண்ணப்பதாரிகள் தங்களது பாடசாலைகளுக்கு தமது விவரங்களை வழங்க வேண்டும். 2022.10.20ஆம் திகதி - தொடக்கம் 2022.11.04ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. I. பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்காக அதிபர்களுக்கான அறிவுறுத்தல்கள்

(அ) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைதளத்தில் நுழைந்து “எமது சேவை” என்பதின் கீழுள்ள “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்த பின்னர் GIT - 2019, 2020, 2021, 2022(2023). Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DOE" இற்குள் நுழைந்து “நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)” ஐ Click செய்த பின்னர் GIT - 2019, 2020, 2021, 2022(2023). Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- https://onlineexams.gov.lk/eic I Click செய்து நுழைக.

(ஆ) கிடைக்கப்பெறும் window இல் School Account Login இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக. (உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க.)

II. தனிப்பட்ட பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தனிப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தல்கள்

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக https://onlineexams.gov.lk/eic/index.php/clogin/psch என்பதில் கிடைக்கப்பெறும் School Account Login இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ பயன்படுத்தி முறைமைக்குள் நுழைக.

03. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த வருடங்களில் தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

* 2019ஆம் ஆண்டு - 2019ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயின்ற மாணவர்கள் மட்டும்.
* 2020ஆம் ஆண்டு - 2020ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயின்ற மாணவர்கள் மட்டும்.
* 2021ஆம் ஆண்டு - 2021ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி பயின்ற மாணவர்கள் மட்டும்.
* 2022ஆம் ஆண்டு - 2022ஆம் ஆண்டில் (இவ்வாண்டு) தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டும்.

**2019ஆம் ஆண்டுக்கான தனிப்பட்ட பாடசாலைகளுக்குரிய பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் 2019 ஆம் ஆண்டுக்காக தனிப்பட்ட பாடசாலைகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கத் தேவையில்லை. 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்காக பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் சகல மாணவர்களையும் தரவுத்தளத்திற்குள் உள்ளடக்கிய பின்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் புதிதாக மாணவர்களை உள்ளடக்க முடியாது.**

04. விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கு முன்னர் நிகழ்நிலை முறைமையில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை (அறிவுறுத்தல்களும் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களும்) நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

05. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிமூலங்களிலும் இடம்பெறும்.

06. விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது சரியாக பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகரம், மொழிமூலங்களில் எக்காரணத்திற்காகவேனும் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் விண்ணப்பங்களை பிழையின்றி சரியாக பூரணப்படுத்துவது அதிபர் / ஆசிரியரின், தனிப்பட்ட பாடசாலை அதிபரின் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

07. நிகழ்நிலை முறைமையில் பூர்த்தி செய்யப்பட்ட தகவல்களும் அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களும் சரியானவையா என உறுதிசெய்து மாணவரிடம் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும். அப்பிரதியில் பாடசாலை அதிபர்/ - தனிப்பட்ட பாடசாலை அதிபர் கையொப்பமிட்டு பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்வதுடன் நிகழ்நிலை முறைமையில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் பிரதியிலுள்ள சகல தகவல்களும் சரியானவையென பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

08. இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**விசாரணை :**

| | |
|---|---|
| நேரடி தொலைபேசி இலக்கம் | 011-2784208/ 011-2784537/ 011-2786616 |
| தொலைநகல் இலக்கம் | 011-2784422 |
| துரித அழைப்பு இலக்கம் | 1911 |
| பொதுத் தொலைபேசி இலக்கம் | 0112786200/ 0112786201/0112786202 - நீடிப்பு 263, 265, 280, 282, |

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/32/GIT/2019**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2022.10.21ஆம் திகதி

# போதைப்பொருளை கட்டுப்படுத்த இராணுவத்தில் விசேட படைப்பிரிவு

**யாழ். விசேட நிருபர்**



வடக்கில் அதிகரித்துவரும் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்த யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தரவின் தலைமையில் விசேட படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாக பலாலி இராணுவ தலைமையகம் அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில்,

வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கஞ்சா தொகையானது கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணப்பகுதிக்கு பாரியளவில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இளம்சந்ததியினர் அவற்றுக்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது.

அந்தவகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தர தலைமையில் விசேட படைப்பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் ஊடாக யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்தல், கைதுசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

51 ஆவது காலாட் படைப் பிரிவிற்கு கீழ் காணப்படுகின்ற ஜே 150 கிராமசேவகர் பிரிவின் மாதகல் கிழக்கு பகுதியில் 513 ஆவது காலாட் படைப்பிரிவின் 16 ஆவது கெமுணு ஹேவா படையணினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 100 கிலோக்கிராம் கஞ்சாவுடன் அதனை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக விசேட அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் இதுபோன்ற கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக யாழ். பாதுகாப்புப்படைத் தலைமையகத்துக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பொதுமக்கள் வழங்க வேண்டும். அவை தொடர்பான மேலதிக தகவல்களை பாதுகாப்பு படைத்தலைமையகம், வசாவிளான் எனும் முகவரிக்கோ அல்லது 0766907751 எனும் தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்எனகுறிப்பிடப்பட்டுள்ளது.



தீபாவளி தினத்தினை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சிறப்பு விசேட பூஜை வழிபாடுகள் நேற்றையதினம் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்
(படம்: யாழ்.விசேட நிருபர்)

### முல்லைத்தீவு கிராமப்புறங்களில்

# கைவிடப்பட்ட விவசாய காணிகளை ஆக்கிரமித்த வன வளத்திணைக்களம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பகுதியில் பொதுமக்களின் விவசாய காணிகள், கைவிடப்பட்ட குளங்கள் உள்ளடங்களாக சுமார் இரண்டாயிரம் ஹெக்டேயருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு வனவளத்திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளாக எல்லையிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலைப்பாணி, மூன்று முறிப்பு மற்றும் சிராட்டிகுளம், பறங்கியாறு ஆகிய பகுதிகள் நீண்டகாலமாக பொதுமக்களால் பயிர்செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

2009ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலைகளால் கைவிடப்பட்ட காணிகள் உள்ளடங்களாக சுமார் இரண்டாயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான பகுதிகள் வனவளத்திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

குறிப்பாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மூன்றுக்கும் மேற்பட்ட குளங்கள் மீள்குடியமர்வின் பின்னர் பெருந்தொகை நிதிகளில் புனரமைக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்தும் அவற்றின் கீழான வயல் காணிகள் விடுவிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மேலும் பல காணிகள் இவ்வாறு எல்லையிடப்பட்டுள்ளன.

# கட்டுத்துப்பாக்கியில் சிக்குண்டு ஒருவர் படுகாயம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் கட்டுத்துப்பாக்கியில் சிக்குண்டு ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

31 வயதுடைய ப.நிபோதரன் என்பவரே குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்திருந்தார்.

நேற்றுமுன்தினம் (23) இரவு வவுனியா, ஓமந்தை, சின்னக்குளத்தில் மீன்பிடிக்க சென்று மீண்டும் காட்டு வழியாக வீடு திரும்பும் போதே கட்டுத்துப்பாக்கியில் சிக்குண்டுள்ளார்.

இதன்காரணமாக இடது காலில் பலத்த காயத்துக்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அல்லாரை வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்





தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம் (IFTF), ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன்,IMHO ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் யா/அல்லாரை அ. த வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை மாணவர்களின் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகளுக்காக கடந்த 19ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.வித்தியாலய அதிபர் தேவரதி சுதேஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் கே.குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் ,IFTF பிரதிநிதி திரு. செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து விழாவை சிறப்புற வைத்தனர்.

# வள்ளிபுனத்தில் முறையான வடிகாலமைப்பு வசதிகளின்மையால் மக்கள் அவதி



**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

வள்ளிபுனத்தில் சரியான வடிகாலமைப்பு இன்மையால் மக்கள் மழைக்காலங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழைபெய்து வருகின்றது. புதுக்குடியிருப்பு இடைக்கட்டு கிராமத்தில் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இடைக்கட்டு முதன்மை வீதியை வெள்ளம் மூடியுள்ளதால், வீதியால் செல்லமுடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இடைக்கட்டு வீதியின் அருகிலுள்ள ஒரு சிறிய குளம் வெள்ளத்தால் நிரம்பியுள்ளது. குளத்தின் மேலதிக நீர் தனியார் காணியொன்றின் ஊடாகவே கடந்த காலத்தில் வழிந்தோடிவந்தது. தனியார் காணி மண்போட்டு நிரப்பப்பட்டுள்ளதால் மழைவெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் வீதியினை மூடியுள்ளதுடன் மக்களின் வீடுகள் மற்றும் வயல் நிலங்களுக்குள் புகுந்து நிரம்பியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

### மனைவி மீன் வெட்டுவது சரியில்லை

# வாய்த்தர்க்கத்தில் கத்தியால் குத்திய கணவன்

### இருவர் படுகாயம்

**யாழ்.விசேட நிருபர்**

மீன் வெட்டுவதில் தம்பதியினரிடம் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிவடைந்ததில், இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மனைவி சமையலுக்காக மீன் வெட்டிக் கொண்டிருந்த வேளை , கணவன் மனைவி மீன் வெட்டும் முறை சரியில்லை என குறை கூறியுள்ளார். அதனால் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் கணவன், மனைவியின் கையில் இருந்த கத்தியை பறித்து குத்தியுள்ளார். கணவனின் கையிலிருந்த கத்தியை மனைவி மீண்டும் பறித்து கணவனை குத்தியுள்ளார்.

# போதைப்பொருளை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே உடந்தையாக இருக்கின்றனர்



போதைப்பொருள் பாவனையை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரியவந்தால் அதுதொடர்பாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பாவனை தற்போது தலைவிரித்தாடுகின்றது. இதன் காரணமாக 10 இளைஞர்களுக்கு மேல் உயிரிழந்துள்ளனர். 140 பேர் வரையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த காலத்தில் வன்முறை ஒழிப்போம் போதைப்பொருளை தடுப்போம் எனும் தொனிப்பொருளில் நாம் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருந்தோம். கொரோனா தொற்று காரணமாக அதனை தொடர்ச்சியாக செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனாலும் தற்போது போதைப்பொருள் பாவனை என்பது தலைக்கு மேலே சென்று விட்டது. இதன்காரணமாக மீண்டும் அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதுடன் மூன்று விதமாக மேற்கொள்ளவுள்ளோம். முதலாவது இளையவர்களுக்கு புத்திமதி வழங்கும் ஒரு விழிப்புணர்வு நிகழ்வினை பாடசாலை மட்டத்தில் நடாத்தல், இரண்டாவது போதைப்பொருள் பாவனையில் சிக்கி உள்ளவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பான விடயங்களை மேற்கொள்ளல், மூன்றாவது போதைப்பொருள் பாவனையை தடுக்கவேண்டும். இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# எமது பிள்ளைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தீபாவளி இல்லை

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்

**ஓமந்தை விஷேட நிருபர்**

காணாமல் போன எமது பிள்ளைகள் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கப்பெறும் வரை எமக்கு தீபாவளி இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று தெரிவித்தனர். வவுனியாவில் பிரதானதபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீபாவளி திருநாளான நேற்றும் தமது அவர்களுக்கான நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நமது சைவ மதத்தில், இது கிருஷ்ணர் மற்றும் தேவி சத்யபாமாவின் அரக்கன் நரகாசுரனை வென்றதாக கொண்டாடப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 13 வருடங்களாக எமது தமிழ் தேசியத்தை கொன்று குவித்த பேய்கள். அவர்கள் ஒருபோதும் அரசியல் தீர்வைக் கேட்கவில்லை, சிங்களவர்கள் தீர்வை வழங்குவார்கள் என்று காத்திருப்பதாக அவர்கள் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களை முட்டாளாக்கி, ஒவ்வொரு முறையும் அடுத்த தீபாவளிக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம் என்றே கூறியது. நெடுங்கேணியில் சிங்களக் குடியேற்றத்தின் விளைவே குருந்தூர் மலை பிரச்சினைக்கு காரணம். நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழர் தாயகத்தில் 1000 பௌத்த விகாரைகளைக் கட்டுவதற்கு பட்ஜெட்டில் வாக்களித்தது. தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் செய்த சேதங்கள் பலவற்றை நாம் பட்டியலிடலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

# யாழ். பல்கலையில் பகிடிவதையில் ஈடுபட்ட 19 மாணவர்களுக்கு வகுப்புத்தடை



**யாழ் விசேட நிருபர்**

யாழ்.பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் துன்புறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட 19 சிரேஷ்ட மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகள் இடம்பெற்றுவருகின்ற நிலையில், புதிய மாணவர்களைப் பகிடிவதைக்குட்படுத்திய சிரேஷ்ட மாணவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இவர்களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற்று குற்றம் நிரூபிக்கப்பட்டமையால் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி கலைப்பீடத்தைச் சேர்ந்த 14 பேருக்கு ஆறுமாத கால வகுப்புத்தடையும், தொழில் நுட்பபீடத்தைச் சேர்ந்த 4 பேருக்கு இரண்டு வருடகால வகுப்புத்தடையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக்கெதிரான தண்டணைசாசனத்தின் படி, குற்றங்களின் தன்மைக்கேற்ப விசாரணைக் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக்காலத்தை மாணவர் ஒழுக்காற்றுச் சபை சிபாரிசு செய்தது. அந்த சிபாரிசுகளுக்கமைய பேரவையினால் தண்டனை உறுதிசெய்யப்பட்டுள்ளது. பேரவையின் தண்டனை அறிவிப்பு அந்தந்த பீடாதிபதிகளின் ஊடாகத் துணைவேந்தரால்மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக்காலத்தினுள் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்குள்ளும் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும் தண்டனைக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பவராயின் விடுதியை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்த மாணவர்களுக்கான வகுப்புகள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



# ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சாட்சியம்

(காத்தான்குடி தினகரன் நிருபர்)

வலிந்து காணாமலக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொர்பான விசாரணைகளை மேற்கொள்ளும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள்,கடந்த சனி,ஞாயிற்கறுக்கிழமை களில் காத்தான்குடியில் நடைபெற்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதியை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி மற்றும் ஏறாவூர் ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வலிந்து காணமாலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் இங்கு சாட்சிமளித்தனர்

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும். ஜனாதிபதி ஆணைக் குழு, சனிக்கிழமை (22) காலை காத்தான்குடிக்கு விஜயம் செய்து, காத்தான்குடி ஹோட்டல் பீச்வேயில் இந்த விசாரணைகளை ஆரம்பித்தது.

இதில், சனிக்கிழமை காலை தொடக்கம் இரவுவரை ஓட்டமாவடி மற்றும் ஏறாவூர் போன்ற பிரதேசங்களைச்சேர்ந்த வலிந்து காணமாலாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் சாட்சியங்களை வழங்கினர். காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தமது சாட்சியங்களை வழங்கினர்.

இவ்வாணைக்குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். டி.நவாஸ் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் சாட்சியமளிப்பதற்காக, காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்,உரியவர்களிடம் பதிவுகளை மேற்கொண்டிருந்தது.

யுத்தகாலத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம், இதுதொடர்பான இறப்பு அத்தாட்சிப்பத்திரம், மற்றும் பொலிஸ் முறைப்பாடு உள்ளடங்கலான ஆவணங்களின் பிரதிகளையும் ஆணைக்குழு பெற்றுக் கொண்டது.

விசாரணைகள் நடாத்தப்பட்ட காத்தான்குடி ஹோட்டல் பீச் வே வளாகத்தில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பொலிஸார் பாதுகாப்புக்கடமையிலும் ஈடுபட்டனர்.

## துஸ்யந்தனின் சகோதரர் காலமானார்



(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

பாண்டிருப்பு தினகரன் நிருபர் துஸ்யந்தனின் சகோதரர் முருகேசு நேசராஜா தனது 64 வயதில் கடந்த சனிக்கிழமை (22) இரவு கல்முனை ஆதார வைத்தியசாலையில் காலமானார்.

இவர், கல்முனை பாண்டிருப்பை பிறப்பிடமாகவும், பெரிய நீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.இலங்கை மின்சார சபையின் கல்முனைக்கிளையில் மின்மானி வாசிப்பாளராக கடமையாற்றி,ஓய்வுபெற்றிருந்தார்.இந்நிலையில், சுகயீனம் காரணமாக வைத்தியசிலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பலனின்றி இவர், இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள்,பிரதேச அரசியல்வாதிகள்,ஆலயங்களின் தலைவர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், ஊர்ப்பிரமுகர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். பெரியநீலாவணை இந்து மயானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு



(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில், தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சாதனை புரிந்த மாணவியையும்,

குறித்த பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறந்த அடைவு மட்டம் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கே.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வெற்றிச்சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அத்தோடு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் (157) பெற்று சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை படைத்த என். அதா சரீஹ் என்ற மாணவிக்கு கருமலையூற்று ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம். ஆசாத், துவிச்சக்கர வண்டி ஒன்றையும் நன்கொடையாக வழங்கினார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் கலந்துகொண்டார். கல்வி அதிகாரிகள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,பழையமாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் இதில்,கலந்து சிறப்பித்தனர்.இம்மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களும் இதன்போது கொளரவிக்கப்பட்டனர்.

## மாகாண ஆங்கில மொழித்தின போட்டிகள்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண ஆங்கில மொழிப் போட்டிகள் மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பட்டிருப்பு தேசிய பாடசாலையில், மாகாண கல்விப்பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் நடைபெற்றது. களுவாஞ்சிகுடி பிரதானவீதியிலிருந்து பேண்ட் வாத்தியம் முழங்க அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இதில், கிழக்கு மாகாணத்திலுள்ள நான்கு கல்வி மாவட்டங்களிலிருந்தும் மாகாண போட்டிக்குத் தெரிவான மாணவர்கள் கலந்து கொண்டனர். மாகாண ஆங்கில மொழித்தின போட்டிகள் இம்முறை முதல் முறையாக பட்டிருப்பு கல்வி வலயத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சியை முடித்த முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சான்றிதழ்கள்

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

சேவைக்காலப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அண்மையில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஷ்ஷான் தலைமையில் , முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.இம்டாட்டின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இதன்போது இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 22 முன்பள்ளிப் பாடசாலைகளைச் சேர்ந்த 40 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## உழவு இயந்திரம் தடம்புரண்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மணல்சேனை நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணல்பிட்டி பிரதேசத்தில், உழவு இயந்திரம் தடம் புரண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை (23) பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வம்மியடியூற்று திக்கோடை பிரதேசத்தைச்சேர்ந்த சண்முகம் வினோராஜ் வயது 31 என்பவரே இவ்விபத்தில் பலியானார்.

தாயாரின் வீடான பண்டாரியவெளி பிரதேசத்திலிருந்து, மனைவியின் வீட்டுக்கு உழவு இயந்திரத்தில் வந்தபோதே இவ்விபத்து நிகழ்ந்தது. கட்டுப்பாட்டையிழந்து உழவு இயந்திரம் தடம் புரண்டதில் படுகாயம் அடைந்த இவர், மகிழடித்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில்,சிகிச்சைப்பலனின்றி இவர், உயிரிழந்தார். இந்நபர், கடந்த மாதமே திருமணமானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## சம்புநகர் அல்மினா வித்தியாலயத்தில் மீலாத் விழா; பரிசுகளும் வழங்கி வைப்பு

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்புநகர் அக் / அல் மினா வித்தியாலயத்தில் மீலாத்விழா, பரிசளிப்பு நிகழ்வுகள் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை (20) நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில், கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியின் பொதுச் செயலாளரும்,ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளருமான மௌலவி யூ.எம்.நியாஸி, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.மீலாத் விழா தொடர்பில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலும்,மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.இத்தினத்தை முன்னிட்டு, விஷேடமாக தயார் செய்யப்பட்ட உணவுப் பொதிகளும் நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஏ.பி.கமால்டீன்,அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர் யு.கே.ஜுனைட்,பாடசாலையின் கலாசார குழுவின் தலைவர் ஆசிரியர் மௌலவி ஜே.றிம்சான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்ஹாபிழ் எஸ்.எம்.பாயிஸ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.எல்.றிஸ்வான், உதவி அதிபர் எம்.எச்.அப்துல் ஹை, சம்பு நகர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.பி.சலாவுதீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச்செயலாளர் ஏ.எல்.எம்.அக்ரம், உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



## பல்துறை சாதனையாளர்கள் கௌரவிப்பு

(சாய்ந்தமருது விசேட நிருபர் )

மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று பல்கலைக்கழத்திற்கு தெரிவானோர் அடங்கலாக பல்துறைகளில் பிரகாசித்தவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு, (மாளிகை மரகதங்கள்) அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அல் ஹுஸைன் பழைய மாணவர்களின் ஒருங்கமைப்பில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கணினி தொழில்நுட்ப பேரவை பணிப்பாளரும், அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமரின் தலைமையில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சாதனையாளர்கள், அதிதிகள் ஆகியோர் கலாசார பாரம்பர்யங்களுடன் வரவேற்கப்பட்டனர். இந்நிகழ்வில் மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் முன்னிலை அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மேலும், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம். அஸ்மீர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்களான ஜிஹானாஆலிப், நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் எஸ்,ரி,டீ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டாக்டர் தில்ஷான் நிஸாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் அபராதம் விதிப்பு



(ஒலுவில் விஷேட நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில், பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்ளுக்கு எதிராக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு தலா 08 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

கட்டாக்காலி மாடுகள் பொது இடங்கள், விளையாட்டு மைதானம், வர்த்தக நிலையங்கள், மதஸ்தலங்கள், வீதிகள் என்பவற்றை அசுத்தப் படுத்துவதுடன், மக்களுக்கு பெரும் அசௌகரிகங்களை ஏற்படுத்தி வருவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதையடுத்து, கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் நடவடிக்கைகளை அக்கரைப்பற்று மாநகர சபை முன்னெடுத்திருந்தது.

இதன்போது,22 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.இதன், உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதே, இவர்களுக்கு எதிராக இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## அம்பாறை மாவட்டத்தில் தீபாவளி திருநாள் கொண்டாட்டங்கள்



(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இம்முறை இலங்கை வாழ் இந்து மக்களாலும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அம்பாரை மாவட்டதில் தீபாவளி திருநாள் களைகட்டியது. அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயம், அக்கரைப்பற்று ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயங்களில் விஷேட பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன. பக்தர்களின் வருகை குறைவடைந்த நிலையிலும் பிரசன்னமாகியிருந்த பக்தர்களோடு வழிபாடுகள் இடம்பெற்றன.

## கிழக்கின் முன்னேற்றம், அல்ஹாமியாவின் அபிவிருத்திக்கு சவூதிஅரேபியா உதவும்

### கல்முனை பிரதி மேயரிடம் சவூதி தூதுவர் உறுதி

(கல்முனை விசேட நிருபர்)



கிழக்கு மாகாணத்தின் முன்னேற்றத்திற்கும் கல்முனை அல்ஹாமியா அரபுக் கல்லூரியின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் சவூதி அரேபியாவின் அனுசரணையை பெற்றுத்தருவதற்கு உதவுவதாக, இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமௌட் என்.அல் கஹ்தானி, கல்முனை மாநகர பிரதி மேயர் ரஹ்மத் மன்சூரிடம் உறுதியளித்துள்ளார்.

கல்முனை அல்ஹாமியா அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவுக்கு சவூதி அரேபிய தூதுவரை பிரதம அதிதியாக அழைப்பதற்கென, அவரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு உறுதியளித்ததாக பிரதி மேயர் தெரிவித்தார்.

இச்சந்திப்பு வியாழக்கிழமை (20) கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இக்கல்லூரியின் உட்கட்டமைப்பு தேவைகள் பற்றி கேட்டறிந்து கொண்ட தூதுவர், தனது கல்முனை விஜயத்தின்போது அவற்றை நேரடியாக கண்டறிந்து, தூதரகத்தின் ஊடாக நிறைவேற்றித் தருவதற்கு உதவுவதாக தெரிவித்தார். இக்கல்லூரியின் விசேட கல்வித் திட்டங்களுக்கு உதவுவதற்கான ஆர்வத்தையும் தூதுவர் வெளிப்படுத்தினார். மேலும்,இக்கல்லூரியிலிருந்து வெளியாகும் மாணவர்களுக்கு சவூதி அரேபியாவில் தகுந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு உதவுவதாகவும் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

# நகர்வலம்



## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஐ.மு.சங்க ஏற்பாட்டில் நிகழ்வுகள்

ஏ.எஸ்.எம்.ஜாவித்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முக்கிய நிகழ்வுகளை கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வத்தளை ஹுனுபிடிய ஸாஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிலையில் ஏற்கனவே நடைபெற்ற தமிழ் மொழியிலான கட்டுரை போட்டி மற்றும் சிங்கள மொழியிலான பேச்சுப் போட்டி இரு போட்டிகளிலும் முதல் மூன்று ஸ்தானங்களை பெறுவோருக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட உள்ளதுடன் போட்டிகளில் கலந்து கொண்ட சகலருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் வளவாளரும் பன்னூல் ஆசிரியருமான டாக்டர் ரவூப் ஸெய்ன் (நளீமி) சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

கொழும்பு ஸீனத் ட்ரேடிங் கம்பனி உரிமையாளர் அல் ஹாஜ் மாஹிர் பிரதம அதிதியாகவும் சங்கத்தின் போஷகர்களான மேலதிக நீதிமன்ற நீதிபதி அல் ஹாஜ் எம்.எம்.ஏ. கபூர், முன்னாள் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அல் ஹாஜ் ஏ. எஸ். மொஹமத், முன்னாள் தேர்தல் ஆணையாளர் அல் ஹாஜ் எம்.எம். முஹம்மத் அவர்கள் உட்பட விசேஷ அதிதிகளாக ஜே ஜே பௌன்டேஷன் உரிமையாளர் அல்ஹாஜ் ஹனீப், டவர் மண்டபத்தின் பணிப்பாளரும் புத்தக பூங்கா நிரவனருமான அல்ஹாஜ் ஹாஷிம் உமர், முன்னாள் சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் அல் ஹாஜ் ஹுசைன் முஹம்மத், சட்டத்தரணி அல் ஹாஜ் ஜாவித் யூசுப், வசந்தம் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சி பொறுப்பாளர் அல் ஹாஜ் சித்தீக் ஹனீபா உட்பட இன்னும் பலர் கலந்து கொள்ள இருப்பதாக ஏற்பாட்டுக்குழுவின் உறுப்பினர் முஸம்மில் ஹாஜி தெரிவித்தார்.

### ஹொரணை கல்வி வலய தரம் ஐந்து மாணவர்களுக்கு

## கோபியோ நிறுவன ஏற்பாட்டில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

ஹொரணை கல்வி வலய தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு ஹொரண தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் G.T.C. ஜீவயோஹினி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. களுத்துறை மாவட்டத்தில் தோட்டப்புறப் பாடசாலை மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குத் தேவையான பரிகாரங்களையும் உதவிகளையும் செய்து வரும் இலங்கை கோபியோ நிறுவனத்தின் கல்வி செயற்பாட்டுப் பொறுப்பாளர் V.K.பாலசுப்பிரமணியத்தின் பூரண ஏற்பாட்டில் இத்தொடர் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது.

இதனை விரிவுரையாளர் பிரேம்குமார் நடாத்தி வருகிறார். இக்கருத்தரங்கின் நோக்கம் களுத்துறை மாவட்டத்தில் தோட்டப்புறப் பாடசாலை மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுதலும் நகர்ப்புறப் பாடசாலைகளில் எதிர்கால கல்வியைத் தொடர்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்தலுமாகும்.

மாணவர்களைப் பாடசாலை மட்டத்தில் இக்கருத்தரங்கில் பங்குபற்ற வைப்பதற்கு முழு முயற்சியாக செயற்பட்ட ஹொரண வலய ஆசிரிய ஆலோசகர் S.C.V. நமசிவாயம் மற்றும் ஆசிரியரும் சமூக சேவையாளருமான கே.கனகர் அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதிபர் M. ஆனந்த குமார், சமூக சேவையாளர் தனலெட்சுமி மாதவன் மற்றும் பெற்றோர்கள் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.





வரையறுக்கப்பட்ட சர்வதேச சமூக சேவை அமைப்பான 'Alliance Club' இன் வருடாந்த நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதன்போது விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் களுத்துறை மாவட்ட தலைவருக்கான நியமனக் கடிதம் சமூக சேவையாளர் தேசமானிய எம்.என்.எம். நஸ்ரீன் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டபோது எடுத்த படம். (படம்: படம் ருஸைக் பாரூக்)

## தீபாவளி திருநாளை முன்னிட்டு உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு கண்டியிலுள்ள 600 தமிழ் தோட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்குதல் மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் என்பன நேற்று கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 3 மில்லியன் ரூபா செலவில் கண்டி மாவட்டத்திலுள்ள தோட்டப்புற பிரதேசங்களிலுள்ள கலஹா, தெல்தோட்டை, பன்வில, ரங்கல, உன்னஸ்கிரிய உள்ளிட்ட பின்தங்கிய தோட்டப்புற தமிழ் மக்களுக்கு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள், சங்கீத கதிரை உள்ளிட்ட பல தீபாவளி பண்டிகை விளையாட்டுக்களும் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

–இக்பால் அலி

## வேப்பமடு மு. வித்தியாலயத்தில் மீலாத் விழா

புத்தளம் தினகரன் நிருபர்



தேசிய மீலாத் விழாவையொட்டிய விஷேட நிகழ்வுகள் பாடசாலை மட்டத்தில் அண்மையில் (20) புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம்.மனாஸ் தலைமையில் பாடசாலையில் மிக விமரிசையாக நடைபெற்றது.

ஆரம்ப பிரிவு மாணவர்களின் போட்டிகள், பகுதித் தலைவர் ஆசிரியர் ஏ. எம்.பளீலின் வழிக்காட்டல் மற்றும் விழாக் குழுவினரின் ஆலோசனையின் பிரகாரம் மஸூர் மண்டபத்திலும், இடைநிலை மற்றும் சிரேஷ்ட பிரிவினரின் நிகழ்வுகள் இஸ்லாமிய தின விழா குழு தலைவர் ஆசிரியர் அஷ்ஷெய்க் ஏ.ஓ.ஏ. கஹ்ஹார் மற்றும் விழாக் குழுவினரின் வழிகாட்டல், பாடசாலை முகாமைத்துவ குழுவினரின் ஆலோசனையின் பேரில் அஷ்ரப் மண்டபத்திலும் நடைபெற்றன. இதன்போது மாணவர்களின் விவாதம், அறிவுக் களஞ்சியம், பேச்சு மற்றும் இஸ்லாமிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இறுதியில் அஷ்ஷெய்க் எம்.எம். ஜெஸ்லியின் விஷேட மார்க்கச் சொற்போழிவும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### அகில இலங்கை தமிழ்த் தின போட்டி;

## நாட்டார் பாடல் போட்டியில் நாவற்காடு தமிழ் வித். முதலிடம்

புத்தளம் விசேட நிருபர்



2022ம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் தினப் போட்டிகளின் நாட்டார் பாடல் மாகாண மட்டப் போட்டியில் புத்தளக் கல்வி வலயத்திற்குட்பட்ட நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. கடந்த 15ம் திகதி சிலாபம் பேர்ணதெத் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாகாண மட்டப் இப்போட்டிகளின் "நாட்டார் பாடல் போட்டியில்" இப்பாடசாலை ஆறு பாடசாலைகளுடன் போட்டியிட்டு இவ்வாறு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் எம். ஆர். கிறிஸ்டன், எம். எம். ஹரினி, ஏ. எம். புளோரன்சியா, ஏ. என். கே. ஏ. றினோஷி, பீ. எல். சதா ஆகிய மாணவர்களே கலந்து கொண்டு முதலாமிடத்தைத் தம்வசப் படுத்திக் கொண்டுள்ளனர். இம்மாணவர்களை இப்போட்டிக்காக ஆசிரியரான திருமதி ஏ. ஆர். எம். ஏ. வினோஜினி சிறப்பான முறையில் தயார்ப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு 2022ம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் தினப் போட்டிகளின் மாகாண மட்ட நாட்டார் பாடல் போட்டியில் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட பு/நாவற்காடு றோ. க.த.வித்தியாலய மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (21) நாவற்காடு றோ. க.த.வித்தியாலய பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் பீ. ஜெனற்ராஜூ தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புத்தளம் வலய தமிழ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் கமலேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் மாகாணப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களும் அதனைப் பயிற்று வித்த ஆசிரியைக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கொழும்பு ஸாஹிராவில் தமிழ் தின நிகழ்வு

கொழும்பு 10, ஸாஹிராக்கல்லூரி தமிழ் பிரிவால் ஒழுங்கு செய்துள்ள தமிழ் தின விழா இம்மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் குழந்தை நல மருத்துவர் அர்ஷத் அஹ்மத் பிரதம அதிதியாகவும் சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் லரீனா அப்துல் ஹக் சிறப்புப் பேச்சாளராகவும் பங்கு பற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதோடு தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



ஹம்பாந்தோட்டை துறைமுக குழுமத்தினால் லுனுகம்வெஹெரை, கெந்தகஸ்மங்கட கிராமத்தில் வசித்து வரும் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை துறைமுக குழும அதிகாரிகளில் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது சுமார் 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)



சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்தில் இம்மாதம் 18ஆம் திகதி சிறப்பு தூதரக மற்றும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மதுரை மாவட்டம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம், கோபாலசமுத்திரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு 12 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் 111 குடியுரிமைச் சான்றிதழ்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

## கிந்தோட்டையில் மீலாத் விழா

வெலிகம தினகரன் நிருபர்

காலி கிந்தோட்டை குட்டிகதுவ வாலிபர் சங்கத்தினால் 11வது வருடமாக ஏற்பாடு செய்துள்ள மாபெரும் மீலாத் விழா கடந்த 22ம் திகதி சனிக்கிழமையும், கந்தூரி வைபவம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விமர்சையாக நடைபெற்றது.

கிராஅத், கஸீதா, பேச்சு மற்றும் இஸ்லாமிய கீதம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விழாவில் பிரதம பேச்சாளராக அஷ்ஷெய்க் முஹம்மது பாதுபி ஸூபி ஹஸரத் கலந்து சிறப்பித்தார்.

### ஓய்வூதிய திணைக்களம்:

## வடக்கு, வடமத்திய மாகாண பிரதேச அலுவலகங்கள் திறப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்



ஓய்வூதிய திணைக்களத்தின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான பிரதேச அலுவலகம் நேற்று முன்தினம் அநுராதபுரம் கச்சேரி கட்டிடத்தில் மாவட்ட அரச அதிபர் ஜனக்க ஜயசுந்தர அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் தமது ஓய்வூதிய சம்பளங்களை பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளது. இதன் மூலம் வடமத்திய மாகாணத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற அரச ஊழியர்களும் வடமாகாணத்தை சேர்ந்த அரச ஊழியர்களும் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஓய்வூதியம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு கொழும்புக்கு செல்லாது தமது மாகாணத்திலே செய்து கொள்ளும் வாய்ப்பினை அரசாங்கம் உருவாக்கி கொடுத்துள்ளது. எதிர்வரும் காலத்தில் அனைத்து மாகாணங்களிலும் ஓய்வுதிய திணைக்கள பிரதேச அலுவலகம் திறந்து வைக்கப் படவுள்ளது. இந் நிகழ்வில் ஓய்வூதியத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மற்றும் அநுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக கணக்காளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.




# மலையகத்தில் தீபாவளி பண்டிகை







(ஹற்றன் சுழற்சி,ஹற்றன் விசேட, பூஜாபிட்டிய தினகரன், ஊவா சுழற்சி,மாத்தளை சுழற்சி, கம்பளை நிருபர்கள்)

மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீபாவளி பண்டிகையை நேற்று வெகுவிமரிசையாக கொண்டாடினர்.

ஹற்றன் அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் ஸ்ரீ பூர்ணசந்திரானந்த குருக்கள் தலைமையில் தீபாவளி விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொதுமக்களும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்து மக்கள் தங்களது பண்டிகையை புத்தாடைகள் அணிந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டு, உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துகளை தெரிவித்து, வீடுகளில் சிறப்பாக கொண்டாடினர். தீபத்திருநாளை முன்னிட்டு மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் விஷேட பூஜைகளும், சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன. திருநாள் வழிபாடுகளில் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

தீபாவளி மற்றும் கேதார கோரி விரதத்தினை முன்னிட்டு பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ பத்திர காளியம்மன் கோயிலில் கோயில் பிரதானி பாண்டவ ஜோதீஸ் வேதி கலாநிதி சர்மா சுவாமி தலைமையில் நேற்று விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் இலங்கை சமசமாச கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி.திஸ்ஸ விதாரண கலந்து கொண்டார். கண்டி கட்டுகெலேபிள்ளையார் இந்து ஆலயத்திலும் நேற்று (24) விசேட சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. கம்பளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் விஷேட பூஜைகள் நடைபெற்றன.

## சீரற்ற காலநிலை
# நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு



ஹற்றன் விசேட நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை தொடர்ந்து மத்தியமலை நாட்டில் தொடர் மழை பெய்து வருகின்றது. காசல் ரீ நீர்த்தேக்கத்தில் நவீன பலுான் வான் கதவுகளையும் கடந்து அனைத்து வான் கதவுகளிலும் நேற்று அதிகாலை முதல் (24) நீர் வான் பாய்ந்து வருகின்றன.

இதேநேரம் ஏனைய நீர்த்தேக்கங்களான விலமசுரேந்திர கெனியோன், லக்ஸபான, உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுவதனால் ஆற்றுக்கு அருகில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மவுசாகலை பொல்பிட்டிய, உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வான் பாயும் அளவினை எட்டி வருகின்றன. எனவே, நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ்நிலப்பகுதியில் வாழும் மக்கள் எந்நேரமும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நீர்த்தேக்கங்களுக்கு கிடைக்க பெறும் நீரினை பயன்படுத்தி உச்ச அளவு மின் உற்பத்தி இடம்பெற்று வருவதாக மின்சாரசபை பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மலையகப்பகுதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளன. எனவே மண் மேடுகளுக்கும் மலைகளுக்கும் சமீபமாக வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# ரயில் பாதையில் இடிந்து விழுந்த குப்பைமேடு; மூன்று மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்



மலையகத்துக்கான ரயில் பாதையில் ஹற்றன் புகையிரத நிலையத்தை அண்மித்த ரயில் பாதையில் நேற்று 24.10.2022 காலை பாரிய குப்பை மேடு சரிந்து விழுந்ததாக ஹற்றன் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஹற்றன் மற்றும் கொட்டகலை ஆகிய ரயில் நிலையங்களுக்கிடையில் ஹற்றன் புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலேயே இந்த குப்பைகள் அடங்கிய மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. இதன்காரணமாக நானுஓயாவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த சரக்கு புகையிரதம் மண்மேட்டில் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. ரயில் பாதையில் இடிந்து விழுந்த குப்பைமேட்டை பராமரிப்பு பணியாளர்கள் அகற்றியதன் பின்னர், நேற்று (24) காலை 08.30 மணியளவில் மலையகத்துக்கான ரயில் சேவை மீண்டும் வழமைக்கு கொண்டு வரப்பட்டமை குறிப்பிடதக்கது.

# இலக்கியக் கலை விழா

பூஜாபிட்டிய தினகரன் நிருபர்

கண்டி மாவட்டச் செயலகம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கண்டி மாவட்ட இலக்கியக் கலை விழா நாளை காலை 09.30 மணிக்கு கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கிய விழாவில் நடனங்கள், தமிழ் கலாசார நடனங்கள் மற்றும் கண்டி கலாசார நிலையத்தின் சிறுவர்களின் கலாசார நிகழ்வு, மலையக வானொலி சேவை குழுவின் இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பல கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையில் இடம்பெறவுள்ள சாகித்ய விழாவில் இலக்கியப்போட்டியில் வெற்றி பெற்ற சிறார்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# பிரதேச செயலகத்தில் விவசாய நடவடிக்கைகள்

பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை பிரதேச செயலக வளாகத்தில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் மூலம் இந்த விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட மரக்கறி வகைகள் வளாகத்தில் நடப்பட்டுள்ளன. மிகவும் செழிப்பாக கத்திரிக்காய், தக்காளி மற்றும் கோவா உட்பட பல்வேறுபட்ட மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டுள்ளதாக இங்கு பணியாற்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட விவசாய நடவடிக்கைகள் இங்கே வருகை தரும் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரத்தில் போலியோ நோய் தொடர்பான விழிப்புணர்வு சவாரி



திறப்பனை தினகரன் நிருபர்

போலியோ நோய் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் ரொட்டரி கழகம் ஏற்பாடு செய்த பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் சைக்கிள் சவாரி நிகழ்ச்சித் திட்டம் ஞாயிற்றுக்கிழமை (23 ) நாச்சியாதீவு ஜும்மா பள்ளிவாசல் முற்றவெளியில் ஆரம்பமானது.

இங்கு போலியோ நோயின் பயங்கர தன்மை, அது இனிமேலும் யாரையும் பாதிக்காமல் எவ்வாறு தடுத்துக் கொள்வது,அதன் பாரதூரமான விளைவுகள் பற்றி இங்கு பொது மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

நாச்சியாதீவு ஜும்மா பள்ளி நிர்வாக சபையின் ஏற்பாட்டில் பள்ளிவாசல் முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் ஏராளமான பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வின் போது வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பாலித பண்டார, திறப்பனை பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத் ( பஸ்மி ),பள்ளி நிருவாக சபை தலைவர் தேசமான்ய அல் ஹாஜ் ஏ.ஆர்.எம். தாரிக்,ரோட்டரி கழகத்தின் பிரதான உறுப்பினர் வை.ஜவாஹிர்,ரோட்டரி கழக தலைவர் மற்றும் அதிகாரிகள் இங்கு உரை நிகழ்த்தினர். இந் நிகழ்வில் பள்ளி பரிபாலன சபை அங்கத்தவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், ஊர் ஜமாஅத்தார்கள், பொது மக்கள்,ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மீண்டும் தேசியத்தில் தங்கம் வென்று சாதனை



கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக 'தைக்கொண்டோ' சுற்றுப் போட்டியில் பங்குபற்றி, 5 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட 'தைக்கொண்டோ' சுற்றுப் போட்டி கடந்த 21,22,23 ஆகிய தினங்களில் கேகாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள், 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்களம் என மொத்தமாக தேசிய ரீதியில் 5 பதக்கங்களைப் பெற்று மாகாணத்திற்கும், வலயத்திற்கும், கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இதில் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான 80 87kg எடைப் பிரிவில் ஜே.ஏ. சுமைட் தங்கப் பதக்கமும் 74 80 kg எடைப் பிரிவில் என்.எம்.நுஸ்ரி வெள்ளிப் பதக்கமும் 6368 kg எடைப் பிரிவில் ஏ.எல்.எம்.அப்ரி வெண்கலப் பதக்கத்தையும் + 87 kg எடைப் பிரிவில் ஏ.எம்.நாஸிக் அன்சாப் வெண்கல பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான +74kg எடைப் பிரிவில் ஜே.ஏ.சுரைப் வெள்ளிப் பதக்கமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவ் வரலாற்று வெற்றியைப் பெற உறுதுணையாய் இருந்து, மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் (SLEAS) தலைமையிலான பாடசாலை சமூகத்திற்கு பெற்றோர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது. இப் பாடசாலை இப்போட்டியில் கலந்து கொண்டமை இதுவே முதன் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# பேசாலை.மன்.பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு





(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் பேசாலை.மன்.பற்றிமா தேசிய பாடசாலையில் இவ்வருடம் கல்லூரியைச் சார்ந்த சுமார் 46 மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் இணைந்து மாகாண மட்டத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பல சாதனைகளை படைத்துள்ளனர். குறிப்பாக பூ பந்தாட்டம், மேசை பந்தாட்டம், மெய்வல்லுனர் திறனாய்வு ஆகிய போட்டிகளில் விளையாடிசாதனை படைத்துள்ளனர்.

இப்பாடசாலையானது கடந்த ஐந்து வருடங்களாக பூ பந்தாட்டப் போட்டிகளில் தொடர்ச்சியான சாதனையைப் படைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாணவர்களை கௌரவிக்கும் முகமாக கடந்த வெள்ளிக்கிழமை (21.10.2022) பேசாலை மன்.பற்றிமா தேசிய பாடசாலையினால் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் டிலாசால் அருட் சகோதரரும் பாடசாலைகளின் ஓய்வுநிலை அதிபருமான அருட்சகோதரர் ஸ்ரணி பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

# மாத்தறை மாவட்ட செயலகங்கள் தோறும் முறைப்பாட்டு பெட்டிகள்
## அரச அதிபர் நடவடிக்கை

வெலிகம தினகரன் நிருபர்

மக்கள் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளும் நோக்கில் மாத்தறை மாவட்ட செயலாளர் சட்டத்தரணி வை. விக்கிரமசிறி பிரதேச செயலகங்கள் தோறும் முறைப்பாடு பெட்டிகளை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் இம்முறைப்பாட்டு பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன. மக்களின் பிரச்சினைகளை இலகுபடுத்துமுகமாகவே இவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளுக்குநாள் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குடும்ப, பொருளாதார, மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இவைகளை இனம் கண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்கவே இவ்வாறு முறைப்பாடு பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

முறைபாட்டாளர்கள் கடித உறையில் மிகவும் சுறுக்கமாக எழுதி, அப்பெட்டியினுள் இட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# யாழ். போதனா மருத்துவமனையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை


டாக்டர் பிரம்மா


டாக்டர் பவந்தன்


டாக்டர் மதிவாணன்


டாக்டர் பிரசாத் சுப்ரமணியம்


டாக்டர் சரித்த பெர்னாண்டோ


டாக்டர் வினோஜன்

இலங்கையில் சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சையானது முதன்முதலில் 1985 ஆம் ஆண்டு பேராசிரியர் ஷெரீவ்தீன், பேராசிரியர் ரிஸ்வி ஷெரீவ் முதலான விசேட மருத்துவ நிபுணர்களடங்கிய குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை, மாளிகாவத்தையிலுள்ள தேசிய இரத்தச் சுத்திகரிப்பு சிறுநீரக மாற்று நிறுவனம் (The National Institute of Nephrology Dialysis Transplantation), கராப்பிட்டிய மற்றும் அனுராதபுரம் ஆகிய போதனா மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன; தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வகையில் யாழ். போதனா மருத்துவமனையில் முதற் தடவையாக 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி சிறுநீரகம் செயலிழந்த இருவருக்கு, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது வரை 7 பேருக்கு வெற்றிகரமாக சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். போதனா மருத்துவமனையில் குருதிக் குழாய் சத்திரசிகிச்சைத் துறையில் விசேட பயிற்சி பெற்ற சத்திரசிகிச்சை நிபுணர் சிவலிங்கம் மதிவாணன் (Consultant Surgeon, Special Interest in Vascular Surgery), கண்டி தேசிய மருத்துவமனையில் கடமையாற்றும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் பிரசாத் சுப்பிரமணியம் (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணருமான சச்சிதானந்தன் வினோஜன்(Consultant Vascular & Transplant Surgeon), கண்டி தேசிய வைத்தியசாலையின் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் சரித்த பெர்னாண்டோ (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணரும் மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் பிரம்மா தங்கராஜா (Consultant Nephrologist) மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் வேதநாதன் பவந்தன்(Consultant Nephrologist) முதலான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விசேட மருத்துவ நிபுணர்களுடன் யாழ். போதனா மருத்துவமனை இரத்த மாற்று விசேட மருத்துவ நிபுணர்கள் (Consultant Transfusionists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Consultant Anesthesiologists), மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை நிருவாகத்தினர் முதலான அணியினர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள வழங்கிய பங்களிப்பு என்பது ஈடிணையற்றது.

- இறப்புக்குப் பின்னர் சிறுநீரகங்களைத் தானம் செய்யும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது
- தென்பகுதியிலிருந்து வடக்குக்கு சிறுநீரகங்கள் தானமாகக் கிடைக்கின்றன. அதற்கு நாம் நன்றி கூற வேண்டியது அவசியம்

சிறுநீரகமாற்று சத்திரசிகிச்சையானது தேசிய வைத்தியசாலையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். இலங்கையின் 2 ஆவது தேசிய வைத்தியசாலையாக விளங்கும் கண்டி தேசிய வைத்தியசாலையுடன் இணைந்தே நாம் யாழ்ப்பாணத்தில் சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்கின்றோம்.

எமது சமூகத்தில் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக இளம் பருவத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 5 வயது சிறுவர்கள் முதல் 75 வயது முதியவர்கள் வரை ஹீமோடயலிசிஸ் எனப்படும் இரத்தச்சுத்திகரிப்புச் செய்வதற்காக மருத்துவமனைக்கு வருகிறார்கள். யாழ். போதனா மருத்துவமனையில் 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாத்திரம் 145 நபர்களுக்கு 962 தடவைகள் இரத்தச்சுத்திகரிப்பு (Haemodialysis) செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சில சிறுவர்களுக்கு வாரத்தில் 3 அல்லது 4 தடவைகள் குருதிச் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. மேலும் பலர் ஒவ்வொரு வாரமும் இரத்தச் சுத்திகரிப்புச் செய்து வருகின்றனர். இவ்வாறானவர்களது வாழ்வு மருத்துவமனையுடனேயே இணைந்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கி வரும் இரத்தச்சுத்திகரிப்பு அலகானது (Dialysis Unit) 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அலகானது சிறிய ஓர் இடத்தில் மிகக்குறைந்த ஆளணியினருடன் சிறந்த முறையிலே 24 மணிநேரமும் இயங்கிவரும் ஒரு விசேட மருத்துவ அலகாகும். சர்வதேச மருத்துவக் குழுவின்(IMHOUSA) நிதியுதவியுடன் இதனைத் தற்காலிகமாக விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அரச உதவியுடன் 6 தளங்களைக் கொண்ட நிரந்தரக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



யாழ். போதனா மருத்துவமனைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் முதலான மாவட்டங்களில் இருந்தும் டயலிசிஸ் செய்வதற்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு பலர் வருகிறார்கள். ஒருவர் டயலிசிஸ் செய்வதற்காக வரும் போது அவருக்கு உதவியாக இன்னொருவர் வருகின்றார். இதனால் குடும்பம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. ஒருவர் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக டயலிசிஸ் செய்யும் மருத்துவப் பொறிமுறைக்கு வருகின்றபோது அவரைச் சார்ந்த குடும்பத்தின் சுதந்திரம் அல்லது சமூகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகிறது. டயலிசிஸ் செய்யும் பெரும்பாலானவர்களது வாழ்க்கை இவ்வாறு பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும்.

டயலிசிஸ் செய்யும் நிலைக்கு வந்த பெரும்பாலானோர் சிறுநீரக தானத்தை எதிர்பார்த்திருப்பார். சிறுநீரகம் செயலிழந்த ஒருவர் அவரது உடற்தகுதி, அவருக்கு உள்ள ஏனைய பாதிப்புக்கள், வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு சிறுநீரகவியல் விசேட மருத்துவ நிபுணர்களால் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்குச் சிபார்சு செய்யப்படுவர். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கின்றார்கள். ஆனாலும் மூளைச்சாவடைந்த ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைத் தானமாகப் பெறுவதென்பது இலகுவானதல்ல. இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானம் செய்யும் நன்கொடையாளர்கள் கௌரவத்துக்கு உரியவர்கள் சிறுநீரகத்தை தானமாகப் பெற்ற ஒருவருக்கு புதிய ஒரு வாழ்வு கிடைக்கிறது.

ஒருவருக்கு சிறுநீரகத்தை வழங்குவது என்பது பெறுபவருக்கு மட்டுமன்றி அவரைச் சார்ந்த சமூகத்துக்கும் புதியதொரு வாழ்வை, எதிர்காலத்தைக் கொடுக்கிறது; சுதந்திரத்தை வழங்குகிறது நம்பிக்கையைக் கொடுக்கிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சுவாசிப்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்கும் போது அவருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கி உயிர்வாழ்வதற்கான உதவி வழங்கப்படுகிறது. இந்நிலையில் ஒருவரது மூளையின் செயற்பாடு அற்றுப் போகின்றபோது அதனை மூளைச்சாவு என்பார்கள். இவ்வாறு மூளைச் சாவடைந்த ஒருவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறும் நடைமுறையே தற்சமயம் வடபகுதியில் காணப்படுகிறது. ஒருவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டு 12 மணிநேரத்துக்குள் சத்திரசிகிச்சை செய்து சிறுநீரகத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ உபகரணங்களது உதவியின் மூலம் சுவாசிக்கும் ஒருவருடைய (Intubated patient) மூளையின் இறப்பை, பல்வேறு வழிகளால் மருத்துவர்கள் உறுதிப்படுத்துவர். மூளைச்சாவு என்பது 100 சதவீதம் மரணமடைந்த நிலையேயாகும். ஆனாலும் மூளை சாவடைந்த பின்னரும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாசம், மற்றும் மருந்துகள் வழங்குவதன் மூலம் ஒருவரது இருதயம் செயற்பட்டபடி இருக்கும். மூளைச் சாவடைந்தவருக்கு மருந்துகள் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்படும். மூளைச் சாவடைந்தவர் உயிர் பிழைப்பார் என்ற தவறான நம்பிக்கை பொதுமக்களிடையே காணப்படுகிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மூளைச் சாவடைந்த ஒருவரது குடும்ப உறுப்பினர்களை அல்லது அக்குடும்பத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு நபரை அணுகி இறந்தவரது சிறுநீரகங்களைத் தானமாக வழங்குமாறு கேட்பது மருத்துவ நிபுணர்களுக்கு மிகவும் இக்கட்டான ஒரு நிலையாகும். இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் துறைசார் மருத்துவ வல்லுநர்கள் நீண்ட உரையாடல் மேற்கொண்டு இறந்தவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறல் வேண்டும்.

மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகங்களைத் தானமாக வழங்கி இருவருக்கு வாழ்வு கொடுக்க முன்வருவோர் கௌரவத்துக்குரியவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

மருத்துவர் த. சத்தியமூர்த்தி...
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்

## கேள்வி கோரல்
### வெலிகம நகர சபை
### பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான கேள்வி கோரல்

வெலிகம நகர சபை அலுவலகம் மற்றும் கப்பரதொட்டை கொம்பொஸ்ட்முற்ற வெளி ஆகிய இரண்டு இடங்களிற்கு 24 மணி நேரப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

2022.10.25 முதல் 2022.11.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வெலிகம நகர சபை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாக தனித்தனி உறைகளில் சேர்க்கப்பட்டு 2022.11.15 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், நகர சபை, வெலிகம" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2022.11.15 அன்று பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும். தாமதமாகக்கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வெலிகம நகர சபைக்கு உரித்தாகும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி எண்களை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி எண்கள் :- 041-2250274/ 041-2250275/ 041-2254661

**ஜீ.பி.எச். யமுனா காந்தி**
**தலைவர்,**
**வெலிகம நகர சபை**

## வெலிகெபொல பிரதேச சபை
### 2023ஆம் ஆண்டிற்காக சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கான பெறுகை (கேள்வி) அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வர்த்தக உரிமைகளை 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் ஏற்கப்படும்.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல்:-**

- 2022.10.26 முதல் 2022.11.14 வரை (மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை அலுவலக நேரங்களில்)
- கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்
  2022.11.15ம் திகதி (மு.ப. 8.00 முதல் மு.ப. 9.30 வரை)
- கேள்விகள் திறத்தல் - 2022.11.15ம் திகதி (மு.ப. 9.45 இற்கு)

▶ கேள்வி நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை weligepola.ps.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து மற்றும் 045-2270410 அலுவலக தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

| | சொத்துக்கள் விபரம் | நடத்தப்படும் தினம் | குறைந்தபட்ச குத்தகை தொகை ரூ. | கேள்விப் பிணை ரூ. | கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | வெலிகெபொல வாரசந்தை | சனிக்கிழமை | 10,000.00 | 1000.00 | 500.00 |
| 02 | வெலிகெபொல வாரசந்தை மீன் தட்டு | வாரத்தின் சகல தினங்கள் | 15,100.00 | 1000.00 | 500.00 |
| 03 | ஒப்பநாயக்க வாரசந்தை | சனிக்கிழமை | 7,000.00 | 1000.00 | 500.00 |
| 04 | ஒப்பநாயக்க வார சந்தை மீன் தட்டு | சனிக்கிழமை | 5,000.00 | 1000.00 | 500.00 |

**2022.10.19ம் திகதி**
**ஹுனுவல,**
**ஒப்பநாயக்க**
**வெலிகெபொல பிரதேச சபை அலுவலகத்தில்**

**கே.ஓ. கெலும் பிரியங்கர ஜயசிங்க**
**தலைவர்**
**வெலிகெபொல பிரதேச சபை**

# பேருவளை நியூஸ் அலர்ட் வலையமைப்பின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழா





பேருவளை நியூஸ் அலர்ட் வலையமைப்பின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழா, பரிசளிப்பு விழா மற்றும் முதலாவது உதய வான்மதி சஞ்சிகை வெளியீட்டு விழா என்பன கடந்த 22 ஆம் திகதி பேருவளை , சீனங்கோட்டை அல் ஹுமைசரா தேசியப் பாடசாலை ஜாபிர் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மலேஷியா சைன் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் மற்றும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் பொருளாளருமான அசார் அசாஹிம் (அஸ்ஹரி),கௌரவ விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவை தலைமை ஆலோசகர் அகமது முனவர், சிறப்பு பேச்சாளராக முன்னாள் அதிபர் மற்றும் எழுத்தாளர் ஹாபிஸ் இஸ்ஸதீன், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத், BERUWLA NEWS ALERT ஆலோசகர் பி.எஸ். எம் சியாஸ் மற்றும் அல்ஹாஜ் ஸவாஹிர் , இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக் , களுத்துறை மாவட்ட முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் ஹிஷாம் சுஹைல், பேருவளை பிரதேச சபை உறுப்பினர் ஹசீப் மரிக்கார் ,பேருவளை சேம் .ரிபாய் ஹாஜியார் பாடசாலை அதிபர் மற்றும் பேருவளை பாசியதுல் நஸ்ரியா, முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*2022 வாக்காளர் இடாப்பு வரைவில் பெயர் இருக்கின்றதாவென ;*

*கிராம அலுவலரிடம் விசாரிப்பதனூடாக*
www.elections.gov.lk *ஊடாக ;*
*இங்கு காணப்படும் QR குறியீட்டை Scan செய்வதனூடாக அறிந்துகொள்ள முடியும்.*

*2005.02.01 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்களின் பெயர் இல்லையாயின் இன்றே உங்களுடைய கிராம அலுவலரிடம் விசாரிக்கவும்.*

தேர்தல் ஆணைக்குழு

## வெலிகெபொல பிரதேச சபை
### 2023ஆம் ஆண்டு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்காக வெலிகெபொல பிரதேச சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் நிர்மாண விடயங்களுக்காக ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்யும் முகமாக வெலிகெபொல பிரதேச சபையின் தலைவரான என்னால் 2022.12.31 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- மேலதிக விபரங்களை வெலிகெபொல பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது weligepolaps.gov.lk இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வெலிகெபொல பிரதேச சபை**
**ஹுனுவல, ஒப்பநாயக்க**
**2022.10.19**





தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ.சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள். ஆலய பிரதம குரு சிவ.ஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்கள் வழிகாட்டலில் இந்த பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.
(படங்கள் : புத்தளம் தினகரன் நிருபர்

# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

## வருடாந்த நடவடிக்கைத்திட்டம் 2023 மீதான மக்கள் ஆலோசனையளிப்பு

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆனது, 2002 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்கச் சட்டத்தின் படி மின்சாரம், நீர்ச் சேவைகள் மற்றும் பெற்றோலியம் ஆகிய தொழிற்றுறைகளின் ஒழுங்குறுத்துநராக 2002ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சாரச் சட்டம் ஆக்கப்பட்ட பின்னர் ஆணைக்குழு ஆனது, மின்சாரத் துறையின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழினுட்ப ஒழுங்குறுத்துநராக தொழிற்பட ஆரம்பித்தது. பெற்றோலியம் மற்றும் நீர்ச் சேவைகள் ஆகிய தொழிற்றுறைகளின் சட்ட உருவாக்கத்தின்பின்னராக அவற்றின் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் பெறப்பட்ட பின்னர், ஆணைக்குழுவானது குறித்த தொழிற்றுறைகளின் ஒழுங்குறுத்துநராக பணியாற்ற ஆரம்பிக்கும். ஆணைக்குழுவானது தற்போது உராய்வு நீக்கிச் சந்தையின் நிழல் ஒழுங்குறுத்துநராக செயலாற்றுவதால், உராய்வு நீக்கிச் சந்தை தொடர்பான ஒழுங்குருத்துகை மற்றும் கொள்கை விவகாரங்களில் தேவையான ஆலோசனைகளை பெற்றோலியத் துறைக்கான அமைச்சிற்கு வழங்குகின்றது.

2002 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் ஆகியவற்றால் குறிப்பிடப்பட்ட, நோக்கங்களை அடைவதற்காக, ஆணைக்குழுவானது 04 நீண்ட கால இலக்குகளை அடையாளம் கண்டுகொண்டுள்ளது. இந்த நோக்கங்களை அடைவதற்காக, ஆணைக்குழுவானது ஆண்டு தோறும் செயற்படுத்தப்படவேண்டிய புத்தாக்க நடவடிக்கைகளின் தொடர்களை திட்டமிடுகிறது. வருடாந்த நடவடிக்கைத் திட்டம் 2023 ஆனது வரையப்பட்டு உள்ளது. குறித்த நடவடிக்கைகள் மீதான பொது மக்கள் உள்ளிட்ட பங்காளர்களின் எழுத்துமூல கருத்துகளைக் கோருவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வரைபுத் திட்டம் ஆனது தற்போது ஆணைக்குழுவின் இணையத்தளமான www.pucsl.gov.lk இல் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது. ஆணைக்குழுவின் தகவல் மையத்தில் இதன் அச்சிட்ட பிரதி தயாராக உள்ளது. ஆர்வமுடைய தரப்பினர் **2022.11.16** அன்றோ அதற்கு முன்போ, இது தொடர்பான தமது எழுத்துமூல சமர்ப்பிப்புகளை செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

**சமர்ப்பிப்புக்கும்முறை:**
www.pucsl.gov.lk இன் ஊடாக இணையதளம் மூலம்
அல்லது
consultation@pucsl.gov.lk எனும் மின்னஞ்சலுக்கு மூலம்
அல்லது
www.facebook.com/pucsl மூலம்
அல்லது
பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலம் அனுப்பலாம்:

**"வருடாந்த நடவடிக்கைத்திட்டம் 2023 மீதான மக்கள் ஆலோசனையளிப்பு"**
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
6 – வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: (011)2392607/8, தொலை நகல்: (011) 2392641

**ஜனக ரத்நாயக்க**
**தலைவர்**
**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

திகதி: 25.10.2022

---

**இலங்கை துறைமுக அதிகாரசபை**

# கேள்வி அறிவித்தல்

## அகற்றப்படாத கப்பல் பொருட்கள், பயன்படுத்தப்பட்ட மேலதிகப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் ஏல விற்பனை மற்றும் கேள்விமனு மூலம் விற்பனை

### கேள்வி இலக்கம் 448, ஏல விற்பனை இலக்கம் 449 மற்றும் 449-A
### கேள்வி மற்றும் ஏல விற்பனை நடத்தப்படும் திகதி 2022/11/04

கொழும்பு துறைமுக கப்பல்துறை மற்றும் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்வி இலக்கம் 448**

| பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் | Polypropylene Moplen | கட்டிட மாதிரித்தகடு | மோட்டார் சைக்கிள் |
|---|---|---|---|
| கிறனைற் பளபளப்பூட்டாத ஸ்லெப் | பேஸ்ட்ரி ஷோடர்னின் | துணி | பலகை (Sawn Timber) |
| உப்பு (Iodized Vacuum Salt) | அச்சுக் காகிதம் | வெற்று தேயிலை டின் | உரம் |
| கண்ணாடி | கதவுகள் (Secondary Interior Doors) | வாகன உதிரிப்பாகங்கள் | மண்ணெண்ணெய் அடுப்பு |
| இரசாயனப் பொருட்கள் | உணவுப் பொருட்கள் | வீட்டுப் பொருட்கள் | மின் உபகரணங்கள் |
| ஆடைகள் | தும்பு | மற்றும் ஏனைய வணிகப் பொருட்கள் | |

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பயன்படுத்தப்பட்ட பொருட்கள், மேலதிகப் பொருட்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்கான ஏல விற்பனை.

**இலக்கம் 449 ஏல விற்பனை (பயன்படுத்தப்பட்ட பொருட்கள்)**

| உதிரிப் பாகங்கள் - கடற்படை | நிழல் பிரதி இயந்திரம் | Marine Spears |
|---|---|---|
| டயர் மற்றும் டியுப் (மேலதிகமானவை) | மின் விசிறி | அலுவலக கதிரை, மேசை, அலுமாரி |
| வாகன உதிரிப்பாகங்கள் | உபகரணம் மற்றும் வேறு | இயந்திர உதிரிப்பாகங்கள் |
| தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) | மின் சாதனங்கள் | பயன்படுத்தப்பட்ட மின்சார கெண்டி |
| லேத் இயந்திரம் | பயன்படுத்தப்பட்ட ஒரு படகு | பயன்படுத்தப்பட்ட பல்வேறு உபகரணங்கள் |

**இலக்கம் 449 – A ஏல விற்பனை (பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம்)**

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்ட கார் | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் | பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டி |

குறித்த கேள்விமனு பட்டியலை மீளளிக்கப்படாத 1,000 ரூபா தொகை மற்றும் பெறுமதி சேர்ப்பு வரி செலுத்தி கெனல் யாட், இலக்கம் 15, லோட்டஸ் வீதி, கொழும்பு 01 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2022.10.26 ஆம் திகதி 10.00 மணி தொடக்கம் 2022.11.03 ஆம் திகதி 14.30 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

வெற்றிகரமான கொள்வனவாளர்களினால் பொருட்களை கொள்வனவு செய்யும்போது தொடர்புபட்ட வகையில் பெறுமதி சேர் (VAT) வரி செலுத்த வேண்டும்.

இலக்கம் 448 கேள்விமனு ஆவணங்களுக்காக மீளளிக்கப்படும் ரூபா 50,000, ரூபா 200,000 அல்லது ரூபா 500,000 (நீங்கள் கூறுவிலையிடும் பெறுமதிக்கு அமைய) வைப்புத் தொகை ஒன்றை வைப்புச் செய்ய வேண்டும்.

இலக்கம் 449 மற்றும் 449-A கொண்ட ஏல விற்பனைகளின் கேள்விமனு ஆவணத்திற்காக மீளளிக்கப்படும் ரூபா 100,000 பிணை ஒன்றை வைப்புச் செய்தல் வேண்டும். பிணை வைப்புச் செய்தல் 2022.10.26 ஆம் திகதி 10.00 மணி தொடக்கம் 2022.11.03ஆம் திகதி 14.30 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும். ஏல விற்பனை பொருட்கள் மற்றும் ஏல விற்பனை வாகனங்கள் வழங்கப்பட்ட அந்த பிணைத் தொகைக்கு மேலதிகமாக அந்த சந்தர்ப்பத்திலேயே பெறுமதியில் 10% தொகை ஒன்றை வைப்புச் செய்தல் வேண்டும். எஞ்சிய தொகையை வழங்கலுக்கான கடிதம் கிடைத்து 10 வேலை நாட்களுக்குள் பணத்தை செலுத்தி வாகனம் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

கேள்விமனு வைப்புடன் தொடர்புபட்ட பற்றுச்சீட்டுகளின் பிரதிகள் எல்லா கேள்விமனு ஆவணங்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத ஆவணங்கள் முறையாக பூர்த்தி செய்யாத கேள்விமனுவாக கருதி நிராகரிக்கப்படும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு அவர்களின் துணைவர் மற்றும் திருமணம் புரியாத பிள்ளைகளுக்கு கேள்விக்காக கூறுவிலை சமர்ப்பிக்க முடியாது.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்களை 2022.11.04ஆம் திகதி 08.00 மணி தொடக்கம் 10.00 மணிக்கு இடையிலான காலத்தில் துறைமுக வளவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க விடுதியின் நலன்புரி கட்டிடத்தின் 3ஆவது மாடியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்குள் இடுவதற்கு வேண்டும் என்பதோடு, அதன் பின் உடன் அந்த அலுவலகத்தில் கேள்விமனுக்கள் திறக்கப்படும்.

அனைத்து கொள்வனவாளர்களும் பெறுமதி சேர் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத ஒருவராயின் VAT இற்காக பதிவு செய்யவில்லை என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் உறுதி சான்றிதழ் ஒன்றை பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற கொள்வனவாளர்கள் அரச சட்ட திட்டங்களுக்கு அமைய அனுமதிப்பத்திரம் தேவையெனில் பெற்றுக்கொள்ள வேண்டி அமையும்.

கேள்விமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுவதற்கு அனைத்து கெள்வனவாளர்களும் இணங்குதல் வேண்டும்.

வெற்றிகரமான விலைமனுதாரர் மூலம் வழகல் கடிதத்தின் திகதி தொடக்கம் 10 வேலை நாட்களுக்குள் குறித்த பொருட்களை துறைமுக பகுதி/ துறையில் இருந்து அகற்றிக்கொள்ள வேண்டும்.

**தலைமை முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2022.10.25**
**சேவை வழங்கல் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**
**இலக்கம் 11, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-01**

---

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| இல. | பரீட்சை | பரீட்சை நடைபெறும் திகதிகள் | பரீட்சை நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021 (2022) | 2022 ஒக்டோபர் 29 | நாடு முழுவதும் |

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் இத்திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenets.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி - 011-2785230 / 011-2786150
தொலைநகல் - 011-2784232

**எல்.எம்.டி. தர்மசேன**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

5/5/2/AD/2021
**நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**
2022 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி

---

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - பொலொன்னறுவை

பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கிப் பராமரிப்பு மற்றும் சேவைகளிற்காக ஒப்பந்தக்காரர்களை நியமிப்பதற்காக மற்றும் வைத்தியசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக 2022/ 2023 ஆண்டிற்காக உணவகங்களை நடத்திச் செல்லல் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதுடன் 2022.11.15 அன்று பி.ப. 02.00 வரை விலைமனுக் கோரப்படுகின்றது.

**1. மின்பிறப்பாக்கி இயந்திரங்களை பராமரித்தல் மற்றும் சேர்விசு செய்தல்.**

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ கருமத்தின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 250 KVA மின்பிறப்பாக்கி இயந்திரத்தைப் பராமரித்தல் மற்றும் சேர்விசு செய்தல் | DGHP/ACC/F8/40/2022 | 3,500.00 | 10,000.00 |
| 2 | 1000 KVA மின்பிறப்பாக்கி இயந்திரத்தைப் பராமரித்தல் மற்றும் சேர்விசு செய்தல் | DGHP/ACC/F8/41/2022 | 3,500.00 | 25,000.00 |

**2. உணவகத்தை நடத்திச் செல்லல் - 2022/2023.**

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ கருமத்தின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | உணவகத்தை நடத்திச் செல்லல் 2022/2023 | DGHP/ACC/F8/39/2022 | 3,500.00 | 50,000.00 |

**3. வைத்தியசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.**

| இலக்கம் | உருப்படியின் பெயர் | அளவு | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | சக்கர நாற்காலி | 30 | DGHP/ACC/F8/42-1/2022 | 3,500.00 | 30,000.00 |
| 2 | நோயாளர் கொண்டுசெல்லும் டிரொலி | 30 | DGHP/ACC/F8/42-2/2022 | 3,500.00 | 100,000.00 |

**4. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.**

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ கருமத்தின் பெயர் | எண்ணிக்கை | கோவை இலக்கம் | விலைமனுப் படிவக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | Forced Air Patient Warmer | 02 | DGHP/ACC/F12/ME/Pa.W-04/2022 | 3,500.00 | 32,000.00 |
| 02 | Physio Dispenser | 01 | DGHP/ACC/F12/ME/P.D-05/2022 | 3,500.00 | 10,000.00 |
| 03 | Apex Locator | 01 | DGHP/ACC/F12/ME/Ap.L-06/2022 | 3,500.00 | 8,000.00 |
| 04 | Endo Motor | 01 | DGHP/ACC/F12/ME/En.M-07/2022 | 3,500.00 | 8,000.00 |
| 05 | CTG Machine | 06 | DGHP/ACC/F12/ME/CTGM-08/2022 | 3,500.00 | 12,000.00 |
| 06 | Tympanometer | 01 | DGHP/ACC/F12/ME/Tym. M-09/2022 | 3,500.00 | 60,000.00 |
| 07 | Otoacoustic Emmisions (OAE) Screener | 01 | DGHP/ACC/F12/ME/OAE-10/2022 | 3,500.00 | 93,700.00 |
| 08 | Gutta Percha Obturation Device | 01 | DGHP/ACC/F12/ME/GPOD-11/2022 | 3,500.00 | 12,000.00 |
| 09 | Baby Incubator | 03 | DGHP/ACC/F12/ME/BI-12/2022 | 3,500.00 | 120,000.00 |

01. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில், விலைமனுப்படிவக் கட்டணமாக இவ் வைத்தியசாலையின் கணக்காளருக்குக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது இலங்கை வங்கியின் கதுருவெல கிளையின் கணக்கு இலக்கம் 7040277, Director - District General Hospital Polonnaruwa என்ற கணக்கிற்கு கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் குறித்த நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் விண்ணப்பக்கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. விலைமனுப்படிவங்களைக் கொள்வனவு செய்யும் வேளையில், விண்ணப்பிக்கும் உருப்படிக்கான விலைமனுத் தொகை 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்படுமாயின் கேள்விதாரரொருவருக்காக அல்லது சார்பாக உபபிரதிநிதியொருவர், உப முகவரொருவர் அல்லது பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவர் என்ற வகையில் பதிவுச் சான்றிதழ், பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் கொழும்பு இடமிருந்து பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2022.11.09 அன்று மு.ப. 10.00 இற்கு பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியிலுள்ள மைத்திரிபால சிரிசேன கேட்போர் கூடத்தில் நடைபெறும், இதற்காகச் சமுகமளிக்க ஆர்வமுள்ள வழங்குநர்கள், தம் நிறுவனத்தின் கடிதத்தலைப்பில், 2022.11.07 இற்கு முன்னர் dghpolonnaruwapro@gmail.com இற்கு எழுத்துருவில் விண்ணப்பித்துப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

04. கேள்விகள் தனியான உருப்படிகளாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தனியான உருப்படியாக விலைமனுக்கள் பரிசீலிக்கப்படும் விலைமனுக்களில், மாதிரிகளிற்காக விலைமனுக்கள் சமர்ப்பித்தலாகாது என்பதுடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் அடங்கியுள்ளன.

06. பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு - 362) மூலம் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன், 2022.11.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரையான காலப் பிரிவில் மாத்திரம் பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் 'பெறுகை மற்றும் செலவினம் முகாமைத்துவப் பிரிவில்' இதற்கான பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்விகளைத் தாங்கிவரும் உறையின் இடது பக்க மேல் மூலையில், உருப்படியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் இரண்டு பிரதிநிதிகளாகத் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள், 'தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, மாவட்டப் பொது வைத்தியசாலை, பொலொன்னறுவை' என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புதல் அல்லது பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மூலம், 2022.11.15 அன்று பி.ப. 02.00 இற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக (அன்றைய தினம் பி.ப. 02.00 இற்கு) பொலொன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியிலுள்ள மைத்திரிபால சிரிசேன கேட்போர் கூடத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைதிறக்கப்படும்.

08. விலைமனுத்திறக்கப்படும் வேளையில், நிறுவனத்தின் பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின், அது பற்றி உறுதிப்படுத்தும் கடிதமொன்று குறித்த நிறுவனக் கடிதத் தலைப்பில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. இப்பெறுகை தொடர்பாக, வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**பொலொன்னறுவை.**
**2022.10.21**

## தேசிய கல்வி நிறுவகம்

# கேள்வி அறிவித்தல்

### சுத்திகரிப்பு சேவை – 2023

தேசிய கல்வி நிறுவகத்தின் மஹரகம மற்றும் மீப்பே வளாகங்களில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் வளவுகளின் சுத்திகரிப்புச் சேவைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2022-11-14ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை கீழ்காணும் ஆவணங்களை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் (பொறியியல் சேவை) இடம் சமர்ப்பித்து பெறுகைப் பிரிவில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. வியாபாரப் பெயர் சட்டத்தின் 149ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு.
2. அரச அல்லது தனியார் நிறுவனங்களில் இதற்குச் சமமான வேலைகளை கடந்த 03 வருடத்திற்குள் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளமை என்பதற்கான சான்றிதழ்கள்.
3. கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை (PCA 3) விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மீளளிக்கப்படாத 4000.00 ரூபா கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் 2000.00 ரூபா வைப்புத் தொகையை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் 607626 எனும் கணக்கிலக்கத்திற்கு பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் எனும் பெயரில் வைப்புச் செய்தமைக்கான பற்றுச்சீட்டு.
5. சகல விலைமனுக்களுடனும் 300,000.00 ரூபா பெறுமதியான 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 2022-11-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பெறுகைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்ற பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘சுத்திகரிப்புச் சேவைக்கான விலைக்கோரல்’’ என்று குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டமொன்று 2022-11-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**

---

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

குறிப்பு இல. மா/சான்/03/232

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.10.11ஆம் திகதிய 2301/26 இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மஹர |
| கிராமத்தின் பெயர் | : இஹலகரகஹ முனை |
| காணியின் பெயர் | : கிரிபெல்லகஹ வத்தை |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கம் - 4307 |
| துண்டு இல | : துண்டு இல. 01 |

**ஜீ.எஸ்.ஐ. விமலசேன,**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி,**
**மஹர பிரிவு**

**பிரதேச செயலகம்,**
**மஹர.**
21.10.2022

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

## கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

## 2023ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் பின்வரும் ஆதனங்களை 2023ஆம் வருடத்தில் இடக் குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் 2022-10-25ஆம் திகதி முதல் 2022-11-15ஆம் திகதி வரை வழங்கப்படும். உங்களுக்குத் தேவையானால் குறித்த விலைமனுக்கள் மற்றும் நிபந்தனைகளை மேற்படி தினங்களுக்கிடையில் அரச அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 16.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள் 2022-11-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்குத் திறக்கப்படும்.

**மீன் தட்டுகள்**

- குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு கடல் மீன் தட்டு
- உனகஸ்வெவ சந்தியின் கடல் மீன் தட்டு
- விஜயபுர சந்தியின் குளத்து மீன் தட்டு
- பண்டாரநாயக்க மாவத்த மீன் தட்டு
- சிராவஸ்திபுர சந்தி கடல் மீன் தட்டு
- நெலும்குளம் சிறிய கால்வாய்க்கு அருகிலுள்ள குளத்து மீன் தட்டு
- குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு குளத்து மீன் தட்டு
- ஆலங்குளம் குளத்திற்கு முன்னாலுள்ள குளத்து மீன் தட்டு
- குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு குளத்து மீன் தட்டு
- பிரதேச சபை சந்தியின் மீன் தட்டு
- கவரன்குளம் பொருளாதார நிலையத்தின் குளத்து மீன் தட்டு
- பாலாவிகுளம் சந்தியின் குளத்து மீன் தட்டு
- 5 கால்வாய் சந்தியின் குளத்து மீன் தட்டு
- நாச்சாதுவ சந்தி மீன் தட்டு
- கிறவுன் பிஸ்கட் நிறுவனம் அருகிலுள்ள குளத்து மீன் தட்டு
- குடாவெவ சந்தியின் மீன் தட்டு (நாச்சாதுவ கெட்டே சந்தி)
- உணகஸ்வெவ குளத்து மீன் தட்டு
- சிராவஸ்திபுர வயல்வெளி குளத்து மீன் தட்டு
- ஞானிக்குளம் 3ஆம் மைக்கல் அருகிலுள்ள மீன் தட்டு
- நெலும்குளம் பெரிய கால்வாய் அருகிலுள்ள மீன் தட்டு
- மொரகொட சந்திக்கு அருகிலுள்ள மீன் தட்டு

**இறைச்சிக் கடைகள்**

- அத்துருவெல்ல மாட்டிறைச்சிக் கடை
- குடா நெலுபெவ மாட்டிறைச்சிக் கடை

**பாற்சாலைகள்**

- குடா நெலும்பெவ பிரதேச வைத்தியசாலை அருகிலுள்ள பாற்சாலை
- ஜனாதிபதி கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பாற்சாலை

**ஏனையவை**

- துருலிய செவன விடுமுறை விடுதி
- நெலும்பெவ உப அலுவலக சிற்றுண்டிச்சாலை
- கவரன்குளம் பொருளாதார நிலையத்திலுள்ள விற்பனை நிலையம்
- கவரன்குளம் கடை 1
- கவரன்குளம் கடை 2
- கவரன்குளம் கடை 3
- கவரன்குளம் கடை 4
- கவரன்குளம் கடை 5
- கவரன்குளம் கடை 6
- பிரதேச சபை வளாகத்தில் கடை 2
- பிரதேச சபை வளாகத்தில் கடை 3
- பிரதேச சபை வளாகத்தில் கடை 4
- பிரதேச சபை வளாகத்தில் கடை 5
- பிரதேச சபை வளாகத்தில் கடை 6
- சிராவஸ்திபுர கடை 8
- சிராவஸ்திபுர கடை 9
- 7 கால்வாய் கடை 1
- 7 கால்வாய் கடை 2
- 7 கால்வாய் கடை 3
- 7 கால்வாய் கடை 4
- 7 கால்வாய் கடை 5
- சிராவஸ்திபுர கடை 1
- சிராவஸ்திபுர கடை 2
- சிராவஸ்திபுர கடை 3
- சிராவஸ்திபுர கடை 4
- சிராவஸ்திபுர கடை 5
- சிராவஸ்திபுர கடை 6
- சிராவஸ்திபுர கடை 7
- சிராவஸ்திபுர கடை 10
- சிராவஸ்திபுர கடை 11
- சிராவஸ்திபுர கடை 12

**எஸ். பீ. குமாரதாச**
**தலைவர்,**
**கி.நு.ப. பிரதேச சபை,**
**விஜயபுர.**

2022.10.21ஆம் திகதி

---

# பெறுகை அறிவித்தல்

## 2023ஆம் வருடத்தில் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

## வெல்லவாய பிரதேச சபை

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெல்லவாய பிரதேச சபைக்கு உரித்தான ஆதனங்களின் வர்த்த உரிமையை 2023 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடுவதற்காக கீழக்காணப்படும் விபரங்களின் பிரகாரம் வெல்லவாய பிரதேச சபை அதிகாரப்பிரிவில் நிரந்தரவதிவிடத்தைக் கொண்டுள்ள நபர்களிடமிருந்து மாத்திரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

**பெறுகை விபரம் மற்றும் நிபந்தனைகள்**

01. அலுவலகத்தினால் இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி இதற்காக விண்ணப்பிக்கலாம்.
02. அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டவர்கள் அல்லது 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் ஆதனங்களைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டு, ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகைத் தொகையை உரிய முறையில் செலுத்தாது குத்தகைக்காரர்களிற்கு, இதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
03. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிற்கான மீளளிக்கப்படும் பெறுகை வைப்புத்தொகை மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் இதற்கான விண்ணப்பப்படிங்கள் வழங்கப்படும்.
04. பெறுகைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    - I. கிராம அலுவலரினால் வழங்கப்படும் G.S. பதிவுச்சான்றிதழ்
    - II. தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப்பிரதியொன்று
05. உரியவாறு விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி முதலாம் பிரதி மற்றும் இரண்டாம் பிரதி எனக்குறிப்பிட்டு அறிவுறுத்தற் பிரகாரம், வழங்கப்படும் உறைகளில் சேர்த்து, அவற்றை பெரிய உறையில் சேர்த்து குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்னர், “தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சபை, வெல்லவாய” இற்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரடியாகச் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும். தபாலில் காணாமலாகுதல் அல்லது தாமதமாகுதல் அல்லது உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுகை விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.
06. கேள்விதாரர்கள், பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று குறித்த ஆதனங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம்.
07. ஆகக்குறைந்த கேள்விக்கும் குறைவாக சமர்ப்பிக்கப்படும் அல்லது உரிய நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாத பெறுகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அதற்காக வைப்புச் செய்யப்பட்ட வைப்புத்தொகையானது, மீளளிக்கப்படாமல் சபைக்கு உரித்தாக்கப்படும்.
08. பெறுகை திறத்தல், பெறுகைக்குழுவின் முன்னிலையில் வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
09. பெறுகைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கேள்விதாரருக்கு அதுபற்றி எழுத்துருவில் அறிவிக்கப்படுவதுடன், அக்கடிதத்திகதியிலிருந்து 14 நாட்களிற்குள் விதிக்கப்படும் ஒப்பந்தப்பிணைத் தொகை மற்றும் அதற்கான முத்திரைக் கட்டணம் போன்றவற்றை செலுத்திய பின்னர் குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பிடப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் ஒப்பந்தப் பிணைத்தொகை மற்றும் உரிய முத்திரைக் கட்டணத்தை செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறும் கேள்விதாரர்கள், நிராகரிக்கப்படுவதுடன் அவர்களின் வைப்புத்தொகையானது, மீளளிக்கப்படாமல் சபைக்கு உரித்தாக்கப்படும். மேலும் அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
10. பெறுகைப் படிவங்களை பெற்றுக்கொண்டு கேள்விகளை சமர்ப்பிக்காதவர்களின் வைப்புத்தொகையானது மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன், வைப்புத்தொகையானது சபைக்கு உரித்தாக்கப்படும். அத்துடன் அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படும்.
11. அங்கீகாரம் பெற்ற கேள்விதாரர்கள், கேள்விக்கான பிணைத்தொகையைச் செலுத்தி, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர், விண்ணப்பித்த ஏனைய கேள்விதாரர்களின் பிணைத்தொகைகள் மீளளிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதற்காக அவர்கள் உரிய பற்றுச்சீட்டுக்களுடன் செயலாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
12. ஒரு வருட காலத்திற்காகக் குத்தகைக்கு விடப்படும் மேற்படி ஆதனங்களிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர், மூன்று மாத காலத்திற்கான குத்தகைத் தொகையை ஒரே முறையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
13. பெறுகை தொடர்பாக இறுதித்தீர்மானமெடுக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு
14. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில், பகிரங்கப்படுத்தப்படும் இப்பெறுகை அறிவித்தல்களில் மொழிபெயர்ப்பு சிக்கல்கள் இருப்பின், சிங்கள மொழியிலான அறிவித்தல் வலுப்பெறும்.

| | | |
|---|---|---|
| I. | பெறுகை விண்ணப்பப்படிவங்களை வழங்கல் | : 2022.10.25 முதல் 2022.11.10 அன்று மு.ப.10.00 வரை அலுவலக நேரங்களில் மாத்திரம் வழங்கப்படும் |
| II. | பெறுகை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் | : 2022.10.25 முதல் 2022.11.10 அன்று பி.ப. 1.00 வரை மாத்திரம் |
| III. | பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல் | : 2022.11.10 அன்று பி.ப.1.00 இற்கு வெல்லவாய பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். |

**அட்டவணை இலக்கம் - 01**

**2023 ஆம் ஆண்டு குத்தகை ஆதணங்களின்**

| தொடர் இலக்கம் | ஆதணங்களின் விபரம் | பெறுகைப் பிணைத் தொகை ரூபா.ச | படிவக் கட்டணம் ரூபா.ச | ஆகக் குறைந்த கேள்வி ரூபா.ச |
|---|---|---|---|---|
| 01 | வெல்லவாய வாரச்சந்தை | 100,000.00 | 1,000.00 | 3,697,575.00 |
| 02 | எத்திலிவெவ வாரச்சந்தை | 40,000.00 | 750.00 | 973,131.00 |
| 03 | ஊவகுடாஒய வாரச்சந்தை | 30,000.00 | 750.00 | 713,800.00 |
| 04 | எத்திலிவெவ வாரச்சந்தை மீன்தட்டு | 20,000.00 | 750.00 | 400,000.00 |

**2022.10.25**
**வெல்லவாய பிரதேச சபை**
**அலுவலகத்தில்**
**தொ.பே.இல: 0552274875**

**ஆர்.டீ.ஹரமானிஸ்**
**தலைவர்,**
**வெல்லவாய பிரதேச சபை**

Repeat Your Ad For Better Offers

---

# விலைமனுக்கோரல் அழைப்பு

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### தென்னைப்பயிர்செய்கை சபை

### Polybags கொள்வனவு - 2022

பெறுகை இலக்கம் : E/7/G/PB/2022

01. தென்னைப்பயிர்ச்செய்கை சபை சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால், 2022 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்படும் பொலிபேக் தொகையினைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பொலிபேக் | 2,000,000 |

02. கேள்வி கோரலானது, தேசிய போட்டி ரீதியிலான கேள்விகோரல் முறைமையின் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டும் தகைமையுள்ள கேள்விதாரர்கள் தென்னைபயிர்செய்கை சபையின் வழங்கல் அலுவலரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் கீழ்க்காணப்படும் முகவரியில் வார வேலை நாட்களில் 2022.10.25 முதல் 2022.11.14 வரை மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை விபரக்குறிப்புகளுடன் கூடிய கெள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது வழங்குநர்கள் மாத்திரம் இதற்காக கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.
05. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன், எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 இற்கான தொகையொன்றை தென்னைப்பயிர்ச்செய்கைச் சபையின் பிரதான அலுவலகக் காசாளரிடம் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப்படிவத் தொகுதியொன்றை 2022.11.14 வரை பெற்றுக்கொள்ளலாம்.
06. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 2022.11.15 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2022.11.15 அன்று பி.ப.2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும் அவ்வேளையில், கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். அனைத்து கேள்விகளுடனும் கேள்வித் தொகையின் 1% இற்குக்குறையாத பொது முகாமையாளர், தென்னை பயிர்செய்கைச் சபை இற்கு, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிபந்தனைகளற்ற கேள்விப் பிணையெமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (காப்புறுதிப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
07. உங்கள் கேள்விகள், முத்திரையிடப்பட்ட உறையொன்றில் சேர்க்கப்பட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில், “பொலிபேக் கொள்வனவு - 2022” எனக்குறிப்பிட்டு கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2022.11.15 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அல்லது 2022.11.15 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரியின் முதலாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**
**தொ,பே. இல: 0112193457**
**தொலைநகல் : 011286133**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

The Housewives' companion
Classifieds on
Daily News

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சக்தி மற்றும் வலு அமைச்சு**

**Supply, Delivery & Refill of 19 liters Drinking Water Bottles with Dispenser Units for the CPC Head Office, Agro Chemical Function & SSE Workshop at Kolonnawa and Bitumen Storage and Sales Complex at Muthurajawela for the year 2023**

**B/53/2022**

"Supply, Delivery & Refill of 19 liters Drinking Water Bottles with Dispenser Units for the CPC Head Office, Agro Chemical Function & SSE Workshop at Kolonnawa and Bitumen Storage and Sales Complex at Muthurajawela for the year 2023" என்பதற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2022.11.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணி வரைக்குமிடையில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (1,696.71 + 2.5% SSCL + 15% VAT) செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public-tenders/**.. என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் விலைமனுதாரர்கள் ஆவணக் கட்டணத்தை மக்கள் வங்கியின் தலைமையலுவத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு பணத்தை செலுத்திய பின்னர் பெற்றுக் கொண்ட பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் 21,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022.11.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு -09. இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455335**
**தொலைநகல்: 0094-11-5455424**

## கேள்வி அறிவித்தல்

**சக்தி மற்றும் வலு அமைச்சு**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**2023 ஆண்டிற்காக இபெகூ பிராந்திய அலுவலகங்களுக்காக விநியோக அலகுகளுடனான மீள்நிரப்பலுடனான 19 லீற்றர் குடிநீர் போத்தல்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**

**B/54/2022**

**2023** ஆம் ஆண்டிற்காக இபெகூ பிராந்திய அலுவலகங்களுக்காக விநியோக அலகுகளுடனான மீள்நிரப்பலுடனான 19 லீற்றர் குடிநீர் போத்தல்கள் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் என்பதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2022.11.15 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணி வரைக்குமிடையில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (1,696.71 + 2.5% SSCL + 15% VAT) செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public-tenders/**.. என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் விலைமனுதாரர்கள் ஆவணக் கட்டணத்தை மக்கள் வங்கியின் தலைமையலுவத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு பணத்தை செலுத்திய பின்னர் பெற்றுக் கொண்ட பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் 12,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022.11.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09. இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455335**
**தொலைநகல்: 0094-11-5455424**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்

### சுற்றாடல் அமைச்சு

# வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அலுவலக இடவசதியைப் பெற்றுக்கொள்ளல்

## களுத்துறை பிரதேச அலுவலகம்

இந்தப் பணியகத்தின் களுத்துறை பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. அக்கட்டிடம் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

- ➢ உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் முறையான அனுமதியைப் பெற்றக் கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- ➢ 2500 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்
- ➢ ஆகக் குறைந்தது 05 எண்ணிக்கையான அறைகள் இருத்தல் வேண்டும்.
- ➢ ஆகக் குறைந்தது 02 உள்ளக மலசலகூடமும் வெளியே 01 மலசலகூடமும் இருத்தல் வேண்டும்.
- ➢ குழாய் நீர், மின்சார, தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ➢ களுத்துறை நகர எல்லையிலிருந்து பிரதான வீதிக்கு அண்மித்ததாக சுமார் 05 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இலகுவாக பிரவேசிக்கக்கூடிய வீதி இருத்தல் வேண்டும்.
- ➢ படலை சகிதம் பாதுகாப்பு வேலி / மதில் இருத்தல் வேண்டும்.
- ➢ குறைந்தபட்சம் 03 வாகனங்களையாவது நிறுத்தி வைக்கக்கூடிய வசதி இருத்தல் வேண்டும் என்பதுடன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் சேவை பெறுநர்களின் வாகங்களை நிறுத்தி வைக்கக் வசதிகள் இருத்தல் விசேட தகுதியாக கவனத்திற்கொள்ளப்படும். இந்த இடவசதி இல்லாவிட்டால் அதற்கு அண்மையிலுள்ள காணியொன்றில் அல்லது வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதியை வழங்குதல் வேண்டும்.
- ➢ அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலப் பரப்பபை முழுமையாக பணியகத்திற்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் வேறு தேவைப்பாடுகளுக்கு வழங்குதல் கூடாது.

இது தொடர்பில் ஆர்வம் கொள்ளும் தரப்பினர் ''களுத்துறை பிரதேச அலுவலகத்திற்காக கட்டிமொன்றை வாடகை அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விலைமனு'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு குறித்த இடத்தின் காணி உறுதிப் பிரதி மற்றும் காணித் துண்டின் வரைபடப் பிரதி மற்றும் கட்டிட உரிமையாளரைத் தொடர்பு கெள்ளக்கூடிய தொலைபேசி இக்கத்துடன் 2022-11-21ம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வரவேற்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

**கவனிக்க வேண்டியது:**
விண்ணப்பங்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடமானது பணியகத்திற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும் போது அக்கட்டிடம் அனர்த்தம், களவு, கொள்ளை மற்றும் தீ அபாயம் பொருட்டு காப்புறுதி செய்யப்படுதல் உரிமையாளரின் பொறுப்பாகும்.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டிமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

**மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழில் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு**
**வடக்கு மாகாணம்**

# பெறுகை அறிவித்தல்

## 2022/2023 ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக் குழுவினால் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சிற்கு உட்பட்ட காரியாலயங்களுக்கான 01 டிசம்பர் 2022 தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்குரிய பாதுகாப்புச் சேவையை (Security Service) பின்வரும் மாவட்டங்களில் வழங்குவதற்கு தகைமையுடைய வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரம் கோரப்படுகின்றது.

| தொ. இல. | பாதுகாப்புச் சேவை வழங்க வேண்டிய மாவட்டங்கள் | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 23 |
| 02 | கிளிநொச்சி | 02 |
| 03 | முல்லைத்தீவு | 02 |
| 04 | வவுனியா | 05 |
| 05 | மன்னார் | 03 |
| | மொத்தம் | 35 |

1) சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். என்பதுடன் குறைந்தது மூன்று ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம இருத்தல் வேண்டும். அத்துடன் சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் பதிவு செய்யப்பட்ட தலைமைக் காரியாலயம் அல்லது பதிவு செய்யப்பட்ட கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். என்பதுடன் சேவையை வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை இல. 04, புளூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் 25.10.2022 தொடக்கம் 15.11.2022ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
4) தகுதி வாய்ந்த பெறுகை தாரர் கறுப்புப்பட்டியலில் இடப்பட்ட ஓர் சேவை வழங்குநராக இருத்தல் ஆகாது
5) பெறுகை ஆவணங்கள் 16.11.2022ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக் குழு, மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், இல . 04, புளூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ, அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6) பெறுகை ஆவணங்களுடன் ரூபா 150,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
7) கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**திருமதி ரூபினி வரதலிங்கம்,**
**தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக் குழு,**
**மகளிர் விவகார அமைச்சு வடக்கு மாகாணம்,**
**04. புளூடிலேன், அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**திகதி: 2022.10.25**

## கொட்டபொல பிரதேச சபை

# 2023 ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் பதிவு செய்தல்

2023 ஆம் வருடத்திற்குள் கீழே அட்டவணையில் குறித்த வழங்கள்கல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு விருப்பம் கொண்ட வழங்குநர்களை பதிவு செய்வதற்காக கீழ் குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அனைத்து விண்ணப்பப் படிவங்களும் தாம் பதிவு செய்ய எதிர்பார்க்கும் ஒவ்வொரு விடயத்துக்கும் உரிய பதிவுக் கட்டணத்துடன் செயலாளர், கொட்ட பொல பிரதேச சபை தெனியாய என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2022.11.30 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2023" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
2. அனைத்து காசோலைகளும் செயலாளர் , கொட்டபொல பிரதேச சபை தெனியாய என்றும் மற்றும் காசுக் கட்டளைகளை செயலாளர் பிரதேச சபை கொட்டபொல - தெனியாய எனவும் - குறித்தல் வேண்டும்.
3. அனைத்து வழங்குநர்களும் இங்கு தரப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைய விண்ணபிக்க வேண்டியதோடு, தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையின் படப் பிரதி ஒன்றையும், தகுதி மற்றும் திறமை தொடர்பான சான்றிதழ், போன்றவற்றை பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முன் வைத்தல் வேண்டும்.
4. பதிவு செய்யப்பட்ட வழங்குநர் பட்டியலிலிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு உரிய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள செயற்படுவதோடு, தேவைகளுக்கு ஏற்ப இதற்கு வெளி இடங்களிலிருந்தும் விலைமனுக்கல் கோரப்பட்டு சேவைகளை பெற்றுக் கொள்ளும் உரிமை சபைக்கு உரியதாகும்.
5. அனைத்து வழங்குநர் மற்றும் சேவைகளின் விலைமனுக்கல் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.
6. வழங்கும் பொருட்கள் வேண்டப்படும் போது, குறித்த திகதிக்கு விலைமனுக்களை அறிவித்து தேவையான திகதிக்கு தேவையான அளவில் உரிய தரத்தில் வழங்க வேண்டிய தோடு, அவ்வாறு நிறைவேற்றப்படாத வழங்குநர்களை ஒதுக்கப்பட்ட அட்டவணைக்கு உட்படுத்தப்படும்.
7. பதிவு செய்யப்பட்டதன் பின் வழங்குநர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்படும்.
8. மேலதிக விபரங்களுக்காக (041 - 2273275 எனும் இலக்கத்திற்கு அலுவலக நேரத்தில் கதைப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வழங்கல்களின் தன்மை | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | அலுவலக காகிதாதிகள் அனைத்தும் | 200.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் (அலுவலக மேசை , கதிரை, கோவைப், கபினட் மரட் பொருட்கள் ஆகியன | 200.00 |
| 03 | கணனி, படப்பிரதி இயந்திரம், பிரின்டர், பெக்ஸ் இயந்திரம், விரல் பதிவு இயந்திரம், டுப்லோ இயந்திரம். டுப்லோ பூச்சி, அனைத்து வகையிலான டோனர் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், மற்றும் மேலதிக பொருட்கள் | 200.00 |
| 04 | வீதி விளக்குகள், உபகரணங்கள் - அலுவலக உபகரணங்கள் ஆகியன. | 200.00 |
| 05 | விளையாட்டுப் பொருட்கள் | 200.00 |
| 06 | சீருடைகள், திரைப்புடவை, மேசைப் புடவை , பாதணிகள் மேஸ், கைப்பை, உத்தியோக இலச்சினை | 200.00 |
| 07 | அமைப்பு இயந்திர உபகரணங்கள் (கொங்கிறிட், கலப்பு இயந்திரம்) | 200.00 |
| 08 | அமைப்புப் பொருட்கள் (சீமெந்து, கருங்கற்கள், மணல், செங்கல், தகடுகள், தார், கூழாம் கற்கள், பூச்சி, ஹியூம் பைப் . GI.பட இரும்பு) ஆகியன | 200.00 |
| 09 | வாகன மேலதிக உதிரிப்பாகங்கள் (டயர் டியுப், பெரி, ஒயில் வகைகள், ஏனைய மேலதிக பொருட்கள் மீற்றர். | 200.00 |
| 10 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவை தொடர்பான பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, பிரஸ், சவர்க்காரம், கைமேஸ், கிருமிநாசினி மழைக் கம்பலம், ஒட்டுவகை, பூட்ஸ், முகம் மூடி | 200.00 |
| 11 | வாசிகசாலைப் புத்தகங்கள் | 200.00 |
| 12 | நினைவுச் சின்னங்கள் - | 200.00 |
| 13 | பீவீஸீ நீர்க்குழாய் மற்றும் உதிரிப்பாகங்கள் | 200.00 |
| 14 | வீதி நடத்துதல் மற்றும் உதிரிப்பாகங்கள் ( மண்வெட்டி,சவல். ரேக்க, மண்ண, கத்தி அளவை நாடா) ஆகியன. | 200.00 |
| 15 | ஆயுர்வேத மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள், தடுப்பு ஊசிகள், சிலின்ஜர், நோயாளர் நாடித் துடிப்பு கணிக்கும் அளவை உபகரணம், நீரிழிவு நோய் கணிப்பு உபகரணம் | 200.00 |
| 16 | தீ அனைப்பு பாதுகாப்பு பாகங்கள் உபகரணங்கள் | 200.00 |
| 17 | நீர் மீற்றர் | 200.00 |
| 18 | அனைத்து வகையிலான கொங்கிறீட் உற்பத்தி (ஹியூம், நாடா, கம்பி தூண்கள் , புலொக் கற்கள். நிலத்திற்கு பிடிக்கும் கற்கள்,) | 200.00 |
| 19 | குளோரின் | 200.00 |
| 20 | கனிப் பொருட்கள் மற்றும் உராய்வு நீக்கிகள் (மோட்டார் வாகனங்களுக்கு தேவையான) | 200.00 |
| 21 | பூங்கா அலங்கரிப்பு செய்வதற்கு தேவையான கொங்கிறீட் உற்பத்தி | 200.00 |
| 22 | தகன அறைக்கு தேவையான இயந்திர உபகரணங்கள் வழங்கள் | 200.00 |
| 23 | கழிவு அகற்றல் கருத்திட்டத்திற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் வழங்கல் | 200.00 |
| **சேவைகள்** | | |
| 24 | வாகனம் இயந்திர உபகரணங்கள் குத்தகைக்குவிடல். (வான், பஸ்வண்டி, டிப்பர் இயந்திரம், ஜே.ஸீ.பி இயந்திரம் வீதி தகர்ப்பு, கலி பவுசர், தொபகர) | 200.00 |
| 25 | அச்சு வேலை, (புத்தகங்கள் சஞ்சிகை, பற்றுச் சீட்டு விண்ணப்பங்கள் போஸ்டர்) அலுவலக அடையாள அட்டை. | 200.00 |
| 26 | நில அளவையாளர், சட்டத்தரணி, மற்றும் உபதேசன சேவை | 200.00 |
| 27 | சிங்களம், ஆங்கிலம், மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு, | 200.00 |
| 28 | டுப்லோ, ரோனியோ, படப் பிரதி இயந்திரம், மற்றும் லெமினேடிங் சேவை | 200.00 |
| 29 | அலுவலக உபகரணங்கள், பழுதுபார்த்தல்கள், (விரல் அச்சு இயந்திரம், டுப்லோ இயந்திரம் | 200.00 |
| 30 | இணையதளம் அமைத்தல் கணனி இணையதளம் கணனி மிருதுவாங்கு, | 200.00 |
| 31 | பாதுகாப்பு நிழல் படத் தொகுதி அமைத்தல். | 200.00 |
| 32 | பூந்தோட்டம், மற்றும் விளையாட்டு தோட்ட உபகரணங்கள் பழுதுபார்த்தல். | 200.00 |
| 33 | உருக்கு வேலைத்தளம், பூச்சிப் பூசுதல், நீர்க் குழாய், தச்சுச் சேவை தொழில்நுட்ப சேவை, உள்ளக தொலைபேசிச் சேவை, | 200.00 |
| 34 | வாகன பழுதுபார்த்தல்கள், உருக்கு வேலைத்தளம், வாகன சேவைகள் (சர்விஸ் வழங்கல்) | 200.00 |
| 35 | உத்தியோக முத்திரை, தின முத்திரை தயாரித்தல் | 200.00 |
| 36 | போக்குவரத்து வழங்கல் , ஆசனம் 16 ஐக் கொண்ட, குளிரூட்டப்பட்ட வாகனம் மற்றும் குளிரூட்டப்படாத வாகனம். | 200.00 |
| 37 | டிஜிட்டல் அறிவித்தல் அச்சு, மற்றும் பொருத்தல்கள் (மும் மொழிகள்) | 200.00 |
| 38 | பாவிக்கப்பட்ட டயர் மீண்டும் நிரப்புதல் | 200.00 |

**ஏ. பீ. தயாநந்த,**
**தலைவர்,**
**கொட்டபொல பிரதேச சபை,**

திகதி: 2022 ஒக்டோபர் மாதம் 18ம் திகதி,
**கொட்டபொல பிரதேச சபை,**
**அலுவலகத்தில்**

**கொட்டபொல பிரதேச சபை**

**2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் பதிவு செய்தல்**

01. விண்ணப்பதாரியின்/ நிருவனத்தின் பெயர்:-
.............................................................................
02. விண்ணப்பதாரியின்/ நிருவனத்தின் விலாசம்:-
.............................................................................
03. வழங்கல்கள்/சேவைகளின் தன்மையும் மற்றும் தொடர் இலக்கம்:-
.............................................................................
04. தொலைபேசி/பெக்ஸ் இலக்கம் மற்றும் மின் அஞ்சல் முகவரி:-
.............................................................................
05. வியாபாரத்தை பதிவு செய்த திகதி மற்றும் இலக்கம்:-
.............................................................................
06. வெட் பதிவு செய்யப்பட்ட இலக்கம்:-
.............................................................................
07. செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் காசோலை/காசுக் கட்டளை இலக்கம்:-
.............................................................................

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

.......................................... ..........................................
திகதி **ஒப்பம்**
**முத்திரை**



# இலங்கை - ஆஸி. பலப்பரீட்சை இன்று

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான சுப்பர் 12 சுற்றுப் போட்டி இன்று (25) பேர்த், ஒப்டஸ் அரங்கில் நடைபெறவுள்ளது.

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்ற அதே உத்வேகத்தை தக்கவைக்கும் எதிர்பார்ப்போடு இலங்கை இன்று களமிறங்கவிருப்பதோடு நியூசிலாந்திடம் படுதோல்வி அடைந்த நிலையில் ஒரு தீர்க்கமான வெற்றியை எதிர்பார்த்து ஆஸி. அணி களமிறங்குகிறது.

இலங்கை அணி உபாதைகளுக்கு மத்தியிலேயே சுப்பர் 12 சுற்றில் ஆடி வருவதோடு சிறு காயத்திற்கு உள்ளாகி இருக்கும் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க இன்றைய போட்டியில் களமிறங்குவது சந்தேகத்திற்கு உரியாதாகும். எனினும் அயர்லாந்துடனான போட்டியில் குசல் மெண்டிஸ் மற்றும் தனஞ்சிய டி சில்வா ஆரம்ப வீரர்களாக வந்து சிறப்பாக செயற்பட்ட நிலையில் அந்தப் போக்கு இன்றைய போட்டியிலும் தொடர வாய்ப்பு உள்ளது.

வேகப்பந்து வரிசையில் பினுர பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார ஆஸிக்கு எதிராகவும் களமிறக்கப்பட வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்த ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன முக்கியமானவர்களாக உள்ளனர்.

போட்டியை நடத்தும் அணி மற்றும் நடப்புச் சம்பியன் என்ற வகையில் அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு பெரும் சவாலான அணியாகவே உள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆஸி. பலமான அணியாகக் களமிறங்கியபோதும் நியூசிலாந்து அதனை விஞ்சும் வகையில் ஆடி இருந்தது. அதே போக்கை இலங்கை பின்பற்றினால் நடப்புச் சம்பியனை திணறடிக்க முடியும்.

போட்டி நடைபெறும் பேர்த் அரங்கு பொதுவாக துடுப்பாட்டத்திற்கு சாதகமானது. எனவே அதிக ஓட்டங்களை பெற துடுப்பாட்ட வீரர்கள் முயல்வார்கள். பந்து வேகமாக மேலெழும் சூழலில் வேகப்பந்து வீச்சாளர்களும் இங்கு ஆதிக்கம் செலுத்த முடியும். ஆஸி. வேகப்பந்து வரிசை வலுவாக இருக்கும் சூழலில் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் சற்று கவனமாகவே ஆட வேண்டும்.

இங்கு இன்னிங்ஸ் ஒன்றின் சராசரி ஓட்டங்கள் 162 ஆக இருக்கும் நிலையில் அதனைத் தாண்டிய இலக்கு ஒன்று நிர்ணயிக்கப்படும் நிலையில் துரத்தி ஆடும் அணிக்கு சவாலாக இருக்கும். இன்று சுப்பர் 12 சுற்றின் ஒரே ஒரு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் இன்று மாலை 4.30க்கு ஆரம்பமாகும்.




## பதுர் பூம் போய்ஸ் சம்பியம்

ஒலுவில் கிழக்கு, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்



அட்டாளைச்சேனை ஆலம்குளம் அல்–அக்சா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பதுர் பூம் போய்ஸ் அணியினர் வெற்றி பெற்றனர்.

ஆலம்குளம் றஹ்மானியா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) மாலை நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் அல் அக்சா கழகத்தையே பதுர் பூம் போய்ஸ் அணி தோற்கடித்தது.

இறுதிப் போட்டியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அட்டாளைச்சேனை அமைப்பாளர் தொழிலதிபர் ஏ.கே. அமீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகத்திற்கு கிண்ணம் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணப்பரிசும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கி வைத்தார்.



ஹம்பாந்தோட்டை தென் மாகாண மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை மென்பந்து கிரிக்கெட் அணியினரை படத்தில் காணலாம்.
(படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

## தென்னாபிரிக்க அணியின் வெற்றியை பறித்தது மழை

சிம்பாப்வேயுக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றியை நெருங்கிய நிலையில் மழை குறுக்கிட்டதால் போட்டி முடிவின்றி கைவிடப்பட்டது.

ஹோர்பார்டில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டி மழை காரணமாக தாமதமாக ஆரம்பித்த நிலையில் அணிக்கு 9 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக மாறியது. இதன்போது தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு 24 பந்துகளில் 13 ஓட்டங்களையே பெற வேண்டி இருந்தபோது மழை கடுமையாகப் பெய்ததால் போட்டியை தொடர முடியாமல்போனது.

இதனால் இரு அணிகளும் தலா ஒரு புள்ளிகளை பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று.

மழையால் இரண்டரை மணி நேரம் தாமதித்து ஆரம்பமான போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயித்த 9 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 79 ஓட்டங்களையே பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த தென்னாபிரிக்க அணி மழை பெய்யும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அதிரடியாக ஆட ஆரம்பித்தது. குறிப்பாக குவன்டன் டி கொக் முதல் ஓவரில் அடுத்தடுத்து நான்கு பௌண்டரிகள் ஒரு சிக்ஸரை விளாசினார்.

இரண்டாவது ஓவரில் மீண்டும் மழை குறுக்கிட்டதால் வெற்றி இலக்கு ஏழு ஓவர்களில் 64 ஓட்டங்கள் என மாற்றப்பட்டது. தொடர்ந்து ஆரம்பமான போட்டியில் டி கொக் பந்துகளை விளாசினார். எனினும் தென்னாபிரிக்க அணி 3 ஓவர்களில் 51 ஓட்டங்களை பெற்ற நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டது.

டி கொக் 18 பந்துகளில் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களை பெற்றார்.



## நெதர்லாந்தை வீழ்த்தியது பங்களாதேஷ்

நெதர்லாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றின் தனது முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி 9 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஹோபார்ட்டில் நேற்று (24) நடைபெற்ற இந்தப் போட்டியில் 145 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய நெதர்லாந்து அணி தஸ்கின் அஹமட் வீசிய முதல் இரு பந்துகளுக்குமே இரு விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

தொடர்ந்து நான்காவது ஓவரில் அடுத்தடுத்து ரன் அவுட்களாக நெதர்லாந்து 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. தனித்து போராடிய கொலின் அக்கர்மனர் 48 பந்துகளில் 62 ஓட்டங்களை பெற்றபோதும் நெதர்லாந்து 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.



சிறப்பாக பந்துவீசிய தக்சின் 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி விக்கெட் இழப்பின்றி 45 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும் 76 ஓட்டங்களை பெறுவதற்குள் 5 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

அபிப் ஹொஸைன் 27 பந்துகளில் 38 ஓட்டங்களை பெற்றதோடு கடைசி நேரத்தில் மொசதக் ஹொஸை 12 பந்துகளில் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களை பெற்றதன் மூலம் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களை பெற்றது.

2007இல் டி20 உலகக் கிண்ணம் ஆரம்பமானது தொடக்கம் பங்களாதேஷ் அணி பிரதான சுற்றில் வெற்றி பெறுவது இதுவே முதல் முறையாகும்.

## விசித்திர தொப்பி அணிந்து பரீட்சை எழுதிய மாணவர்



பரீட்சையில் மற்றவர்களை பார்த்து எழுதும் மோசடி வேலையை தவிர்ப்பதற்கு பிலிப்பைன்ஸ் மாணவர்கள் பரீட்சையில் அணிந்திருக்கும் விசித்திரமான தொப்பிகள் சமூக ஊடகத்தில் பிரபலமடைந்துள்ளது.

லாகாஸ்பி நகரில் இருக்கும் கல்லூரி ஒன்றே பரீட்சைக்கு மாணவர்களுக்கு மற்றவர்களை பார்க்க முடியாதவாறு தொப்பி அணிந்து வரும்படி அறிவுறுத்தியுள்ளது.

இதற்கு பல மாணவகர்களும் அட்டைப்பெட்டி, முட்டைகள் வைக்கும் பெட்டி மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு வீட்டில் தயாரிக்கப்பட்ட தொப்பிகளை அணிந்து பரீட்சைக்கு வந்துள்ளனர்.

இந்தத் திட்டம் வெற்றி அளித்திருப்பதாக அந்தக் கல்லூரியின் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## கராச்சியில் சீனர் சுட்டுக் கொலை

பாகிஸ்தானின் கராச்சி நகரில் சீன நாட்டவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

சீன–பாகிஸ்தான் பொருளாதார வழித்தட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பாகிஸ்தானிலுள்ள சீனப் பிரஜைகள் இவ்வாறான தாக்குதல்களுக்கு உள்ளாவதாக 'ஏசியன் லைட்' சுட்டிக்காட்டியுள்ளது.

சிந்து, பலுசிஸ்தான், கைபர் பக்துன்க்வா ஆகிய மாகாணங்களிலும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியிலும் சீனப் பிரஜைகள் மீது ஆயுதக் குழுக்கள் ஏற்கனவே தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

சீன–பாகிஸ்தான் பொருளாதார வழித்தட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் சீனப் பிரஜைகளையும் அவர்களது நலன்களையும் இலக்கு வைத்து இதுவரையும் பத்து தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.



## சுனக் பிரிட்டன் பிரதமராக வாய்ப்பு

பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமை போட்டியில் இருந்து முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் விலகிய நிலையில் முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக் அடுத்த பிரதமராக தேர்வாகும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பிரிட்டன் பிரதமர் பதவியில் இருந்து லிஸ் டிரஸ் 45 நாட்களில் இராஜானாமா செய்ததை அடுத்து அடுத்த பிரதமர் பதவிக்கான போட்டிக்கு தேவையான 100 எம்.பிக்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் ஜோன்சன் ஈடுபட்டார்.

தாம் 102 எம்.பிக்களின் ஆதரவை பெற்றபோதும் தேசிய நலன் தொடர்பில் சுனக் மற்றும் மற்றைய போட்டியாளரான பென்னி மோர்டோன்டின் இணக்கத்தை பெற தவறியதாக ஜோன்சன் கடந்த ஞாயிறன்று கூறியிருந்தார்.

இதில் போதிய ஆதரவு இருந்தபோதும் போட்டியில் பங்கெடுப்பது சரியான செயல் அல்ல என்பதால் விலகும் முடிவை எடுத்ததாக ஜோன்சன் குறிப்பிட்டார்.

எனினும் பொரிஸ் ஜோன்சனுக்கு 60க்கும் குறைவான எம்.பிக்களே வெளிப்படையாக ஆதரவை வெளியிட்டுள்ளனர். இது சுனக்கிற்கு ஆதரவு அளித்திருக்கும் சுமார் 150 எம்.பிக்களில் பாதி எண்ணிக்கையாகும்.

அடுத்த நிலையில் பென்னி மோர்டோன்ட் உள்ளார். அவர், ஜோன்சனின் ஆதரவாளர்களைத் தம் பக்கம் ஈர்க்கும் முயற்சியில் ஈடுபடக்கூடும் என்று அரசியல் கவனிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் ஒருவர் மாத்திரம் 100 கன்சர்வேட்டிவ் எம்.பிக்களின் ஆதரவை பெற்றால் அவர் அடுத்த பிரிட்டன் பிரதமராக அறிவிக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. இருவர் அந்த இலக்கை எட்டும் பட்சத்தில் வரும் வெள்ளிக்கிழமையே (28) அடுத்த பிரதமர் தேர்வு செய்யப்படுவார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 42 வயதான சுனக் இதற்கு முன்னர் பிரதமர் பதவிக்கான போட்டியில் லிஸ் டிரஸ்ஸிடம் தோல்வி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சல்மான் ருஷ்டியின் ஒரு கண் பார்வை இழப்பு



நியூயோர்க் நகரில் கடந்த ஓகஸ்ட் மாதம் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கான எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் ஒரு கண்ணில் பார்வை இழந்திருப்பதோடு கை ஒன்றும் செயலிழந்துள்ளதாக அவரது முகவர் அன்ட்ரூ வெய்லி தெரிவித்துள்ளார். அவரது மார்புப் பகுதியில் சுமார் 15 காயங்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத நிந்தனையில் ஈடுபட்டவர் என்று சில முஸ்லிம்கள் கருதும் சல்மான் ருஷ்டி, தனது 1988 ஆம் ஆண்டு நாவலுக்காக நீண்ட காலமாக உயிர் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்து வந்தவராவார்.

இந்நிலையில் பெயிஸ் பத்திரிகைக்கு பேட்டியளித்த வெய்லி கூறியதாவது, "அவர் ஒரு கண்ணின் பார்வையை இழந்துள்ளார். கழுத்தில் மூன்று மோசமான காயங்களுக்கு உட்பட்டுள்ளார். கை நரம்புகள் வெட்டப்பட்டதால் ஒரு கை செயலிழந்துள்ளது" என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கல்வி அமைச்சு

## தேசிய பயிலுநர்கள் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2023 ஆம் வருடம்

தேசிய பயிலுநர்கள் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பிரதான அலுவலகம் மற்றும் தேசிய நிறுவனங்களுக்கு 2023ஆம் வருடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் 10 மில்லியனுக்குக் குறைவான பொருட்கள், சேவைகள், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அதிகார சபையில் பதிவுசெய்து கொள்வதற்கு விரும்பும் உற்பத்தியாளர்கள் / முகவர்கள் / ஒப்பந்தக்காரர்கள் / திருத்தவேலைகளைச் செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தலைமை அலுவலகம் – ராஜகிரிய

**வழங்கல்:**

1. கணனிகள், மடிக்கணனிகள், கணனி பிரிண்டர்கள், ஸ்கேனர் சேர்வர்கள், Firewall மற்றும் உதிரிப்பாகங்கள்.
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள். புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் போன்றவை)
3. அலுவலக தளபாடங்கள். (உருக்கு மற்றும் மரம்)
4. குளிர்சாதனப் பெட்டியின் உதிரிப்பாகங்கள் உட்பட அனைத்து வகையான குளிரூட்டிகள் மற்றும் துணைப்பாகங்கள்.
5. மின்சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
6. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
7. பொறியியல் நீர் எடையிடும் கருவிகள்.
8. தொலைபேசி முறைமைகள் தொலைபேசிகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள்.
9. கட்புல, செவிப்புல உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள், பொது அழைப்பு உபகரணங்கள்
10. மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள்.
11. தீயணைக்கும் கருவிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள், காலணிகள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள்.
12. ஜெனரேட்டர்கள் மற்றும் மோட்டார்கள் வகைகள்.
13. கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள், டயர், டியூப் மற்றும் பேட்டரிகள்.
14. நூலகப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள் மற்றும் ஏனைய சஞ்சிகைகள்
15. அலுவலக காகிதாதிகள்
16. கணினி காகிதாதிகள்
17. அனைத்து வகையான உலோகப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் சாதனங்கள்.
18. கட்டிட பொருட்கள் மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள்.
19. அரிந்த மரம், மெல்லிய பலகைகள் மற்றும் கெம்பஸ் மர வகைகள்
20. சீருடைத் துணி வகைகள், கதவு ஜன்னல் திரைச்சீலைகள்.
21. இரும்பு பட்டம், தகடு மற்றும் இரும்பு/ பித்தளை/ உருக்குக் கம்பிகள்
22. ரப்பர், பொலிமர், திகதி முத்திரைகள் மற்றும் ஏனைய முத்திரைகள்.
23. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள். (மோட்டார் தொழில்)
24. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள். (தாதியர் மற்றும் முதியோர் சேவைகள்)
25. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள். (ஹோட்டல் துறை)
26. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வகங்கள். உபகரணங்கள். (அழகு மற்றும் சிகையலங்கார தொழில்)
27. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வகங்கள். உபகரணங்கள். (மின்சாரம், மின் இயந்திரவியல் மற்றும் தொலைத்தொடர்பு துறைகள்)
28. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள். (சூரிய சக்தி துறை)
29. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் (உருக்கியொட்டும் துறை)
30. பயிற்சி உபகரணங்கள், பொருட்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள். (குளிர்சாதனம் மற்றும் வளிச்சீராக்கல் துறை)
31. தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒருங்கிணைப்பு கருவிகள் / உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள்.
32. பாதணிகள் மற்றும் பைகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள்.
33. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரிவாயு மற்றும் எரிவாயு சிலிண்டர் வகைகள்.
34. கணனி மென்பொருள். (கணக்கியல், ஊதியச் செயலாக்கம், கையிருப்புக் கட்டுப்பாடு மற்றும் கணனி பாதுகாப்பு மென்பொருள் போன்றவை)
35. கணனி வலையமைப்பு மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள்.
36. கணினிகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்களை பழுதுபார்ப்பதற்கான உபகரணங்கள் மற்றும் பொருட்கள்.
37. பாதுகாப்பு கேமரா முறைமைகள்.
38. சவர்க்காரம் மற்றும் ஏனைய சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்.

**சேவைகள்**

1. கட்டிட நிர்மாணப் பராமரிப்பு - தேசிய நிறுவனங்கள் உட்பட. (CIDA பதிவு ஒப்பந்ததாரர்கள்)
2. அலுமினியம் சார்ந்த பொருத்துதல்கள்
3. பாதுகாப்பு சேவைகள் - மாவட்ட அலுவலகங்கள் உட்பட தேசிய நிறுவனங்கள்.
4. சுத்திகரிப்பு சேவைகள் (ஆய்வகம் மற்றும் தொழிற்சாலை கழிவுகளை அகற்றுவது உட்பட)- தேசிய நிறுவனங்கள் உட்பட
5. கணனிகள், கணனி அச்சுப்பொறிகளின் சேர்விஸ், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு.
6. போக்குவரத்து சேவைகள்.
7. மோட்டார் வாகன பழுதுபார்ப்புகள், தகர வேலை மற்றும் நிறப்பூச்சு பூசுதல்
8. மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
9. மோட்டார் வாகன சேர்விஸ்
10. மோட்டார் வாகன வளிச்சீராக்கிகளின் பழுதுபார்ப்புகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
11. வாகன மின் பழுதுபார்ப்பு வேலை.
12. குஷன் வேலை மற்றும் அப்ஹோல்ஸ்டரி வேலை.
13. வாகன சக்கரங்களின் சமநிலை மற்றும் சீரமைப்பு.
14. மருத்துவ ஆய்வக சேவைகள்.
15. குளிரூட்டிகளின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவை.
16. புகைப்பட பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்களின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ்.
17. விளம்பரங்கள், பெயர் பலகைகள், பதாகைகள் மற்றும் கலைப்படைப்புகள், கண்காட்சி அரங்குகளை வடிவமைத்து நிறுவுதல்.
18. தொலைபேசி முறைமைகளின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
19. அச்சிடும் பணிகள்.
20. மின் உபகரணங்களின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ்
21. இயந்திரங்களின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ். (கடைசல், மரவேலை இயந்திரங்கள் போன்றவை)
22. நீர் குழாய்கள், வெளியேற்ற குழாய்கள் தொடர்பான குழாய் வேலை.
23. உருக்கியொட்டும் வேலை மற்றும் இரும்பு வேலை.
24. பூச்சி கட்டுப்பாடு வேலைகள்
25. கூரியர் சேவைகள்.
26. மொழிபெயர்ப்பு சேவைகள்.
27. அனைத்து வகையான அலுவலக திரைச்சீலைகள், தரைவிரிப்புகளைத் தைத்தல், வழங்குதல் மற்றும் பொருத்துதல்
28. மலம் அகற்றுதல். (Gully Service)
29. மரக் கிளைகளை வெட்டி அகற்றுதல் மற்றும் தோட்டங்களைச் சுத்தம் செய்தல்
30. உணவு வழங்கல் மற்றும் சிற்றுண்டிச்சாலையைக் கொண்டு நடாத்துதல்.

**பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கிளை மற்றும் கணக்கிலக்கம்:**

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,**
**17400170347379**
**மக்கள் வங்கி, நுகேகொடை.**

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

**தலைவர்,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கட, இராஜகிரிய.**

### கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் – மொரட்டுவ

**வழங்கல்:**

01. ஆய்வக உபகரணங்கள். (மின்சாரம், இலத்திரனியல், மெகாட்ரானிக்ஸ், சிவில் மற்றும் இயந்திரவியல்)
02. அனைத்து வகையான உலோகப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் சாதனங்கள், இரும்புப் பட்ட வகைகள் மற்றும் இரும்பு/பித்தளை/உருக்குக் கம்பி, அலுமினிய உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
03. கட்புல, செவிப்புல உபகரணங்கள்.
04. பொறியியல் கருவிகள், எடையிடும் கருவிகள். (மின்சாரம் மற்றும் இலத்திரனியல், சிவில் மற்றும் இயந்திரவியல்)
05. அறுக்கப்பட்ட மரம், மெல்லிய பலகைகள் மற்றும் அனைத்து வகையான இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள்.
06. மின்சார உபகரணங்கள், துணைப்பாகங்கள், மின் வயரிங் மற்றும் உதிரிப்பாகங்கள். (அலுவலகம் மற்றும் தொழில்துறை)
07. மின்சார உபகரணங்கள், துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள். (அலுவலகம் மற்றும் தொழில்துறை)
08. அச்சு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்.
09. பட்டறை இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள். (Lathe, CNC, Milling EDM, Welding, Woodworking etc.)
10. நிர்மாணப் பொருட்கள்.
11. அனைத்து வகையான நிறப்பூச்சுகள் மற்றும் சார்புடைய பொருட்கள்.
12. அலுவலக தளபாடங்கள். (உருக்கு மற்றும் மரம்)
13. அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள். (புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், அச்சுப்பொறிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள்)
14. கணனி இயந்திரங்கள், கணனி அச்சுப்பொறிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
15. வளிச்சீராக்கி இயந்திரங்கள்
16. தொலைபேசி முறைமைகள், தொலைபேசிகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள்.
17. அலுவலக காகிதாதிகள்
18. கணனி காகிதாதிகள்
19. அச்சிடும் காகித வகைகள்.
20. அச்சிடும் மை உட்பட அச்சிடுவதற்கு தேவையான அனைத்து பொருட்களும். (விசேடமாக ஹைடில்பர்க் ஸ்பீட் மாஸ்டர் கோட் இயந்திரத்திற்குத் தேவையான பளேட், ரோலர் வொஷ் மற்றும் அல்கஹோல் போன்றன)
21. சீருடைத் துணிகள், கதவு மற்றும் ஜன்னல் திரைச்சீலைகள், கொட்டன் ட-ஷேர்ட்கள்.
22. பிரி∴ப் கேஸ்கள், காலணிகள் மற்றும் ஏனைய தோற் பொருட்கள்.
23. நூலகப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள் மற்றும் ஏனைய சஞ்சிகைகள்
24. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள், டயர், டியூப் மற்றும் பெட்டறிகளுக்கான உதிரிப்பாகங்கள்.
25. தீயணைக்கும் கருவிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள், காலணிகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள்.
26. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரிவாயு மற்றும் எரிவாயு சிலிண்டர் வகைகள்.

**சேவைகள்**

01. Lathe, CNC, Milling EDM, Welding, Woodworking இயந்திரங்கள் மற்றும் ஏனைய அனைத்து வகையான மின் சாதனங்களின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்ப்புகள்.
01. கணனிகள், கணனி அச்சுப்பொறிகளின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு.
02. அச்சுப்பொறிகளின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்ப்புகள் (ஓ∴ப்செட் இயந்திரங்கள், டுப்ளிகேட்டிங் இயந்திரங்கள், பிளேட் மேக்கர்ஸ், பேப்பர் கட்டர்ஸ் உள்ளிட்ட ஏளைய அச்சு இயந்திரங்கள்)
03. ஆய்வக உபகரணங்களின் சேர்விஸ் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள். (மின்சாரம், இலத்திரனியல், மெகாட்ரானிக்ஸ், சிவில் மற்றும் இயந்திரவியல்)
04. எரிவாயு குழாய் முறைமைகளின் சேர்விஸ், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள்.
05. எரிவாயு குழாய் முறைமையை சேர்விஸ் செய்தல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள்
06. அலுமினியம் சார்ந்த பொருத்தல்கள்
07. குளிரூட்டிகளின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ்
08. வளிச்சீராக்கி பழுதுபார்ப்புகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்
09. புகைப்பட நகல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கணனிகள், பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேவை.
10. தொலைபேசி முறைமைகளின் சேவை மற்றும் பழுதுபார்ப்புகள்.
11. அச்சிடும் பணிகள்.
12. குஷன் வேலை மற்றும் அப்ஹோல்ஸ்டரி வேலை.
13. விளம்பரங்கள், விளம்பர பலகைகள், பதாகைகள் மற்றும் கலைப்படைப்புகள்.
14. கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள்

**பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கிளை மற்றும் கணக்கிலக்கம்:**

**தேசிய பயிலுநர் சபை,**
**313-1-001-5-3656984**
**மக்கள் வங்கி, கட்டுபெத்த.**

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**தலைவர்,**
**பணிப்பாளர் / அதிபர்,**
**கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்,**
**இல. 581, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ.**

### பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் – கட்டுநாயக்க

**வழங்கல்:**

01. ஆய்வக உபகரணங்கள் (சிவில், மின்சாரம் மற்றும் இயந்திரவியல்)
02. அலுவலகத் தளபாடங்கள். (உருக்கு மற்றும் மரம்)
03. அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள். (நகல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் போன்றவை)
04. அலுவலக காகிதாதிகள்
05. கணனி காகிதாதிகள்
06. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள், டயர், டியூப் மற்றும் பெட்டறிகள்
07. இரப்பர், இபாலிமர், திகதி முத்திரைகள் மற்றும் ஏனைய முத்திரைகள்.
08. நாரிழைப் பொருட்கள்.
09. இரசாயனங்கள், மருந்துகள் மற்றும் ஏனைய முதலுதவி உபகரணங்கள்
10. கட்புல செவிப்புல உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள், பொது அழைப்பு உபகரணங்கள்.
11. பாதுகாப்பு கெமரா முறைமைகள்
12. தொலைபேசி முறைமைகள், தொலைபேசிகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள்.
13. மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
14. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
15. குளிர்சாதனப் பெட்டிகள், அதிகுளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்கள்
16. கணனி இயந்திரங்கள், கணனி அச்சுப்பொறிகள் மற்றும் உதிரி பாகங்கள்.
17. நூலகப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள் மற்றும் ஏனைய சஞ்சிகைகள்
18. தீயணைப்புக் கருவிகள்.
19. அனைத்து வகையான உலோகப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் சாதனங்கள்.
20. கட்டிட பொருட்கள் மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள்.
21. விளையாட்டு பொருட்கள்.
22. பயிற்சிப் பொருட்கள். (உருக்கு, மரம், சீமெந்து, எரிவாயு மற்றும் எரிபொருள் போன்றவை)
23. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரிவாயு மற்றும் எரிவாயு சிலிண்டர் வகைகள்.
24. கணனி வலையமைப்பு மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள்.

**சேவைகள்**

01. புகைப்படப்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
02. கணனிகள், கணனி அச்சுப்பொறிகளின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
03. குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகளின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ்
04. வீடியோ கமராக்கள், பாதுகாப்பு கமரா முறைமைகள் மற்றும் ஏனைய மின் சாதனங்களின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
05. கணனி வலையமைப்புகளின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
06. பாதுகாப்பு கமரா முறைமைகளின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
07. மோட்டார் வாகன பழுதுப்பார்புகள்
08. மோட்டார் வாகன சேர்விஸ்கள்
09. கட்டிட நிர்மாணம், பராமரிப்பு, நிறப்பூச்சு, வெல்டிங் வேலை மற்றும் இரும்பு கிரில்ஸ்/அலுமினிய பிரேம்களை பொருத்துதல்.
10. உள்ளக மின்சார முறைமைகளின் நிறுவல்கள் மற்றும் வயரிங்
11. தொலைபேசி முறைமைகளின் சேர்விஸ், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
12. ஆய்வக உபகரணங்களின் சேவை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகள் (மின்சாரம், சிவில் மற்றும் இயந்திரவியல்)
13. வீதி மறுசீரமைப்பு மற்றும் தோட்டத்தை அழகுபடுத்துதல், மரக்கிளைகளை வெட்டி அப்புறப்படுத்துதல்
14. அலுவலக நாற்காலிகள் பின்னல்/குஷனிங் மற்றும் மேடை திரைகள் மற்றும் தரைவிரிப்புகளை வழங்குதல்.
15. அலுவலக தளபாடங்களின் (உருக்கு மற்றும் மரம்) பழுதுபார்ப்பு
16. நூலக புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் உள்ளிட்ட புத்தகங்களை கட்டுதல்
17. சலவை சேவைகள்/ அலுவலக ஜன்னல் துணிகளைச் சுத்தம் செய்தல்.
18. பட்டமளிப்பு ஆடைகள், சீருடைகள், தோல் பைகள் மற்றும் துண்டுகள் போன்றவற்றை தைத்தல் மற்றும் வழங்குதல்.
19. வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல். (கார்கள், வேன்கள், லொரிகள், பஸ்கள், முச்சக்கர வண்டிகள் போன்றவை)
20. வாகன வளிச்சீராக்கிகள் பழுதுபார்ப்புகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
21. குஷன் வேலை மற்றும் அப்ஹோல்ஸ்டரி வேலைகள்
22. தொழிலாளர் சேவைகளை வழங்குதல். (தச்சர்கள், மேசன்கள், மின்னியலாளர்கள், குழாய் வேலை செய்வோர் மற்றும் மரக் கிளைகளை வெட்டு சுத்தம் செய்தல்)
23. உள்நாட்டு/வெளிநாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் விநியோகம் (சரக்கு சேவைகள்)
24. அனைத்து வகையான அலுவலக திரைச்சீலைகள், தரைவிரிப்புகளை தைத்தல், வழங்குதல் மற்றும் நிறுவுதல்.
25. சுத்திகரிப்பு வேலைகள்
26. கரையான்கள் மற்றும் ஏனைய பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்.
27. வெளிவாரி பயிற்சித் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் நடத்துதல்.
28. உற்சவப் பொருட்களை வழங்குதல் மற்றும் நிகழ்வுகளின் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
29. உணவு வழங்கல் சேவைகள்

**பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கிளை மற்றும் கணக்கிலக்கம்:**

**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் கட்டுநாயக்க.**
**276-001-2-4535909**
**மக்கள் வங்கி, நுகேகொடை.**

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

**பணிப்பாளர் / அதிபர்,**
**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்,**
**பன்சல வீதி, 18வது மைல் கல், கட்டுநாயக்க.**

### மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த

**வழங்கல்:**

01. மோட்டார் வாகன பழுதுபார்ப்பு தொடர்பான கருவிகள் மற்றும் சோதனை உபகரணங்கள்.
02. அனைத்து வகையான வாகனங்களுக்கும் உதிரிப்பாகங்கள்.
03. வாகனத்திற்கு வர்ணம் பூசுவதற்கு தேவையான நிறப்பூச்சுகள் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள்
04. பொறியியல் கருவிகள், எடை மற்றும் அளவிடும் கருவிகள்.
05. உருக்கியொட்டும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்.
06. இரும்பு பட்ட வகைகள் மற்றும் இரும்பு/பித்தளை/உருக்குக் கம்பி.
07. மின்சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
08. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
09. கணனிகள், மடிக்கணனிகள், கணனி அச்சுப்பொறிகள், ஸ்கேனர் உதிரிப்பாகங்கள்.
10. கணனி மென்பொருள், வலையமைப்பு மற்றும் அது சார்ந்த உபகரணங்கள்.
11. அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள். புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள்)
12. அலுவலக தளபாடங்கள். (உருக்கு மற்றும் மரம்)
13. அனைத்து வகையான வளிச்சீராக்கி இயந்திரங்கள்
14. அலுவலக காகிதாதிகள்
15. கணனி காகிதாதிகள்
16. நூலகப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள் மற்றும் ஏனைய சஞ்சிகைகள்
17. தீயணைக்கும் கருவிகள், பாதுகாப்பு தலைக்கவசங்கள், காலனிகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள்.
18. அனைத்து வகையான உலோகப் பொருட்கள் மற்றும் நீர்க் குழாய் துணைப்பாகங்கள்
19. சீருடைகள், பாதுகாப்பு அங்கிகள் (Overall) கதவு ஜன்னல் திரைச்சீலைகள்.
20. இரப்பர், பொலிமர், திகதி முத்திரைகள் மற்றும் ஏனைய முத்திரைகள்.
21. ஆய்வக உபகரணங்கள். (சிவில், இயந்திரவியல் மற்றும் மின்சாரம்)
22. அச்சிடும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்.
23. கட்டிட பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுகள்.
24. இரசாயனப் பொருட்கள்
25. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் எரிவாயு மற்றும் எரிவாயு சிலிண்டர் வகைகள்.
26. மழை அங்கிகள், குடைகள், காலணிகள் மற்றும் பிற தோற் பொருட்கள்.
27. அச்சுப் பணிகளுக்குத் தேவையான பொருட்கள்.
28. கண்ணாடி மற்றும் மட்பாண்டங்கள்.
29. சவர்க்காரம் மற்றும் ஏனைய சுத்திகரிப்பான்கள், கிருமிநாசினிகள்
30. மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள், டயர், டியூப்கள் பெட்டரிகள்.
31. எரிபொருள் (பெட்ரோல் மற்றும் டீசல்) மற்றும் உராய்வுநீக்கிகள்
32. முதலுதவிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள்.
33. பட்டறை இயந்திரங்கள், லேத் மற்றும் பாகங்கள் (Lathe, CNC, Milling EDM, Welding, Woodworking etc.)

**சேவைகள்**

01. மோட்டார் வாகன சோதனை உபகரணங்களின் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு.
02. ரேடியேட்டர்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்களின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்ப்புகள்
03. மோட்டார் வாகன பழுதுபார்ப்புகள்.
04. மோட்டார் வாகன சேர்விஸ்கள்
05. மோட்டார் வாகன வளிச்சீராக்கிகளை பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
06. குஷன் வேலை மற்றும் அப்ஹோல்ஸ்டரி வேலை
07. வாகன சக்கரங்களை சமநிலைப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல்.
08. கணனிகள், கணனி அச்சுப்பொறிகளின் சேவை, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு.
09. புகைப்பட பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், கால்குலேட்டர்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்.
10. தொலைபேசி முறைமைகளின் சேர்விஸ் மற்றும் பழுதுபார்ப்புகள்
11. மின் உபகரணங்கள் மற்றும் மின் உபகரணங்களின் பழுதுபார்ப்பு மற்றும் சேர்விஸ்
12. வளிச்சீராக்கிகளின் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சேர்விஸ்.
13. போக்குவரத்து சேவைகள்.
14. கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு பணிகள், அச்சிடும் பணிகள்.
15. விளம்பரங்கள், பெயர்ப்பலகைகள், பதாகைகள் மற்றும் கலைப்படைப்புகள்.

**பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கிளை மற்றும் கணக்கிலக்கம்:**

**மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவனம்,**
**07110010320674**
**மக்கள் வங்கி, தெமட்டகொட.**
**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

**பணிப்பாளர் / அதிபர்,**
**மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவனம்,**
**இல. 69/A, பேஸ்லைன் வீதி,**
**வெல்லம்பிட்டிய.**

---

ஒவ்வொரு உருப்படிக்கும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு (04) நிறுவனங்களுக்கு வெவ்வேறான வகையில் பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்துகொள்ளல் வேண்டும். குறித்த பதிவுக் கட்டணத்தை அந்தந்த நிறுவனங்களின் வங்கிக் கணக்கிலகத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

இந்த விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை 2022-11-25ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் குறித்த நிறுவனத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வழங்கல் மற்றும் சேவைகளின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணங்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பதிவுக் கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இந்த அதிகார சபையின் கீழ் 25 மாவட்டங்களினுள்ளும் ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்கள் பேணப்பட்டு வருவதால் அந்த மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது குறித்த பிரதேசங்களின் வழங்குநர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

விலைகளைக் கோரும் வேளையில் தொடர்ச்சியாக விலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும், கட்டளையிடப்பட்ட பொருட்களை உரிய காலத்தில் வழங்கத் தவறும் மற்றும் வழங்கிய விபரக்குறிப்பு / மாதிரிகளின் பிரகாரம் பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் எவ்வித அறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து அகற்றப்படும்.

பொதுவாக பதிவு செய்துகொண்ட வழங்குநர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைகள் கோரப்படும். எவ்வாறாயினும் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி கொள்வனவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு.

முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள், உரிய பதிவுக் கட்டணத்தை வங்கிக்கு வைப்புச் செய்த பற்றுச்சீட்டை இணைத்திராத அல்லது இறுதித் திகதியின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, ராஜகிரிய.**

### வழங்குநரொருவராக / ஒப்பந்தக்காரரொருவராக பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

01. பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் நிறுவனம்:....................
02. வியாபாரப் பெயர்:....................
03. முகவரி: ....................
04. பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் வழங்கல் மற்றும் சேவை தொடர்பான விபரங்கள்:
05. செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் வழங்கல் மற்றும் சேவைகளின் தொடரிலக்கம்:....................
06. உரிமையாளர்/ பங்குதாரரின் பெயர்: ....................
07. தொலைபேசி இலக்கம்: நிலையானது: .................... கைப்பேசி:....................
08. மின்னஞ்சல் முகவரி: ....................
09. தொலைநகல் இலக்கம்:....................
10. வங்கியாளரின் பெயர்: ....................
11. வியாபாரப் பதிவிலக்கம் மற்றும் திகதி:....................
    (வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை இணைக்கவும்)
12. வெட் இலக்கம் (இருக்குமானால்): ....................
13. பிரதான வியாபாரத் துறை (நிறுவனம்/ முகவர்/ உற்பத்தியாளர் / விநியோகஸ்தர்)
14. கடன் வசதிகள் வழங்கக்கூடிய கால எல்லை: ....................

திகதி:.................................... (உரிமையாளர்/ பங்குதாரர்/ பணிப்பாளர்/ முகாமையாளர்)

# 2023ஆம் வருடத்தில் சிலாபம் பிரதேச சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்

1. 2023ஆம் வருடத்தில் இச்சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்வதற்காக ஆர்வமுள்ள தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. 2022.12.15ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விண்ணப்பங்களும், செயலாளர், சிலாபம் பிரதேச சபை, குருநாகல் வீதி, மாதம்பை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பங்களை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், '2023ஆம் வருடத்தில் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்' என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
3. வழங்கல் உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவிற்கான பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
4. ஒப்பந்தக்காரர்கள் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 10,000.00 ரூபாவிற்கான பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
